மாதிரி ஆசாமிதான் சொல்ல முடியும். என்ன நான் சொல்றது சரிதானே?''

அந்த மனிதர் மீசையை நீவிக் கொண்டு கண் சிமிட்டிவிட்டு திரும்பவும் குதிரையில் ஏறிக்கொண்டார். வின்சென்டை பார்த்து சிரித்தபடியே ''புத்திசாலி நீ... உனக்கு அறிவு அதிகம். ஆனா ஞானம் இல்ல... இனிமே உனக்கு ஞானமும் வளர ஆரம்பிக்கும்னு நம்பறேன்'' ன்று புறப்பட்டார்.

குதிரை கண்களை விட்டு மறைந்துவிட்டது.

கேசவன் சிலிர்த்துப் போய் கைகூப்பியிருந்தான். சென்ட்டுக்கு ஒன்றும் புரியவில்லை. தலையை க் கொண்டான். இருவரும் நடந்தார்கள். மழை ம் தூர ஆரம்பித்து காற்றும் வலுத்தது. அந்த காற் ர் கேசவன் வரையில் கருப்பன் தெரிந்தான். ண்ட்டுக்கோ ஒரு தர்மதேவன் தெரிந்தான்!

(முற்றும்)

# நாக வனம்

## 1

பூவுலகில் வனங்கள் இல்லையேல் இந்த உலகம் நீர் அருந்தி உயிர் வாழ்வது அரிதாகி விடும். இப்படிப்பட்ட வனங்களில்தான் அபூர்வ விருட்சங்கள் முதல் விலங்குகள் பறவைகள் வரை பல உயிரினங்கள் உள்ளன. இப்படிப்பட்ட வனங் களில் பதினெட்டு வனங்கள் இம் மண்ணில் குறிப் பிடத்தக்கவை. அவைகளில் 'கொல்லி வனம், வேத வனம், பொதிகை வனம், நந்தன் வனம், நாக வனம்,' ஆகிய ஐந்தும் குறிப்பிடத்தக்கவை. இதில் கொல்லி வனமானது கன்னித் தெய்வங்களின் சக்தி யால் சிறப்புகளை உடையது. இந்த வனத்தின் தெய்வமாக திகழ்பவள் கொல்லிப்பாவை. அடுத்து வரும் வேத வனம்தான் சதுரகிரி வனமாகும். இங்கு நான்கு வேதங்களே நான்கு மலைகளாக உள்ள தாக ஐதீகம். இதன் தெய்வம் சுந்தர மகாலிங்கம் எனப்படும் அந்த ஈசனாவார். பொதிகை வனம் அகத்திய சித்தரால் புகழ்பெற்ற வனமாகும். நந்தன் வனம் எனப்படும் அந்த நாளில் கிருஷ்ணன் விளை யாடிய வனம் எனும் பெருமையோடு பஞ்ச பாண்டவர் கள் வந்து சென்றதாகவும் கருதப்படுகிறது. அடுத்து வருவதுதான் நாகவனம்!

ஜனரஞ்சனி பத்திரிகை அலுவலகம்!

தன் சீட்டில் மும்முரமாய் எழுதிக் கொண்டு இருந் தான் பிரபாகர். இன்டர்காம் கனைத்தது. காதைக் கொடுத் தான். எடிட்டர் கோபால்தாஸ்தான் பேசினார்.

''பிரபாகர் கட்டுரை ரெடியாயிடிச்சா?''

''முடியப் போகுது சார்...''

''பை த பை ஒரு ஹாட் நியூஸ் ஒண்ணு வந்துருக்கு...''

''என்ன சார்?''

''நடிகர் இந்திரஜித் வெளிநாட்டுக்கெல்லாம் போகலை யாம். இங்கதான் இருக்காராம்.''

''நானும் சந்தேகப்பட்டேன் சார். எங்க இருக்காரு ஏதாவது தகவல் தெரிஞ்சதா சார்...''

''நாகவனம் ஃபாரெஸ்ட்ல அவருக்கு ஒரு எஸ்டேட் இருக்கறது தெரியும்தானே?''

''ஆமாம்...''

''அங்கதான் இருக்காராம்..''

''இங்க இருந்துகிட்டே எதுக்கு சார் வெளிநாட்டுக்கு போயிட்டதா பொய் சொல்லணும்.''

''அதுக்கு பின்னால பெரிய மர்மம் இருக்கு பிரபாகர். அதை ஏன் நீங்க கண்டுபிடிக்கக்கூடாது? நமக்கு ஒரு சென்சேஷனல் நியூஸ் கிடைச்ச மாதிரி இருக்கும்.''

''ஷ்யூர் சார்... நான் உடனே நாகவனத்துக்கு போறேன்.''

''பை த பை ஒரு முக்கியமான விஷயம்...''

''என்ன சார்?''

''அங்க பங்களாவை சுற்றி பலமான காவலாம். ஆகையால நீங்க பத்திரிகையாளர் பிரபாகரா உள்ள போக முடியாது.''

''நான் பாத்துக்கறேன் சார்... எந்த விதத்தால உள்ள நுழைய முடியுமோ அந்த விதத்தால உள்ள நுழைஞ்சிட் றேன்.''

''தட்ஸ் குட்... அதேசமயம் ஏதாவது பிரச்னைன்னா உடனே என்னை காண்டாக்ட் பண்ணுங்க.''



''நிச்சயமா சார்...''

''இந்திரஜித்தான் இப்போதைய சூப்பர் ஸ்டார். அவர் கால்ஷீட்டுக்காக நாலு படத் தயாரிப்பாளர்கள் வயித்துல நெருப்பைக் கட்டிகிட்டு காத்துகிட்டு இருக்காங்க. அறுபது கோடி ரூபா ஃபீல்டுல முடங்கியிருக்கு. ஆளும் கட்சியும் அவர் எங்க அரசியல்ல இறங்கி போட்டிக்கு வந்துடுவா ரோன்னு பயந்துகிட்டிருக்கு. இப்படி ஒரு நிலைல மூணு மாசமா ஒரு நடிகர் வெளிநாட்டுல இருக்கறதா ஊர் உலகத்தை நம்ப வெச்சுட்டு ஆனா தன் எஸ்டேட்டுக்குள் ளேயே முடங்கியிருக்கார்னா அதுக்கு பின்னால பெரிய அளவுல ஏதோ மர்மம் இருக்குன்னுதானே அர்த்தம்...?''

- ஆசிரியர் கோபால்தாஸ் சுருக்கமாய் இந்திரஜித்தின் முக்கியத்துவம் குறித்து பேசியது பிரபாகரின் முகத்தில் பெரும் சிந்தனையாக எதிரொலித்தது.

''சார்...''

''என்ன பிரபாகர்?''

''அவர் அங்க தான் இருக்கார்னு உங்களுக்கு யார் சார் தகவல் தந்தது?''

''என் சீட்டுக்கு வாங்க... மிச்சத்த நேர்ல சொல்றேன்.''

- பிரபாகரும் இன்டர்காம் ரிசீவரை வைத்துவிட்டு எடிட்டரின் அறை நோக்கி நடந்தான்.

வழியில் உதவி ஆசிரியர்களின் கேபின்கள். லே அவுட் ஆர்ட்டிஸ்ட்டின் பெரிய டேபிள், கம்ப்யூட்டர் மானிட்டர், பொதுவாக ஒரு எல்சிடி டி.வி. என்று பல காட்சிகள். மெல்லிய ஏ.சி. குளிர் வேறு...

எடிட்டர் அறைக்குள் அவருக்கு மிக பிடித்த ஜவ்வாது வாசம். மற்றபடி அவர் அறை காரல் மார்க்ஸ், லெனின், ஜீவா என்கிற கம்யூனிச தலைவர்களின் படங்களோடு அவனை வரவேற்றது.

டேபிள் மிக சுத்தமாக இருந்தது. அவருக்கும் சுத்தம் மிகப் பிடிக்கும். எதிரில் யாரும் நின்று பேசுவதும் பிடிக்காது. ஆகையால் பிரபாகர் சேரில் அமர்ந்து கொண்டான். கோபால்தாஸ் ஒரு கடிதத்தை தூக்கிப் போட்டான். பிரபாகர் பிரித்துப் படித்தான்.

ஆசிரியர் அவர்களுக்கு!

ஜனரஞ்சனி வாசகன் ஒருவனின் அன்பு மடல்.

நான் சமீபத்தில் நாகவனக் காட்டுக்கு பிக்னிக் சென்றிருந்தேன். என்னோடு என் நண்பர்கள் வந்தனர். எங்களின் உயிராய் விளங்கும் சூப்பர் நடிகர் இந்திரஜித்தின் எஸ்டேட் அங்கு இருப்பதை அறிந்து அந்த எஸ்டேட்டுக்கும் சென்றோம். ஆனால் அங்கு உள்ள செக்யூரிட்டி எங்களை உள்ளே விடவில்லை. அதேசமயம் எங்கள் உயிரான நடிகரின் பேத்தி விளையாடிக் கொண்டிருந்த பந்து நாங்கள் இருக்கும் இடத்தில் வந்து விழுந்தது. அதை கொடுக்கச் சென்றபோதும் செக்யூரிட்டி தடுத்தார். பந்தை அந்த பெண்ணே வந்து வாங்கிக்கொண்டது. எங்களை பார்த்து, 'தாத்தாவை பாக்கணுமா. அவர் தூங்கிகிட்டே இருக்கார் - என்னை எல்லாம் கூட பாக்க மாட்டேங்கறார்'' என்றபோது நாங்கள் அதிர்ச்சி அடைந்தோம். குழந்தை பொய் சொல்லாது. எனவே எங்கள் உயிரினும் மேலான இந்திரஜித் சார் அங்கேதான் இருக்கிறார். அவருக்கு ஏதோ ஆபத்து! அவர் ஏன் வெளியில் தலைகாட்டாமல் இருக்கிறார் என்பதன் பின்னால் ஏதோ மர்மம் உள்ளது. அதை தங்கள் நிருபர்கள் கண்டறிந்து தங்கள் இதழில் எழுதி உண்மையை வெளியுலகிற்கு கொண்டு வரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு

**தங்கள் வாசகர்கள்**



- என்று இருந்த அந்த கடிதத்தை படித்த பிரபாகர் 'வெரி இன்ட்ரஸ்ட்டிங்' என்றபடியே கடிதத்தை மூடி நீட்டினான்.

''வெரி வெரி இன்ட்ரஸ்டிங் பிரபாகர்... இந்திரஜித் பின்னால நிச்சயம் பெருசா ஏதோ மர்மம் இருக்கு.''

''உண்மைதான் சார்... நான் இன்னிக்கே புறப்பட்றேன் சார். இரண்டுல ஒண்ணு பாத்துட்றேன்.''

''பை த பை நாகவனம் ஒரு வழக்கமான காடு கிடையாது. நீங்க அந்த காட்டை பத்தியும் கொஞ்சம் தெரிஞ்சிக்கறது நல்லதுன்னு நினைக்கறேன்...''

''அப்படி என்ன சார் அந்த காட்டுல விசேஷம்?''

''அப்படி கேளுங்க... மூடநம்பிக்கைகளுக்கு பஞ்சமே இல்லாத காடு அது. அந்த காட்டுல ஒரு நாகதேவதை இருக்கிறதாகவும் அதனாலதான் அந்த காட்டுக்கு நாக வனம்னு பேர் வந்ததா சொல்வாங்க. அதேபோல அந்த காட்டுக்குள்ள ரத்னம் கக்கற மாணிக்க நாகங்கள் நிறைய இருக்கறதாவும் அவைகளை பாத்தா அது அதிர்ஷ்டம்னும் ஒரு கருத்து இருக்கு...''

- கோபால்தாஸ் சொல்லச் சொல்ல

பிரபாகர் முகத்தில் ஒருவித புன்னகை பரவத் தொடங்கியது.

''நீங்க சிரிக்கிறதுக்கு என்ன அர்த்தம்னு புரியுது பிரபாகர். இது எதுவும் என் கருத்து இல்லை... என் காதுல விழுந்த கருத்துக்கள் இதெல்லாம்...''

''சரி சார்... இவ்வளவுதானா இல்லை இன்னும் இருக்கா?''

''நிறையவே இருக்கு... இந்த காட்டுக்குள்ள ஒரு பழங்குடி இன மக்கள் வசிக்கறாங்க... இவங்க இந்த காட்டை விட்டு எந்தக் காரணம் கொண்டும் வெளிய

போறது கிடையாது. அப்படி வெளிய போனா அது பெரிய தப்பு. போனவங்கள திரும்ப இவங்க சேர்த்துக்கறதே இல்லை. அப்படி ஒரு கட்டுப்பாடு...’’

‘‘படிப்பறிவு இல்லாததால பழைய பழக்க வழக்கங்களை அப்படியே பின்பற்றுகிறார்கள்னு நினைக்கறேன்...’’

‘‘அதுதான் உண்மை. ஆனா இவங்களுக்கு சாமர்த்யம் அதிகம். மிருகங்கள வேட்டையாட்றதுலயும், மரங்கள ஏற்றதுலயும் இவங்க ரொம்ப ரொம்ப சாமர்த்தியசாலிகள். தேன் எடுக்கறதும், ஜாதிக்காய், மாசிக்காய்னு மூலிகைகள் பொறுக்கி அதை வித்துதான் ஜீவனம் செய்யறாங்க.’’

‘‘காட்டை விட்டே வெளியே போகாம எப்படி விக்கறாங்க?’’

‘‘காட்டு எல்லைல வாரம் ஒருநாள் வந்து சந்தை மாதிரி அமைக்கறாங்க. அப்ப மொத்த வியாபாரிகள் இவங்கள பார்த்து இவங்ககிட்ட இருந்து சரக்குகளை வாங்கிக்கறாங்க. பதிலுக்கு அரிசி பருப்புன்னு பண்டமாற்றுதான் இவங்க வரைல நடந்துகிட்டிருக்கு...’’

‘‘அரசாங்கம் இவங்க முன்னேற்றத்துக்கு எதுவும் செய்யலையா சார்...?’’

‘‘நான் குடி இருக்கற தெருவுக்கு தார் ரோடு போட்டே பல வருஷமாச்சு. மலை ஏறிப் போய் இவங்களுக்குத்தானா உதவிடப் போறாங்க...?’’

‘‘அப்ப காலம் காலமா அமுக்கியே வைக்கப்பட்டுக்கிட்டிருக்காங்க.... அப்படித்தானே?’’

‘‘அடங்கியே இருக்காங்கன்னு சொல்றதுதான் சரி. இவங்களையும் ஸ்டடி பண்ணுங்க. நாமளாவது இவங்கள பத்தி எழுதுவோம்.’’



‘‘நிச்சயமா சார்... இன்னும் இந்த நாகவனத்தை பத்தி ஏதாவது இருக்கா சார்...’’

‘‘இருக்கு பிரபாகர். இப்ப நான் சொல்லப் போறது தான் முக்கியமான விஷயம்.’’

‘‘என்ன சார்?’’

‘‘பிரபல சித்த வைத்தியர் இராமலிங்கையா பத்தி கேள்விப்பட்டிருக்கீங்களா?’’

‘‘இந்த பழனி வைத்தியர், சேலம் வைத்தியர் மாதிரியா சார்...?’’

‘‘இவங்கல்லாம் புரொபஷனல்ஸ்... அதாவது வைத்தியத்தை தொழிலா செய்யறவங்க. ஆனா ராமலிங்கையா பெரிய ரிசர்ச் ஸ்காலர்...’’

‘‘அப்படி என்ன சார் கண்டுபிடிச்சிருக்கார்?’’

‘‘நிறைய கண்டுபிடிச்சிருக்கார். இவரை வி.ஐ.பி.க்களுக்கான டாக்டர்னே சொல்வாங்க...’’

‘‘இவருக்கு என்ன சார்?’’

‘‘இவரையும் மூணு மாசமா காணலை. கடைசியா இவர் ஒரு பௌர்ணமிக்கு முதல் நாள் நாகவனத்துக்கு மூலிகை பறிக்க புறப்பட்டு போனவர்தான்...’’

‘‘இது எப்படி சார் உங்களுக்கு தெரியும்?’’

‘‘ஒரு பத்திரிகை ஆசிரியருக்கு எங்கெருந்தெல்லாமோ போன் கால்கள் வரும். அதுவா இப்ப விஷயம்.’’

‘‘அது சரி... வைத்தியரை காணோம்னு அவங்க குடும்பத்துல யாரும் போலீசுக்கு போகலையா சார்...’’

‘‘போயிருக்காங்க. புகாரும் பதிவாகியிருக்கு. போலீஸ் இதுநாள் வரை என்ன பண்ணாங்கன்னும் தெரியாது. தேடியிருக்கலாம். தேடிக்கிட்டும் இருக்கலாம். நாக

வனம் பின்னால உள்ள மர்மங்கள்ள ராமலிங்கய்யாவும் அடக்கம்.''

''நீங்க ஒவ்வொண்ணா சொல்லச் சொல்ல எனக்குள்ள ஆர்வம் அதிகமாகிக்கிட்டே போகுது சார்...''

''இந்த ஆர்வத்தை செயல்ல காட்டுங்க. ஆக்டர் இந்திரஜித் அங்க இருந்தா என்ன பண்றார் -ஏன் வெளி உலக தொடர்புல இல்லேங்கறத கண்டுபிடியுங்க. இந்த விஷயத்தை வெளி உலகத்துக்கு சொல்லப் போற முதல் ஆளா நாமதான் இருக்கணும்.''

''நிச்சயமா சார்...''

''கவனமாவும் செயல்படுங்க. ஒரு பத்திரிகையாளன் போலீஸ் கிடையாது. நம்மை நாமதான் பாத்துக்கணும். பாதுகாப்பு முதல்ல. அப்புறம்தான் துப்பறியறதும் மற்ற ஆர்வங்களும்...''

''ஷ்யூர் சார்.''

''ஆல் த பெஸ்ட்... போகும்போது கேஷியரை பார்த்து சஸ்பென்ஸ் அக்கவுண்ட்ல தேவையான பணத்தை வாங்கிக்கோங்க. தினசரி தவறாம என்கூட பேசிடுங்க.''

''டெஃபனட்லி சார்...''

''ஆல் த பெஸ்ட்...'' - பிரபாகர் வாழ்த்துக்களுடன் அறையை விட்டு வெளியில் வந்தான்.

கொஞ்ச நாளைக்கு இந்த செயற்கையான குளிருள்ள ஏ.சி. அறைக்குள் மையும் காகிதமும் கலந்த வாடையில் அடைந்து கிடக்காமல் ஒரு மர்மமான காட்டுக்குள் சுற்றித் திரியப் போகிறோம் என்கிற எண்ணமே அவனுக்கு மிக இன்பமாகவும் இதமாகவும் இருந்தது!



## 2

**நாகவனம் சற்று புதிரான வனம்!**

**இதன் மண்வாகு காரணமாகவும் - குளிர்ந்த தன்மை காரணமாகவும் இங்கே காலம் காலமாக பாம்புகள் அதிகமாக காணப்படுகின்றன. அமெரிக்காவின் அமேசான் காடுகளில் மட்டும் காணப்படும் அனகோண்டா வகை பாம்புகள் கூட இங்கு இருப்பதாக கூறுவார்கள். பாம்புகளைப் பற்றிய ஆராய்ச்சியாளர்கள் நாகவனத்தில் ஆராய்ச்சியில் ஈடுபட்டதில் பெரும்பாலானவர்கள் ஏதோ ஒரு வகையில் இறந்து போனார்கள்.**

**சிலரை மலைப்பாம்புகள் விழுங்கியது கூட நடந்திருக்கிறது! பலருக்கு கண்பார்வை போயுள்ளது. எனவே பெரிதாக ஆராய்ச்சியில் இந்த வனத்தில் யாரும் இறங்குவதில்லை.**

**இந்த வனத்தில் அபூர்வமான மூலிகைகளும் இருக்கின்றன. அவைகளில் கண்பார்வைக்கு மூலமான 'நேத்ர சூரி' என்னும் மூலிகை மிக முக்கியமானது.**

**பிறவியிலேயே கண்பார்வைக் குறைவு உள்ளவர்களுக்கு இதன் மூலிகைச் சாறு அதிகபட்சம் பதினாறு தினங்களில் பெரும் சக்தியை தருகிறது. அதேபோல இங்கே குறிப்பிட்ட ஒரு இடத்தில் விளையும் நேத்ர சஞ்சீவி என்னும் கீரையும் பார்வைக் குறைவை சரி செய்கிறது!**

இப்போதெல்லாம் கடற்கரைக்கு காதலர்கள் அவ்வளவாக வருவதில்லை என்பது வெறிச்சோடிக் கிடந்த கடற்கரை வெளியை பார்த்தபோது நன்றாக தெரிந்தது.

முன்பெல்லாம் நிறைய கட்டுமரங்களும், படகுகளும் கரையில் நின்றபடி இருக்கும். அதன் அடியில் சாய்ந்து கொண்டும் அதன் உள்ளேயே இறங்கி அமர்ந்து கொண்டும் கடலை போடும் பழக்கமெல்லாம் இந்த தலைமுறையிடம் இருந்து போயே போய்விட்டிருந்தது.

செல்போன் இருக்கும்போது அதில் நினைத்த போதெல்லாம் பேசவும் முடியும்போது தனியான பொது இடங்கள் அடிவாங்கிவிட்டன.

பார்க்குகளுக்கும் இதே கதிதான்!

காய்ந்த புற்களும், பூக்காத செடிகளும்தான் தமிழ் நாட்டு பார்க்குகள். பார்க்கில் மணிகூண்டு இருந்தால் அது சத்யமாய் ஓடாது.

ஏன் மணிக்கூண்டு என்றாலே ஓடக்கூடாதது என்பது தானே உண்மையான பொருள்.

மயிலாப்பூர் நாகேஸ்வரராவ் பார்க்குக்கு வந்துவிட்டு பின் அங்கிருந்து கடற்கரைக்கு வந்திருந்த பிரபாகரின் மனதில் தான் மேல் மாதிரியான எண்ணங்கள்.

அவனிடம் ஒரு இரும்பு எருமை உள்ளது. அதில் ஏறிக் கொண்டு அதை விரட்டும்போது காற்றில் பறப்பது போல் இருக்கும். அதிலும் பின்சீட்டில் அவன் காதலியான சரளா இருந்துவிட்டால் 'உல்லாச உலகம் நமக்கே சொந்தம்' என்று அலிபாபா தங்கவேல் கணக்காக அவன் மனது பாட ஆரம்பித்துவிடும்.

அப்படி பாட விரும்பிதான் அவளை பார்க்குக்கு வரச் சொல்லியிருந்தான்.

''பீச்சுக்கு வந்துடு பிரபா... பார்க்குக்கு என் அப்பாவோட நண்பர் ஒருத்தர் தினசரி வந்துட்றாரு. நம்மள பார்த்தா அவ்வளவுதான்'' என்று பயந்ததன் விளைவு...



பீச்சில் எம்.ஜி.ஆர். சமாதியை ஒட்டி பைக்கை போட்டுவிட்டு பேல்பூரி வாங்கி சாப்பிட்டபடியே காத்திருக்கவும் ஒரு ஆட்டோவில் சரளாவும் வந்து சேர்ந்தாள். காட்டன் சேரி, ஒரு லெதர் பேக் என்று படு சிம்பிளாகவும் இருந்தாள். அதற்கே அவன் மனதை என்னன்னவோ செய்தாள். சரியான ஒற்றை நாடி சரீரம், நல்ல உயரம். சற்று கொழித்த மார்புகள். நல்ல சிவந்த நிறம். அதன் காரணமாக இடைப் பாகத்தை பார்க்கும்போது பிரபாகருக்குள் எறும்புகள் ஊறத் தொடங்கிவிடும்.

அவளும் தழைய இறக்கித்தான் புடவை கட்டியிருப்பாள். ''கொஞ்சம் ஏத்தி கட்டலாமே?'' என்றால், ''உங்கள் பார்வைக்கு அங்க என்ன வேலை?' என்பாள்.

''ஏண்டி என்னை என்ன பல்லு போனவன்னு நினைச்சியா?'' - என்று எகிற ஆரம்பிப்பான்.

''அப்ப கெழடானாதான் மனசு அடங்கியிருக்குமா?''

''இப்பவும் அடங்கித்தான் இருக்கு. சரளா எங்க அவுத்துக்கிட்டு ஓடிடுமோன்னு பயமாவும் இருக்கு'' - என்பான். இதெல்லாம் காதல் குலாவல்கள்.

இப்போது அதெல்லாம் எதுவுமே பிரபாகரிடம் இல்லை. அவன் மனதுக்குள் மர்மமான நாகவனம் பற்றியே எண்ணங்கள். சரளாவும் அருகில் வந்து நின்றாள்.

''என்ன அவசரம் - எதுக்கு ஆபீசுக்கு பர்மிஷன் போட்டுட்டு கிளம்பி வரச் சொன்னே?''

''சொல்றேன் - பேல்பூரி சாப்பிட்றியா?''

''வேண்டாம் - விஷயத்துக்கு வா...''

''அதான் வந்துட்டேல்ல என்ன அவசரம்?''

''அவசரமா... அப்பா ஆஸ்பத்திரியில அட்மிட் ஆகியிருக்கார். சாயந்தரம் அங்க போயிட்டு தான் போகணும்.''

என்னாச்சு சரளா அப்பாக்கு?''

''பாத்ரூம்ல தடுக்கி விழுந்துட்டார். நினைச்சா மயக்கம் வருது. தலை சுத்துதுங்கறார். கழுத்து நரம்புல பிரச்னைன்னு டாக்டர்கள் சொல்றாங்க.''

''ஏன் முன்னாலயே சொல்லலை...''

''அது இருக்கட்டும். நீ எதுக்கு வரச் சொன்னே?''

''கேட்டு அதிர்ச்சியடையக்கூடாது...'' - பிரபாகர் பீடிகை போட்டான். சரளா முகத்தில் ஆச்சரியக் குறி.

''எடிட்டர் எனக்கு ஒரு ஸ்பெஷல் அசைன்மெண்ட் தந்துருக்கார்.''

''இதுல நான் அதிர்ச்சியடைய என்ன இருக்கு?''

''அசைன்மெண்ட் என்னன்னு கேட்டா நிச்சயம் அதிர்ச்சியடைவே?''

''பீடிகை போதும் பிரபாகர் விஷயத்துக்கு வா..''

''நாம காதலர்கள் - இதுவோ கடற்கரை - ஆனா டென்ஷனா பேசிக்கிறோம்.. இல்ல?''

''கடவுளே.. விஷயத்துக்கு சட்டுன்னு வரவே மாட்டியா?''

''வெயிட்... வெயிட்... உனக்கு சூப்பர் நடிகர் இந்திரஜித்தை தெரியும்தானே?

''குஞ்சு குளுவானுக்கு கூட அவரை தெரியும் பிரபாகர். இது என்ன சில்லியான கேள்வி.''

''ரைட்... அவர் இப்ப எங்க இருக்கார் தெரியுமா?''

''அவர் எங்க இருந்தா நமக்கு என்ன பிரபாகர்... நான் என்ன வேலை வெட்டி இல்லாத பாலாபிஷேகம் பண்ற ரசிகன்னு நினைச்சியா?''

''நீ இன்னிக்கு ரொம்பவே காரமா இருக்கே... நான் ஸ்ட்ரைட்டா விஷயத்துக்கு வந்துட்றேன். நடிகர் இந்திரஜித்



வெளிநாட்டுக்குப் போயிட்டதா எல்லாரும் நினைச்சுட்டு இருக்காங்க. ஆனா அவர் இங்கேயே இருந்துகிட்டு எல்லாரை ஏமாத்திக்கிட்டிருக்கார். அது மட்டுமல்ல. அவருக்கு பின்னாலயும் ஏதோ ஒரு மர்மம் ஒளிஞ்சிகிட்டிருக்கு. நான் இப்ப அதை கண்டுபிடிக்கத்தான் போகப் போறேன்'' - பிரபாகரின் பேச்சை கேட்டு உதட்டை சுழித்தபடி அவனை ஒரு மாதிரி பார்த்தாள்.

''என்ன பாக்கறே?''

''பாக்காமே... ஒரு நடிகர் வெளிநாட்டுக்கு போறதோ இல்லை உள்நாட்லயே எங்கையோ இருக்கிறதோ ஒரு மர்மமா... அதைக் கண்டுபிடிக்கறது ஒரு அசைன்மெண்ட்டா?''

''சரளா... நீ கொஞ்சம் முற்போக்கா சிந்திக்கிறவ. வெகுஜன சிந்தனை உனக்கு கிடையாது. ஆனா இந்த இந்திரஜித்தால அறுபது கோடி ரூபா முடங்கியிருக்கு. இந்த நபர் எங்க வேணா போகலாம் - வரலாம் - அது அவர் சுதந்திரம்கறத மறுக்கல. ஆனா ஒளிய வேண்டிய அவசியம் இல்லைங்கறது என் கருத்து. சகஜமா இருக்கற ஒரு ஒய்யோ இல்லை எக்ஸோ ஒளியிறான்னும்போதே அங்கே ஒரு மர்மம் வந்துடுது இல்ல...''

''அப்படி பார்த்தா ஆயிரக்கணக்கான பேர் ஒளிஞ்சிருக்காங்க. அவங்க ஏன் ஒளிஞ்சிருக்காங்க, எதுக்கு ஒளிஞ்சிருக்காங்கன்னு பாக்கறதுதான் உங்க வேலையா?''

''ஆயிரக்கணக்கான பேரை பார்க்க முடியாது. அதனாலதான் எல்லாருக்கும் தெரிஞ்ச ஒரு ஃபிகரை எட்டி பாக்கறோம்.''

''இது நல்ல ஜர்னலிசமா பிரபாகர்?''

''லுக்... இது என் எடிட்டரோட உத்தரவு. செய்ய வேண்டியது என் கடமை... பை த பை அவர் ஒளிஞ்சிருக்கார்னு சொன்னேன், எங்கேன்னு சொல்லலைலல்ல?''

''எங்க?''

''இதையாவது குறுக்கு கேள்வி கேட்காம ஸ்ட்ரைட் டா கேட்டியே....''

''கிண்டலா...?''

''சும்மா சொன்னேன். அவர் ஒளிஞ்சிக்கிறது நாக வனத்துல...'' - நாகவனம் என்று பிரபாகர் சொன்ன நொடி சரளா முகத்தில் பளிச்சென்று ஒரு அதிர்ச்சி.

''சரளா என்னாச்சு?''

''நாகவனமா?''

''ஆமாம்... உனக்கு தெரியுமா... கேள்விப்பட்டிருக் கியா?''

''இன்னிக்குத்தான் கேள்விப்பட்டேன்...''

''யார் சொன்னா?''

''அப்பாவை பாக்க ஆஸ்பத்திரிக்கு போயிருந்தேன். அந்த டெஸ்ட், இந்த டெஸ்ட்டுன்னு இன்னிக்கு ஒரு நாள்ள ஏழாயிரம் ரூபா காலி..''

''நேரா டாக்டருக்கு போயிட்டியே..?''

''இல்லை... பொறுமையா கேள் பிரபாகர். அவ்வ ளவு டெஸ்ட் பண்ண பேப்பர்ஸை டாக்டர் சரியாவே பாக்கலை. குறிப்பா எக்ஸ்ரேயை பார்க்க அவர் எடுத்து கிட்டது அரை நிமிஷம். ஸ்கேன் ரிப்போர்ட்டை ஒரு பார்வை. அதுக்கு ஒரு அரை நிமிஷம்!

தூக்கி டேபிள் மேல ஓரமா போட்டுட்டு உங்கப்பா வுக்கு மூட்டு எலும்பெல்லாம் தேய்ஞ்சு போயிருக்கு. குறிப்பா முதுகெலும்புல டிஸ்க்குகளும் டிஸ்லொகேட் ஆகியிருக்கு. கழுத்துக்கு பெல்ட் போட்டுக்கணும். ஃபிஸியோ தெரபிஸ்ட் கிட்ட போய் ட்ராக்ஷனும் போட் டுக்கணும். கால்ஷியம் டேப்ளட்ஸ் எடுத்துக்கணும்னு எழுதிக் கொடுத்தார்.



டாக்டர், எக்ஸ்ரே ஸ்கேன் ரிப்போர்ட்டை நீங்க சரியாவே பாக்கவே இல்லையேன்னு நான் கேட்டேன். அவருக்கு கோபம் வந்துடுச்சி. அதுல எதை பாக்கணுமோ அதை பாத்துட்டோம். பிராப்ளம் இருக்கறத கன்ஃபர்ம் பண்ணிக்க தான் இதெல்லாம்னு சொன்னார்.

பிராப்ளம் இருக்கறதாலதான் வலி வருது. வலி வந்தாலே பிராப்ளம் இருக்குன்னுதானே அர்த்தம். அதுக்கு எதுக்கு தனியா ஏழாயிரம் ரூபா செலவுன்னு நானும் விடாம கேட்டேன்.''

''சரளா உன் சமூக கோபம் எப்படிப்பட்டதுன்னு எனக்கு நல்லா தெரியும். நான் பேச வந்த விஷயத்துக்கும் நீ இப்ப பேசிகிட்டிருக்கறதுக்கும் என்ன சம்மந்தம்?''

''நிறைய இருக்கு பிரபாகர்... நான் எப்பவும் டாபிக்கை மறந்து மனம் போன போக்குல பேசறவ கிடையாது. இதை முதல்ல நீ புரிஞ்சுக்கோ...''

''சரி விஷயத்துக்கு வா... அந்த டாக்டர்கிட்ட அப்பு றம் என்ன ஆச்சு...?''

''அது ஏன் கேக்கறே... நான் அப்படி கேட்கவும் அவருக்கு கோபம் பொத்துக்கிட்டு வந்துடுச்சி. ஸ்கேன் மெஷின் எதுக்கு கண்டுபிடிக்கப்பட்டிருக்கு - பயன்படுத் தத்தானே? அதை பயன்படுத்தறது எங்க உரிமைன்னு ஆரம்பிச்சார்.''

''நீ என்ன சொன்னே?''

''ஆனா அந்த உரிமைக்கு நாங்கல்ல பணம் கொடுக்க றோம்னு சொன்னேன். திரும்ப அவருக்கு கோபம் பொத்துகிட்டு வந்து கத்து கத்துன்னு கத்தினார். உன் பணமும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம். நீ இடத்தை காலி பண்ணுன்னு துரத்தினார்.... நானும் அப்பாவோட கிளம்பிட்டேன். அப்ப ஒரு வாதத்தை சொன்னார். இந்த

சென்னைல உன் அப்பாவுக்கு வந்துருக்கற வியாதியை குணப்படுத்த என்னை விட்டா ஆளே கிடையாது... போ - போய் நல்லா கஷ்டப்படுன்னார்... நானும் உடனே அதை கேட்டுட்டு சும்மா வரலை. எங்கப்பாவை பூரணமா குணப்படுத்தி இங்க உன் எதிர்க்கவே கூட்டிகிட்டு வந்து காட்றேன்னு சொல்லிட்டு வந்தேன். அப்படி வந்த நான் அடுத்து இந்த விஷயத்துல யார் பெஸ்ட் டாக்டர்னு யோசிச்சேன். அப்பதான் சித்த வைத்தியர் ராமலிங்கய்யாவை பத்தி சொன்னாங்க. அவரை பார்க்க போனேன். ஆனா அவர் இப்ப சென்னைல இல்ல...'' - சரளாவின் நீண்ட பிரசங்கம் பிரபாகருக்கு பெருமூச்சை வரவழைத்தது.

''சரளா... சரளாங்கற பேருக்காக இப்படியா சரளமா ஒண்ணுமேயில்லாம பேசிகிட்டே போவே...''

''புரியுது...இப்ப பாய்ன்ட்டுக்கு வரேன். அந்த வைத்தியர் நாகவனத்துக்கு தான் போயிருக்காராம். அங்க தான் என் அப்பாவை குணப்படுத்தற மூலிகைகளும் இருக்காம்...''

''அப்பாடா... ஒரு வழியா நாகவனம் பக்கம் என்னைப் போலவே நீயும் வந்து சேர்ந்தியே - சந்தோஷம்.''

''சந்தோஷமெல்லாம் அப்புறம் - நாகவனம் வழக்கமான காடு கிடையாதாம். அங்க ஆபத்து அதிகம்னு கேள்விப்பட்டேன்.''

''காடுன்னாலே ஆபத்துன்னு முடிச்சு போட்றது சகஜம்தானே?'' ஆபத்து பாட்டுக்கு இருந்துட்டு போகட்டும் அதுக்கென்ன?''

''நான் ஆபத்துன்னு சொன்னதை முதல்ல கேள். அப்புறம் பதில் சொல்...''

''சொல்லுங்கள் தேவி...''



''இந்த கிண்டலெல்லாம் வேண்டாம். நாகவனம்கற பேரே அங்க பாம்புகள் நடமாட்டம் இருக்கறதாலதான் வந்தது. அந்த வகைல அனகோண்டா ரக பாம்புகள் அங்க நிறையவே திரியுதாம். மனுஷ வாடை குறிப்பா உடம்புல வியக்கக்கூடாது. அந்த வியர்வை வாடைக்கே அவை எங்க இருந்தாலும் வந்துடுமாம்...''

''மை டியர் காதலியே... பாம்புக்கு மூக்கு காது எல்லாம் கிடையாதும்மா. அதுக்கு கண்ணும் வாயும்தான். அடுத்து உணர்தல்... அந்த உணர்தல்தான் அதோட பெரிய பலம்.''

''இதோ பார்... நானும் இதை எல்லாம் படிச்சிருக்கேன். ஜியாக்ரபி சேனல்ல பாக்கவும் செய்யறேன். இருந்தாலும் காதுல விழுந்ததை சொல்வோமேன்னு சொன்னேன். நீ ஜாக்ரதையா இருக்கறதுக்காக சொன்னேன்.''

''அனகோண்டா டைப் பாம்புகள் இந்திய மண்ணுல இருக்க சான்ஸே இல்லை. க்ளைமேட், வாட்டர் சோர்ஸ்னு பல விஷயங்கள் அவைகள் வாழறதுக்கு தேவை. வேணும்னா கொஞ்சம் அளவுல பெரிய மலை பாம்புகள் இருக்கலாம்.''

''போறது போறே எங்கப்பாவுக்கு மருந்து கிடைக்குமா பார்...''

''என் வணக்கத்துக்குரிய காதலியே... எப்படியாவது மருந்தோட தான் வருவேன். அப்பதானே உன் அப்பா கிட்ட நம்ம காதலுக்கும் பர்மிஷன் வாங்க முடியும்?''

''உளறாதே... பர்மிஷன் கேட்டுகிட்டு பண்றதுக்கு பேர் காதல் கிடையாது. அது கல்யாணம்.''

''இப்பவே இப்படி என்ன தாக்கறியே... கல்யாணமாயிட்டா பின்னி பெடலெடுத்துருவே போல தெரியுதே...''

''ஒழுங்கா அடக்க ஒடுக்கமா என் கைகாலை அமுக்கிகிட்டு இருந்தா நான் எதுக்கு பெடலெடுக்கறேன்?''

''சரளா... நான் மீசை வெச்ச ஆம்பளை... நீயும் அல்லி ராணி கிடையாது.''

''போதும்பா.. மீசை இருந்தா கால் பிடிக்கக்கூடாதா? நாங்க மட்டும் தாலி கட்டிக்கணும் - கால்ல விழணும். உங்க எச்சில் பாலை குடிக்கணும்...''

''சரளா நிறுத்திக்கோ.. இதுக்கு மேலே என்னால தாங்க முடியாது.''

''ஓகேடா... பார்த்து ஜாக்கிரதையா போய்ட்டுவா. அந்த சூப்பர் நடிகரை பத்தி கண்டுபிடிச்சு நீ என்ன கிழிக்கறே. அதனாலே இந்த சமுதாயத்துல என்ன பெருசா மாற்றங்கள் ஏற்படுதுன்னும் நான் பாக்கறேன்.''

- சரளா ஒரு வழியாக விடை கொடுத்து அனுப்பினாள். மொத்தத்தில் இரு காதலர்கள் சந்தித்து கொண்டது போல இல்லாமல் இரண்டு சண்டை கோழிகள் சந்தித்துக் கொண்டது போலத்தான் அவர்கள் சந்திப்பு இருந்தது. ஆனாலும் சரளா முகத்தில் ஒரு தனித்த சந்தோஷம் தெரிந்தது. மெரினாவும் இருளில் மூழ்கிய நிலையில் கரையோரமாக காதல் ஜோடிகளின் சில்மிஷங்கள் ஆரம்பமாகியிருந்தன.

## 3

**வனங்களுக்கு பூமியிலே எப்போதுமே ஒரு தனி சிறப்பும் பிரத்யேக இடமும் உண்டு. வனத்துக்குள் ஒன்பது செல்வங்களும் இருக்கும் என்று ஒரு கருத்து உண்டு.**



**தேன், பழம், சந்தனம், கோரோசனை, மான், மலர், அருவி, மூலிகை, வனக்காற்று என்னும் ஒன்பதும்தான் ஒன்பது செல்வம். மலைத்தேன் மருத்துவ குணமுடையது. மலைப்பழமும் உடம்புக்கு இனியது. மலைச்சந்தனம் மனம் ஒடுங்கவும் உடல் உஷ்ணம் தணிக்கவும் பயன்படுவது. கோரோசனை எனப்படும் பொருள் வாசனை மருந்தாகும். இது கிடைக்கிறது என்றால் மான் இனம் செழிப்பாக இருக்க வேண்டும். மான் இனம் செழிப்பாக இருக்க பயிர் பச்சை வேண்டும். பயிர் பச்சைக்கு மழை வேண்டும். இப்படி கோரோசனை ஒன்றை வைத்து மற்றவை உள்ளதை நாம் உணர்ந்துவிடலாம். அதே போல் மலர்களும் மிகுந்து அருவியும் கொட்டி, அதனால் நுட்பமான மூலிகைகளும் மிகுந்து வளர்ந்த நிலையில் வனத்துக்குள் உள்ள காற்றுக்குள் ஜீவசக்தி அவ்வளவும் இருக்கும். அதனால்தான் வனத்தை தேடி சித்தர்களும், ஞானிகளும் சென்று அங்கேயே தங்கி வாழ்ந்தனர்.**

**நா**கவனத்துக்கு முன்பாக உள்ள புல்லூரணி எனும் இடத்தில் பஸ் நின்றது. அதிலிருந்து உதிர்ந்தான் பிரபாகர். பாக்கெட்டில் இருந்த செல்லை எடுத்து சிக்னல் இருக்கிறதா என்று பார்த்தான். இருந்தது. அவன் முதுகில் ஒரு கிட் பேக். பிக்னிக் போகின்றவர்கள் போல ஒரு தோற்றம். தலைக்கு கேப் - கண்ணுக்கு கூலிங்கிளாஸ். காலுக்கு ஷூக்கள் - ஜீன்ஸ் பேண்ட் டி ஷர்ட். இடுப்பில் பெல்ட். பவுச்சில் செல்போன். கிட் பேக்குக்குள் கேமரா. மினி லேப்டாப், இரவிலும் பார்க்க பயன்படும் பைனாகுலர். இது போக மழை. கோட், பேனா கத்தி, சார்ஜர் என்கிற இன்றைய நவீனங்கள்.

அவன் அந்த முதுகுச் சுமையோடு நடப்பது பார்ப்பதற்கு அழகாக இருந்தது. அருகில் ஒரு டீ கடை. வெளியே மரபெஞ்சுகள் கிடந்தன. அதில் மலை ஜனங்கள் கறுப்பு போர்வையை போர்த்திக் கொண்டு உட்கார்ந்தபடி கட்டாங் காபியை உறிஞ்சி உறிஞ்சி குடித்துக் கொண்டிருந்தனர். வெளியே ஒரு தட்டியில் ஒரு பழைய சினிமா பட போஸ்டர் ஒட்டப்பட்டு காலாவதியாகியிருந்தது. 15-08-1997 முதல் என்கிற அந்த குறிப்பே 14 வருடங்களுக்கு முன்பு அந்த போஸ்டர் ஒட்டப்பட்டதை உணர்த்திவிட்டது. அதை பார்த்தபடியே போய் ஒரு டீ போடச் சொன்னான்.

''பால் தீந்து போச்சுங்க... வர டீ தான்... பரவாயில்லையா?''

''வர டீ'ன்னா அது எப்படி இருக்கும்?''

''குடிச்சு பாத்துட்டு சொல்லுங்க. கூட கொஞ்சம் சக்கைத் தட்டிப் போட்டு அதுல பனவெல்லம் போட்டு தரேன்'' என்றான். பின்னர் 'வர டீ'யும் வந்தது. குடித்தான். நன்றாகத்தான் இருந்தது. அப்படியே பேச்சும் வளர ஆரம்பித்தது.

''தம்பிய பாத்தா பட்டணம் போல தெரியுதே?''

''ஆமாம்.''

''இங்க நம்ம ஸ்டாரோட பங்களாவை பாக்க வந்திங்களா?''

''அப்ப அவர் பங்களாவை பாக்க வருவாங்களா?''

''என்ன அப்படி கேட்டுட்டீங்க. ஒரு நாளைக்கு அம்பது பேராவது வருவாங்க. அவங்க தயவுலதான் என் வண்டி ஓடிகிட்டிருக்கு.''

''ஒரு பங்களாவ பாக்கவா இவ்வளவு பேர் வர்றாங்க. கேவலம் ஒரு கட்டடம்...''



''அதான் இல்ல... அது சூப்பர் நடிகரோடது. அதனால அந்த பங்களாவையே அவர மாதிரி பாக்கறாங்க.''

''அதை பாக்கறதோட சரியா, இல்லை விழுந்து கும்புட்றதெல்லாமும் உண்டா?'' - நக்கலாக கேட்டான்.

அப்போது சற்று தொலைவில் கையில் கோலை ஊன்றியபடி ஒரு வயதானவர் வந்து கொண்டிருந்தார். தலைக்கு முட்டாக்கு போட்டு முகம் வெளியே தெரியாதபடி மூடிக்கொண்டு உடம்பையும் ஒரு சந்தனக்கலர் ஷால் கொண்டு போர்த்திக் கொண்டிருந்தார்.

அவரைப் பார்க்கவும் டீ கடைக்காரன் முணுமுணுக்க ஆரம்பித்தான்.

''வந்துட்டான் இந்த கெழவன்... எவ்வளவு கூப்பிட்டாலும் காதுலயே வாங்க மாட்டான். எங்க இருந்து வர்றான். எங்க போறான்னும் தெரியல...'' என்றான்.

அந்த கிழவரும் அவர்கள் யாரையும் பார்த்தும் பார்க்காதவர் போல கடந்து போனார். நடையில் நிறையவே தள்ளாடல். கையில் கம்பு மட்டும் இல்லை என்றால் நடக்க முடியாமல் விழுந்து விடுவார் போல இருந்தது.

''இவ்வளவு வயசான ஒருவர் மலை பாதைல போறாரே. எதுக்கு இவ்வளவு சிரமப்பட்டு போறாரு...?''

''அதான் தெரிய மாட்டேங்குது. எவ்வளவு கூப்பிட்டாலும் காதுல வாங்காம போறாரு. அனேகமா நாக வல்லியம்மன் கோவிலுக்குத்தான் போகணும். ஏன்னா திரும்பி போகும்போது பாத்துருக்கேன். நெத்தியில குங்குமம் இருக்கும்'' - என்றான். டீயை குடித்து முடித்த நிலையில் காசைக் கொடுத்துவிட்டு பிரபாகரும் அந்த கிழவரை பின்தொடரத் தொடங்கினான்.

''நீங்க எங்க சார் கிளம்பிட்டீங்க?''

''அந்த நாகவல்லியம்மன் கோவிலுக்குத்தான்.''

''ஐயோ சார் இப்படி பூட்ஸ் காலோட எல்லாம் அங்க போகாதீங்க - அது ஆபத்து.''

''கவலைப்படாதீங்க. அங்க போன உடனே கழட்டிடுவேன்'' - என்ற அவன் பதில் டீ கடைக்காரனை பெருமூச்சுவிட விட்டது.

அந்த பாதை வளைந்து வளைந்து போனது. இருமருங்கிலும் காட்டுச் செடிகள். ஏராளமாய் பட்டாம் பூச்சிகள் அந்த செடிகளின் மேல் பறந்தபடி இருப்பது நல்ல காட்சியாக இருந்தது.

ஒரு கட்டத்தில் பாதை மேடும் பள்ளமாய் மாறிப் போனது. ஒரு இடத்தில் ஓடை போல் ஒன்று குறுக்கில் ஓடியது. ஆனால் அவ்வளவாய் ஆழமில்லை. ஸ்படிகம் போல் தண்ணீர். அதில் நிறைய மீன் குஞ்சுகள் தெரிந்தன. கலர் கலரான மீன்களும் தென்பட்டன.

சுற்றுச் சூழலிலும் ஏ.சி. போட்டது போல் இருபது சென்டிகிரேட் குளிர். அந்த கிழவர் ஓடை நீரை தாண்டும் போது அவரது ஷால் தவறி கீழே விழுந்து தண்ணீரில் ஓடத் தொடங்கியது. அவர் பிடிக்க முனைந்து முடியாமல் தவிப்பதை பார்த்த பிரபாகர் ஒரு ஓட்டப் பந்தயக் காரனைப் போல ஓடிச் சென்று அதை எடுத்தான். அது நீரில் முழுவதுமாக நனைந்துவிட்டிருந்தது. அந்த கிழவரும் ஓடையை கடந்து அந்த பக்கம் போய் திரும்பி பார்த்தார்.

பிரபாகர் அந்த ஷாலை நன்றாக பிழிந்தான். பிழிந்தபடியே அவர் அருகே சென்றான். அவர் ஏனோ தலையை தாழ்த்திக் கொண்டு அவனை பார்ப்பதை தவிர்த்தார்.

''பெரியவரே... இந்தாங்க உங்க ஷால்...''

அவரும் வாங்கிக் கொண்டார்.



''அப்படியே தோள் மேல விரிச்சு போட்டுக்குங்க. ரொம்ப நேரத்தில் காஞ்சிடும்'' என்றான். ஆனால் அவர் அப்படி செய்யாமல் அதை கையில் பிடித்தபடி நடக்க ஆரம்பித்தார்.

''நில்லுங்க... உங்க கூட கொஞ்சம் நான் பேசணும்.''

ஆனால் அவர் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் நடந்தார்.

''அட என்ன பெரியவரே நீங்க... வாயைத் திறந்து பேச மாட்டீங்களா?'' - பிரபாகரன் அவரைப் பார்த்து உரத்த குரலில் கேட்டான். ஆனாலும் அவரிடம் ஒரு சிறிய அளவு பொருட்படுத்தலும் இல்லை.

அந்த ஈரமான ஷாலை போகிற போக்கில் விரித்து உதறி ஓரமாக அடர்வாக வளர்ந்திருந்த நெமிலிச் செடியின் மேல் காய வைப்பது போல் போர்த்திவிட்டு நடந்தவரை பிரபாகரும் விடாமல் பின்தொடர்ந்தான்.

அவரது செயல்கள் அவனுக்கு ஆச்சரியத்தை மட்டும் அல்லாமல் சந்தேகத்தையும் சேர்ந்தே அளித்தது.

அப்போது எதிரில் சில மலை ஜாதிப் பெண்களும் வந்து கொண்டிருந்தனர். கிட்டத்தட்ட பத்து பதினைந்து பெண்கள்! அவர்களுக்கும் பின்னாலே ஒரு பத்து பதினைந்து ஆட்கள். அவர்களது சேலைக்கட்டும், சேலை முந்தியையே தொட்டிலாக்கி அதில் குழந்தையை உட்கார்த்தி வைத்திருந்த அழகும் பார்ப்பதற்கே ரசமாக இருந்தது.

நகர் பகுதிகளில் இப்போதுள்ள பெண்கள் பெற்ற குழந்தையையே தன் இடுப்பில் சுமப்பதில்லை. அது ஒரு பட்டிக்காட்டுத்தனம் என்கிற எண்ணம் வந்து விட்டது. ஊனமுற்ற பிச்சைக்காரர்கள் வண்டிகளில் வந்து பிச்சை எடுப்பதுபோல அவர்களையும் தள்ளு வண்டிகளில் வைத்து தள்ளிக் கொண்டு வருவது ஃபேஷன் ஆகிவிட்டது.

பிரபாகரின் பத்திரிகையாளர் புத்தி அந்த மேலாக்குத் தொட்டில் குழந்தையைப் படம் எடுத்துக் கொள்ள தூண்டியது. மளமளவென்று முதுகுப் பக்கம் இருந்த பேக்கை முன்பக்கம் கொண்டு வந்து திறந்து கேமராவை அதில் இருந்து எடுத்து அந்த குழந்தையை படம் எடுக்க முனைந்தான். கேமராவை கண்களுக்கு நேராக நிறுத்தி அதன் வழியாகப் பார்த்தபோதுதான் தெரிந்தது. அந்த பெண்களில் ஒருத்தி அழுதபடி இருப்பது... அழுது அழுது அவள் முகம் வெகுவாக வீங்கிப் போயிருந்தது.

'நீ தைரியமா வாலே. உன்னை குத்தம் சொன்ன அவனை இன்னிக்கு நாகாத்தா சும்மா விடமாட்டா...' என்று ஒருவர் அவளுக்கு ஆறுதல் சொல்வதும் அவன் காதில் விழுந்தது.

ஏதோ பிரச்சனை...

அவர்களும் நாகவல்லியம்மன் கோவில் நோக்கித் தான் நடந்தனர். அவர்களை கவனிக்க ஆரம்பித்ததில் அந்த கிழவரை கவனித்தது அறுந்து போய் விட்டிருந்தது.

எங்கே அந்த கிழவர்?

பிரபாகர் பார்வை துழாவியதில் அவர் இல்லை. நெமிலிச் செடி மேல் காயப் போட்டிருந்த ஷாலையும் காணவில்லை. மிக வேகமாய் அவர் போய்விட்டிருந்தது அவனுக்கு ஆச்சரியமாகவும் இருந்தது.

பிரபாகரை அந்த மலைசாதிக்காரர்களில் ஒரு இளைஞன் கவனித்தான். லுங்கி பனியனுடன் தலையில் உருமா கட்டியிருந்தான். காலில் செருப்பு கூட இல்லை. பிரபாகரிடம் வந்தான்.

கூர்ந்து குறுகுறுவென்று பார்த்தான்.

''என்னய்யா பாக்கறே?''

''பாக்காம... கைல என்ன கேமராவா?''



''இதை அப்படித்தான் சொல்லுவாங்க...''

''பத்திரிகைக்கார ஆளா?''

''ஓ... அந்த அளவு தெரிஞ்சிருக்கா?''

''மாலைச்சாதிக்காரங்கன்னா வெளியுலகமே தெரியாதுங்கற எண்ணமா?''

''அப்படித்தானே ரொம்ப பேர் இருக்காங்க. ஆனா நீ இப்படி கேள்வி கேக்கறது பிடிச்சிருக்கு.''

- பிரபாகரின் இணக்கமான பதில் அவனிடமும் ஒரு சிநேக பாவத்தை உருவாக்கியது.

''எந்த பத்திரிகை?''

''ஜனரஞ்சனி...''

''ஓஹோ...''

''படிக்க தெரியுமா?''

''இந்த கூட்டத்துல எனக்கு மட்டும் தெரியும்.''

''எதுவரை படிச்சிருக்கே?''

''எட்டாம் வகுப்பு...''

''எந்த மூலைக்கு?''

''அதுக்கே எங்க அப்பா டவுசர் அவுந்து போச்சு.''

''காமெடியா பேசலாம் - ஆனா பட்டிக்காட்டு வாழ்க்கையே காமெடி ஆயிடும். தெரியுமா?''

''ஆமா... படிச்சா மட்டும் நல்ல வேலையை தட்டுல வெச்சுதான் கொடுத்துடப் போறாங்க.''

''அதுல என்ன சந்தேகம். ஒரு மலை சாதி இளைஞன் மட்டும் கஷ்டப்பட்டு படிச்சா வாழ்க்கைல முன்னுக்கு வர இன்னிக்கு பல வழிகள் இருக்கு - அரசாங்கம் அவ்வளவு சலுகைகள் தருது.''

''எனக்கு தெரிஞ்சு எங்க கிராமத்துல ஒரு வசதியும் கிடையாது. இன்னும் எங்க கிராமத்துக்கு மின்சார வசதியே வரல. அது தெரியுமா உங்களுக்கு?''

''நீங்கதான் அதுக்காக போராடணும். இப்ப என்கிட்ட கேள்விகள் கேட்கற மாதிரி எம்.எல்.ஏ. பிரசிடெண்ட்டுங்ககிட்ட கேள்விகள் கேட்கணும்.''

''விடாம எனக்கு பதில் சொல்றீங்களே... இந்த காட்டுல எவ்வளவோ அக்கிரமங்கள் நடக்குது. அதை எல்லாம் எழுதுவீங்களா?''

''நிச்சயமா.... அதுதானே பத்திரிகையாளன் கடமை. ஆமா அப்படி என்ன அக்கிரமம்?''

''சொல்றேன். அதுக்கு முந்தி இப்ப நடக்கற பஞ்சாயத்து முடிஞ்சிடட்டும்.''

அவனோடு நடந்தபடி பேசியதில் நாகவல்லி அம்மன் ஆலயம் வந்துவிட்டிருந்தது. மிரட்டலான ஆலயம். மதில் சுவரோடு கூடிய கோபுரமும் மண்டபமுமான ஆலயம் இல்லை இது. எட்டடி உயர கல்லில் பாம்பு வடிவம் செதுக்கப்பட்டு அந்த கல் மஞ்சள் குங்குமத்தால் மூழ்கியிருந்தது. முன்னாலே இடுப்பு உயரத்துக்கு ஒரு கல் தூண் மேல் ஒரு அரைச்சட்டியில் திரி போட்டு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதை ஒட்டி ஆறடி உயர பாம்புப் புற்று ஒன்று...

அந்த எட்டடி உயர பாம்பு வடிவக் கல்லானது ஒரு நாகலிங்க மரத்துக்கு கீழ் இருந்தது! நாகலிங்க மரம் ஒரு சர்க்கஸ் கூடாரம் அளவு பெரிதாக ஓங்கு தாங்காய் வளர்ந்து ஏராளமாய் காய் பிடித்து நாகலிங்கப் பூக்களோடு காட்சி தந்தது. அந்த பகுதி முழுக்கவே அந்த பூவின் வாசம்.

கீழே கும்மென்று அடர்வான நிழல்.

அந்த நிழலில் அவர்கள் கூடி நிற்கத் தொடங்கினர்.

பிரபாகருக்கு அது என்ன பஞ்சாயத்து என்று தெரிந்து கொள்ள மனது துடித்தது. அந்த இளைஞனிடமே கேட்டான்.



''என்ன பஞ்சாயத்து இது?''

''கேட்டா சிரிப்பும் வரும் - கோபமும் வரும்.''

''சொல்லேன் - இரண்டும் வருதான்னு பாக்கறேன்.''

''அதோ அழுதுகிட்டிருக்காளே ஒரு பொண்ணு...''

''உம்..''

''அவ கைல கூட குழந்தை இருக்குல்ல...?''

''உம்.''

''அந்த குழந்தையோட அப்பன்தான் பஞ்சாயத்துல பிராது கொடுத்துருக்கான்.''

''என்னன்னு?''

''அந்த குழந்தை அவனுக்கு பிறக்கலையாம்.'' சுருக்கென்றது பிரபாகருக்கு.

''அப்ப அந்த பொண்ணு நடத்தை கெட்டவளாமா?''

''அதான் இப்ப பிரச்சினை. அந்த பொண்ணோ நான் அப்படிப்பட்டவ இல்லைங்கறா...''

''சந்தேகப்பட்ற மாதிரி ஏதாவது நடந்ததா?''

''அதோ அந்த குழந்தைதான் அவனுக்கு சந்தேகத்தை கொடுத்துருக்கு.''

''என்ன... அவன் ஜாடைல இல்லியாமா?''

''ஆமாம்... அதோட அவன் அட்டை கருப்பு - குழந்தை நல்ல சிவப்பு. அதான் சந்தேகப்பட்றான்.''

''அவன் ஏதாவது படிச்சிருக்கானா?''

''இந்த கூட்டத்துலயே பள்ளிக்கூடம்னு ஒண்ணுக்கு போனது நான் மட்டும்தான்...''

''அதான் இப்படி குருட்டுத்தனமா நடந்துக்கறான்.'

''அதை நானும் சொல்லிட்டேன். எங்க ஜாதி பெரியவங்க எல்லாரும் சொல்லிட்டாங்க. ஆனா கேட்க மாட்டேங்கறான்.''

''பஞ்சாயத்துல மட்டும் என்ன பண்ண முடியும்?''

''நாகவல்லி அம்மன்கிட்ட பிரச்னையை விட்டு வோம்ல?''

''புரியல எனக்கு...''

''அவ பெத்தெடுத்த குழந்தையை இப்ப சாமி முன்னாடி விடுவாங்க. குழந்தையை விட்டுட்டு அந்த பொண்ணு நாகவல்லி அம்மனை கும்புட்டுட்டு புத்துக் குள்ள கையை விடணும். ஒரு தடவை இல்லை - மூணு தடவை. மூணு தடவையும் பாம்பு கடிக்கலைன்னா அந்த பொண்ணு சொல்றதுதான் உண்மைன்னு அர்த்தம்...''

- அந்த இளைஞனின் பதில் பிரபாகரிடம் ஒரு பகீர் உணர்ச்சியை உண்டாக்கியது.

''என்னப்பா கொடுமை இது...?''

''கொடுமை இல்லை - இதான் எங்க மலைசாதி வழக்கம். குறிப்பா இந்த நாகவனத்து வழக்கம்.''

''இது வழக்கமா... கொடுமைய்யா! நான் இப்ப அந்த ஆள் ஒரு தப்பு பண்ணிட்டதா சொன்னா இல்லைன்னு நிரூபிக்க அவன் புத்துக்குள்ள கைய விடுவானா?''

- பிரபாகர் கேட்கவும் அந்த இளைஞன் திணறிப் போனான். அவர்கள் இருவரும் ஒதுங்கி நின்று பேசியபடி இருந்தனர். அதற்குள் பஞ்சாயத்தும் தொடங்கிவிட்டது. அழுதபடி இருந்த பெண் இப்போது நாகசிலை அருகே யுள்ள புற்றுக்கு முன் நின்றபடி இருந்தாள். கீழே ஒரு ஓலைப்பாய் விரித்து அதன் மேல் நாகலிங்க பூக்களின் இதழ்களை உதிர்த்துப் போட்டு அந்த இதழ்களின் மேல் குழந்தையை விட்டனர். அது அழ ஆரம்பித்துவிட்டது. பார்க்கவே பரிதாபமாக இருந்தது. ஒரு பக்கம் அதன் அழுகை. மறுபக்கம் அவளுடைய அழுகை - அவள் கணவன் என்று ஒருவன் எதிரில் வந்து நிறுத்தப்பட்டான்.



அவனுக்கு எப்படியும் நாற்பது வயதுக்கு மேல் இருக்கும். அவளுக்கோ பதினெட்டு இருந்தால் அதிகம்.

பிரபாகருக்கு அவன் சந்தேகத்திற்கு காரணம் அப்போதே புரிந்துவிட்டது. வயதான தனக்கு இவ்வளவு அழகாக பிள்ளை பிறக்க வாய்ப்பே இல்லை என்று அவன் தனக்குள் நினைத்திருக்க வேண்டும்.

அவர்களில் ஒரு தொண்ணூறு வயது கிழவனார் ஒருவர் ஒரு பதினெட்டு முழு துணியாலான தலைப் பாகையைக் கட்டிக் கொண்டு முன்னால் வந்து பேச ஆரம்பித்தார்.

'அஹேய், அய்யன் முனியனுக்கும் ஆண்டிக் கருப்ப னுக்கும் பாலை இருளச்சிக்கும், கோடி கோடி வந்தனம். இந்த மலையோட தெய்வமான நம்ம குல சாமி நாக வல்லிக்கும் கோடி கோடி வந்தனம்...

இப்பவும் பேயன் பிராது கொடுத்தபடி பேச்சிங்கற இந்த புள்ளை நடத்தை கெட்டவளா இல்லையான்னு ஆத்தா தான் சொல்லணும். இவ தப்பு பண்ணியிருந்தா தீண்டி தண்டிக்கட்டும். இல்லாங்காட்டி இவளை பேயன் சந்தோசமா ஏத்துக்கணும். இது இந்த பஞ்சாயத்து தீர் மானம். யாரும் மறிச்சு பேசறது இருந்தா பேசலாம்...''

என்று பேசி முடித்தார். இப்படித் தொடங்குவதுதான் வழக்கம் என்பது பிரபாகருக்கும் புரிந்தது. அந்த கிழவர் பேசும்போதே அவரை ஒரு புகைப்படமும் புற்றுக்கு கீழே குழந்தை கிடப்பதை ஒரு புகைப்படமும் எடுத்துக் கொண்டான். அதை கவனித்த ஒருவர் அருகில் வந்து கேமராவை புடுங்க முயன்றார்.

''ஏன் கேமராவைப் புடுங்கறே?''

''எதுக்கு படம் எடுத்தே?''

''நான் பத்திரிகைக்காரன்.''

''யாரா இருந்தாலும் சரி, இது எங்க வழக்கம். இது எங்க சாமி - படம் புடிக்கக்கூடாது.''

''மண்ணாங்கட்டி... இன்னும் எந்த காலத்துலயா இருக்கீங்க. புத்துக்குள்ள இருக்கற பாம்பு கிட்ட கைவிட்டா அது எந்த புத்தா இருந்தாலும் எந்த பாம்பா இருந்தாலும் கடிக்கும். இதுக்கும் சாமிக்கும் எந்த சம்பந்தமும் இல்லைய்யா. புரிஞ்சுக்குங்க.''

''என்ன நீ... போட்டோ எடுத்ததையே நாங்க குத்தமா நினைக்கறோம். இதுல எங்க பஞ்சாயத்தையே நீ குத்தம் சொல்றியா?'' - சுற்றி இருப்பவர்கள் சிதறினர்.

ஓரளவு படித்த அந்த இளைஞன் மட்டும் வக்காலத்து வாங்கினான்.

''ஐயா கிட்ட நமக்கு சச்சரவு வேண்டாம். அவரு நம்ம குறைகளை எல்லாம் பத்திரிகைல போட்டு அரசாங்கம் கவனத்துக்கு கொண்டு போறேன்னு சொல்றார். கொஞ்சம் அவர் என்ன சொல்றார்னு கேளுங்க...'' என்றான்.

''எடேய் எட்டாங்கிளாசு - என்ன படிச்ச கொழுப்பா உனக்கு. இந்த போட்டோக்காரன் எழுதி தான் நமக்கு விடியப் போகுதா. நம்ம வரைல இந்த சாமி கண்ணைத் திறக்கணுமடா...''

- பேச்சு தீப்பிடித்துக் கொள்ளப் பார்த்தது. அந்த பெண் திடீரென்று குறுக்கிட்டாள்.

''என் பிரச்னையை விட்டுட்டு எதுக்கு வேற பேச்சு பேசறீங்க.... எனக்கு முதல்ல முடிச்சு விடுங்க. நான் ஒரு பாவமும் செய்யாதவ. எனக்கு நாகவல்லி அம்மன் துணை இருக்கா. ஒரு தடவை இல்ல நூறு தடவை நான் புத்துக்குள்ள கையை விட்றேன்'' என்று ஆவேசம் பொங்க பேசியவள் அருகில் உள்ள புற்றுக்குள் துளியும் தயக்கமின்றி 'நாகாத்தம்மா' என்றபடியே கையை விட்டுவிட்டாள்!

பிரபாகருக்கு பகீர் என்றது!



## 4

'வனங்களில் எவ்வளவோ ரகசியங்களும் மறைந்து கிடக்கின்றன. தங்கக் கிணறுகளும், அபூர்வ மூலிகைகளும் நாழிச் சுனைகளும் வனங்களின் மிகப் பெரும் செல்வங்கள். எந்த ஒரு வனமாக இருந்தாலும் அதில் ஈசான்ய பாகத்தில் நாழிச் சுனையிருந்தால் அந்த சுனையில் சித்திரா பௌர்ணமி நாளின் நள்ளிரவில் இருந்து அதிகாலை வரை மூழ்கிக் குளிப்பது என்பது உடலுக்கு பெரும் ஆரோக்கியத்தைத் தரும்.

அதேபோல பெரும் வறுமையில் இருப்பவர்கள் தீபாவளி நாளில் பிரம்ம முகூர்த்த வேளையில் சுண்ணாம்புச் சுனையை கண்டறிந்து அதில் மூழ்கி எழுவது அவர்களின் வறுமையைப் போக்கிச் செல்வத்தைத் தரும். சுண்ணாம்புச் சுனையை கண்டறிவது கடினம். பெரும்பாலும் இவை பனி படர்ந்த மலை பிரதேசங்களில்தான் இருக்கும். இதன் நீர் உஷ்ணமாய் இருக்கும். தீபாவளியின் காலை நேரத்தில் அப்போதுள்ள ஹோரையில் அந்த நீரில் விசேஷமான ஆற்றல் உள்ள கதிர்கள் உருவாகி அவை மூழ்கிக் குளிக்கையில் குளிப்பவரை தொற்றுவதாக ஐதீகம். இதை வைத்துத் தான் அன்று அதிகாலை இந்த உலகின் எல்லா நீர் நிலைகளில் உள்ள நீரும் கங்கை நீராக மாறுகிறது. எனவே அவ்வேளையில் நீராடுவது பாவங்களைப் போக்கும் என்று கூறப்பட்டது. இதன் பின்னாலே பெரும் ஆரோக்ய விஷயங்கள் சூட்சுமமாக புதைந்து கிடக்கின்றன!

பேச்சி என்னும் அந்த பெண்ணின் வேகத்தை அங்குள்ளவர்களே எதிர்பார்க்கவில்லை. அவள் முதலில் புற்றின் ஒரு துவாரத்தில் கையை விட்டுவிட்டு வெகு நேரம் கழித்து வெளியே எடுத்தாள். கூட்டத்தையும் பார்த்தாள். குனிந்து ஓலைப்பாய் மேல் கிடக்கும் குழந்தையும் பார்த்தாள். பின் அடுத்த துவாரத்துக்குள் கையை விட்டாள். அதற்கும் பின் இன்னொரு துவாரத்துக்குள்ளும் கையை விட்டாள்.

நல்லவேளை அவளை பாம்பு தீண்டவில்லை.

பிரபாகரோ புற்றுக்குள் நிச்சயம் பாம்பு இருக்க வாய்ப்பில்லை என்று நினைத்துக் கொண்டான்.

அந்த பெண்ணும் வியர்த்து வடிய குழந்தையை குனிந்து கையில் எடுத்துக் கொண்டு கூட்டத்தைப் பார்த்தாள்.

அந்த கிழவர் அவளைப் பார்த்து கன்னத்தில் படபட வென்று போட்டுக் கொண்டார். "தாயி... நீ சுத்தமானவ தாயி... சுத்தமானவ... அதை நீ நிரூபிச்சுட்டே..." என்று உணர்ச்சிவசப்பட்டார். அவள் கணவனும் தப்பு செய்து விட்டது போல முன்னால் வந்தான்.

"எடேய்... இப்ப உன் சந்தேகம் தீர்ந்துச்சால்ல?" என்று கேட்கவும் கோவில் மாடு போல தலையை ஆட்டினான்.

"இனி ஒழுக்கமா எந்த குத்தமும் சொல்லாம இவளோட வாழ்ற வழிய பாரு..."

"சரிங்கய்யா..."

"சந்தோசம். வந்த சோலி முடிஞ்சிச்சு. பஞ்சாயத்தும் கலையுது..." - என்றார் அந்த பெரியவர். அப்படியே பிரபாகரை பார்த்தவர், "நீ ஒண்ணும் எங்க குறைகள போக்க வேணாம். நாங்க இந்த மலைல உங்க சங்காத்தம்



இல்லாம நல்லாதான் இருக்கோம். நல்லது பண்றேன்னு எங்க ஊருக்கு வந்து கடை கண்ணி வெச்சு எங்க வாழ்க்கை முறையை மாத்தற சோலியெல்லாம் வேண்டாம். ஓடிடு...." - என்றார் உரத்த குரலில்.

பிரபாகருக்கு அவர் பேச்சு பரிதாபத்தைத்தான் தந்தது. அவர் பேசியதை தொடர்ந்து மளமளவென்று எல்லோரும் கலைந்து அங்கிருந்து அகன்றனர்.

அந்த எட்டாங்கிளாஸ் இளைஞனும் பிரபாகரும் மட்டும் இறுதியாக மிஞ்சியிருந்தனர்.

"என்னா சார்... எங்க பெருசு பேசினத கேட்டு வெறுத்து போய்ட்டீங்களா?"

"ஆமாம்ப்பா.... ஏன் இப்படியே இருக்காங்க."

"அதை ஏன் கேக்கறீங்க... இவங்க கூட இருந்து கிட்டு நான் பட்ற பாட்டுக்கும் ஒரு அளவு இல்லை. இந்த காட்டை விட்டே ஓடிடலாம்னாலும் எனக்கு முத்திரை கட்டு போட்டுருக்காங்க..'

"முத்திரை கட்டா - அப்படின்னா?"

"என் தோள் பட்டையை பாருங்க தெரியும்" - என்று பனியனை சற்று ஒதுக்கிக் காட்டினான். அவன் முதுகில் திரிசூலக்குறி பச்சை குத்தப்பட்டிருந்தது.

"என்ன இது?"

"முத்திரை..."

"எதுக்கு?"

"நான் எங்க கூட்டத்தை விட்டு ஓட்னவன்கறதுக்கு..."

"ஓட்றதுன்னா... புரியற மாதிரி சொல்லுப்பா."

"அட நீங்க ஒண்ணு சார். நான் இந்த மலைக்காடே வேண்டாம்னு டவுன் பக்கம் போக ஆசைப்பட்டு போகவு

செய்துட்டேன். ஆனா என்னை டவுன்ல வாழ விடாம அப்படியே பிடிச்சு இழுத்துகிட்டு வந்து என் தோள் பட்டைலயும் முத்திரை குத்திட்டாங்க. இனி ஒரு தடவை நான் ஓடுனா அவ்வளவுதான். என்னை நாகமரத்துல கட்டிப் போட்டு பாம்புக்கு இரையாக்கிடுவாங்க...'' என்றான்.

''என்னது நாகமரத்துல கட்டிப் போட்றதா?''

''ஆமாம் சார்... அதோ அங்க இருக்கு பாருங்க ஒரு மரத்தண்டு..'' அந்த இளைஞன் பிரபாகருக்கு நாகலிங்க மரத்தை ஒட்டி பூமியில் குழி தோண்டி நடப்பட்டிருந்த மரத்தண்டை காண்பித்தான்.

''அடப்பாவிகளா... பர்மனன்டா ஒரு மரத்தை இதுக்காக நட்டே வெச்சிருக்கீங்களா?''

''ஆமாம் சார்... அங்க ஒருத்தரை கட்டிப் போட்டா அவன் வாழ்க்கை அவ்வளவுதான் - முடிஞ்சு போச்சு.''

''எப்படி?''

''இந்த நாகவனத்துல கார்கோடன்கற பேர்ல ஒரு பாம்பு சுத்தி வந்துகிட்டிருக்கு. அது நாகவன கட்டுப் பாட்டை மீறினவங்களை விழுங்கிடும் சார்.''

''கார்கோடகன்கற பேர்ல ஒரு பாம்பு - அது ராத்திரி வந்து விழுங்கிடுமா?''

''ஆமாம்...''

''அப்படி இதுக்கு முந்தி அது யாரையாவது விழுங்கி யிருக்கா?''

''அதை ஏன் கேக்கறீங்க... இதுவரை கடந்த இரண்டு வருஷத்துல மட்டும் அது நாலு பேரை விழுங்கியிருக்கு.'' - அவன் சொன்ன தகவல் பிரபாகர் நெஞ்சை அழுத்தியது. அதிர்வை முகத்தில் காட்டியபடியே கேட்டான்.



''உன் பேர் என்னன்னு சொல்லவேயில்லையே...?''

''புனுகு சுந்தரம் சார்...''

''புனுகு சுந்தரமா... அழகு சுந்தரம் கேள்விப்பட் டிருக்கேன். இது என்ன புனுகு சுந்தரம்...''

''இந்த நாகவனத்துல புனுகு பூனைகள் நிறைய உண்டு சார். அதுங்ககிட்ட இருக்கிற புனுகை எடுக்கற தால எனக்கு அந்தப் பெயர்...''

''பூனையோட புனுகு எதுக்கு... அதனால என்ன பயன்?''

''அது ஒரு மருந்து சார்... வாசனை திரவியத்துக்கும் பயன்படுத்துவாங்க.''

''மருந்தா... அதை எப்படி மருந்தாக்குவீங்க?''

''அய்ய... எனக்கு அதை மருந்தாக்க தெரியாது. ஆனா எங்க இனத்துல அதை காயத்துக்கு பயன்படுத்து வோம். புனுகோட ஆமணக்கெண்ணையை கலந்து பூசுனா தீக்காயம் கூட வேகமா ஆறிடும்.''

''அப்ப அதை எடுத்து யாருக்கு கொடுப்பீங்க?''

''இந்த காட்டுக்குள்ளே ஒரு சித்த வைத்தியர் இருக் காரு... அவராண்ட கொடுத்துடுவேன். அவரு பதிலுக்கு அஞ்சு பத்து கொடுப்பார்...''

''அஞ்சு பத்தெல்லாம் போதுமா?''

''எங்களுக்கென்னங்க. காட்டுல வரகரிசி விளை யுது. இதுபோக காயும் பழமும் அங்கங்க பயிர் பண் றோம். முயலு, பன்னின்னு வேட்டையும் ஆடுவோம். எனக்கு இந்த அஞ்சும் பத்தும் அதிகங்க...''

- புனுகு சுந்தரம் பேசப் பேச பிரபாகருக்குள் பல மாதிரி எண்ணங்கள்.

''சரிங்க ரொம்ப பேசிட்டேன்... உங்க பேரென் னன்னு சொல்லவேயில்லையே...''

''என் பேர் பிரபாகர்.''

''பிரபாகரன்... இது ரொம்ப பிரபலமான பேரு தாங்களே..?''

''ஆமாம். பிரபாகரன்னா உடனே எல்லோருக்கும் சிலோன் தான் நினைவுக்கு வரும்...''

''ஆமாங்க. இங்க கூட பிரபாகரன் பத்தி சினிமா படம் எடுக்க வந்தாங்க. கடைசில அவங்கள்ள ஒருத்தரை பாம்பு கடிச்சி அவர் செத்து போகவும் நேரம் நல்லா இல்லேன்னு திரும்பி போயிட்டாங்க...''

''ஓ... சினிமா ஷூட்டிங்லாம் இங்க நடக்க இருந் ததா?''

''ஆமாங்க...''

''சரி நீ சினிமால்லாம் பாத்துருக்கியா?''

''எங்க... இந்த காட்டை விட்டு தான் நாங்க யாரும் வெளியவே போகக்கூடாதே..?''

''போகட்டும். இந்த மலைல சினிமா ஸ்டார் ஒருத்தர் பங்களாவே கட்டியிருக்கிறதும் தெரியும்தானே?''

''நல்லா தெரியுமே... நம்ம இந்திரஜித் சார் தானே?''

''அவரை பாத்துருக்கியா நீ...''

''அட என்ன சார் நீங்க.. என்கூட தான் அவர் வேட்டைக்கே வருவார்...'' - புனுகு சுந்தரம் அப்படி சொல்லவும் பிரபாகருக்கு சற்று ஆச்சரியமும் கூட. பார்க்க சாதாரண தோற்றத்தில் இருக்கும் இவ னிடம் இன்னும் எவ்வளவு விஷயங்கள் இருக்கிறதோ என்கிற எண்ணத்துடன் அப்படியே புனுகு சுந்தரத்தை வளைக்கத் தொடங்கினான்.

''சுந்தரம்... நான் இப்ப இந்த நாகவனத்துக்கு வந்து ருக்கறதே இந்திரஜித் சாரை பார்த்து பேட்டி எடுக்கத்தான்... அவர் இங்க தான் இருக்கார்னு எங்களுக்கு தகவல் வந்தது. அவர் இங்க தான் இருக்காரா... உனக்கு தெரியுமா?''



''அது.. அது.. தெரியாதே சார்...'' - என்று அப்படியே பின்வாங்க தொடங்கினான் சுந்தரம்.

''நீ இழுக்கறத பார்த்தா உனக்கு தெரியும்கற மாதிரி தான் எனக்கு தோணுது...''

''அட நீங்க வேற சார்... நான் வர்றேன் சார்... எனக்கு நிறைய வேலைங்க இருக்கு'' என்று அதுவரை கலகலப்பாக பேசிக் கொண்டிருந்தவன் பின்வாங்கப் பார்த்தான். பிரபாகருக்கும் புரிந்தது. விட்டுப் பிடிக்க விரும்பியவனாக,

''சரி நீ புறப்படு.. ஒரே ஒரு உதவி மட்டும் செய்தா நல்லா இருக்கும்...''

''என்ன சார்?''

''நான் இங்க ஒரு இரண்டு மூணு நாள் தங்க விரும் பறேன். தங்க எங்க இடம் கிடைக்கும்?''

''இது வனம் சார்... இங்க போய் எங்க சார் தங்க முடியும்.''

''அப்ப அந்த வைத்தியர்லாம் வந்தா எங்க தங்கு வார்?''

''அவர்... அவர் காட்டுல அர்ஜுனன் சுனைன்னு ஒண்ணு இருக்கு. அங்க ஒரு குகை இருக்கு. அதுல தங்கிக் குவார்.''

''குகைக்குள்ளயா... வெளிச்சமே இருக்காதே?''

''தீப்பந்தம் வெச்சுக்க வேண்டியதுதான்... என்ன சார் நீங்க இடம் கிடைக்கறதே பெருசு. உங்களுக்கு லைட்டெல்லாம் போட்டு தருவாங்களாக்கும்?'' - என்று கேட்டபடியே விலகிப் போனான்.

பிரபாகருக்கும் உள்ளுக்குள் பூச்சிப் பறக்கத் தொடங் கியது.

# 5

பாரத மண்ணில் எவ்வளவோ வளங்கள் இருந்த போதிலும் சித்த புருஷர்கள் தேடிச் சென்றது சில வனங்களைத்தான். அவைகளில் தென்பகுதியில் உள்ள பொதிகையும், கொல்லியும், சதுரகிரியும் பிரதானமானவை. இவைகளை விட இமயமலை சார்ந்த பகுதிகளில் உள்ள சில வனங்கள் மூலிகைகளுக்கு பேர் பெற்றவை. அங்கேயும் சித்த புருஷர்கள் சென்று மூலிகை செடிகளை இனம் கண்டு கொண்டார்கள்.

இப்படிப்பட்ட வனங்களுக்கு நடுவே தாருகா வனம், நாகவனம், மாயவனம், பிருந்தாவனம், சஞ்ஜீவி வனம் - என்னும் பஞ்ச வனங்கள் தேவதைகள் கோயில் கொண்டிருக்கும் வனங்களாகும்.

அதில் நாகவனத்தில் கோயில் கொண்டிருக்கும் நாகவல்லி அம்மன் மிகவும் சக்தி வாய்ந்தவள். இவள் இரவுப் பொழுதுகளில் வனத்தில் காலில் சதங்கையுடன் நடந்து செல்வாளாம். அப்படி இவள் செல்கையில் இவளை தரிசிப்பவர்களுக்கு அவர்கள் ஆயுளுக்கும் நோய் தாக்காதாம்... இவள் அவ்வாறு இரவு உலா செல்வதற்கு காரணம் அந்த வனத்தில் விளையும் சில மூலிகைகளை பரிபாலிக்க என்று சொல்பவர்களும் உண்டு.

நாகவனத்தில் முதுமையை தடுத்து நிறுத்தும் 'யவ்வன காந்தி' என்னும் மூலிகையும் இருப்பதாகவும் இது மனித நடமாட்டம் இருந்தால் வளராது. இதற்கு நில அதிர்வே துளியும் கூடாது என்பதெல்லாம் இதன் பின்புலத்தில் உள்ள மர்மமான செய்திகளாகும்.

**அ**ந்த இடத்தில் டவர் இருந்தது!

எனவே ஆசிரியர் கோபால்தாசுடன் பிரபாகரால் பேச முடிந்தது.



''பிரபா ரீச் ஆயிட்டீங்களா?''

''இப்ப நாகவனத்துல இருந்துதான் சார் பேசறேன்.''

''மழை எல்லாம் ஒண்ணுமில்லையே?''

''இல்லை சார்... அதேசமயம் இங்க தங்கவும் வசதிகள் இல்லை.''

''அப்படின்னா பக்கத்துல இருக்கற டவுன்ல தங்கிட்டு போயிட்டு வாங்க...''

''ரொம்ப தூரம் சார்... இருந்தாலும் நான் பாத்துக்கறேன்.''

''நீங்க அனாவசியமா காட்டுக்குள்ள தங்கி கஷ்டப் படாதீங்க. அங்க நிச்சயம் பாரெஸ்ட் ஆபீஸ் இருக்கும். ஆபீசர்ஸ் வந்தா தங்க கெஸ்ட் ஹவுஸ் நிச்சயம் இருக்கும். போய் நம்ம பத்திரிகை பேரை சொன்னா போதும். நிச்சயம் அனுமதிப்பாங்க...''

''இது நல்ல ஐடியா சார். நான் இப்பவே போறேன்.

பை த பை இந்திரஜித் இங்கதான் சார் இருக்கார்.

''அதுக்குள்ள எப்படி கண்டுபிடிச்சீங்க?''

''அகஸ்மாத்தா இங்க ஒரு கேரக்டர் சிக்கிச்சு. போட்டு வாங்கினேன். நாகவனத்துல இந்திரஜித் மட்டும் மர்மம் இல்ல சார்.''

''வேற எதெல்லாம் மர்மம்?''

''நிறைய இருக்கு சார்... இங்க மர்மம் இல்லாத இடமே கிடையாது.''

''இப்படி பொதுவா சொன்னா எப்படி பிரபாகர் சில விஷயங்கள குறிப்பிட்டுச் சொன்னால்ல எனக்கு புரியும்?''

''சார் வைத்தியர் ராமலிங்கைய்யாவும் இங்கதான் இருக்கார். சமீப காலத்துல ஒரு கம்பத்துல கட்டிப் போட்டதுல நாலு பேரை பாம்புங்க விழுங்கியிருக்கு...''

''மஷனுங்கள பாம்புங்க விழுங்குதா?''

''நாலு பேரை விழுங்கியிருக்கு - இன்னமும் கட்டுப் பாடுங்கற பேர்ல மூடத்தனமும் முட்டாள்தனமும்

நிறையவே இருக்கு சார். ஒரு பெண்ணுக்கு குழந்தை
பிறந்திருக்கு. அவ புருஷன் அந்த குழந்தை தன...
பிறக்கலேங்கறான். உடனே பஞ்சாயத்து கூட்றாங்க...
கூட்ற இடம் ஒரு பாம்பு புத்துகிட்ட... அந்த பெண்ணு
பத்தினிங்கறத நிரூபிக்க பாம்பு புத்துக்குள்ள கை விட்...
சார்...''

''இதை எல்லாம் நேர்ல பார்த்திங்களா?''

''ஆமாம் சார்... போட்டோவும் எடுத்துட்டேன்.''

''சபாஷ். இப்படித்தான் காண்ட்ரவர்ஸியான வி...
யங்கள் கண்ணுல பட்டா விட்டுடக் கூடாது.''

''ஷ்யூர் சார்...''

''சரி, இந்திரஜித் அங்க இருக்கிறது உறுதின்னு எ...
வெச்சு கண்டுபிடிச்சீங்க.''

''புனுகு சுந்தரம்னு ஒரு கேரக்டர். வேடிக்கையா...
இருக்குல்ல?''

''மலை ஜாதிக்காரங்க பேரெல்லாம் இப்படித்தான்
இருக்கும். புனுகு எடுப்பவர்ங்கறதால புனுகு சுந்தரம்,
தேன் எடுத்தா தேன் பாண்டியன், மாசிக்காய் பொறுக்
குனா மாசிமுத்து... இப்படி சொல்லிக்கிட்டே போகலாம்.''

''சார் உங்களுக்கு நல்ல நாலட்ஜ் சார்.''

''விஷயத்துக்கு வாங்க... புனுகு சுந்தரம்கிட்ட
விட்டீங்க?''

''அந்த புனுகு சுந்தரம் தான் சார் இந்திரஜித் சாருக்கு
இந்த காட்டுல எஸ்கார்ட்... அவனே இதை சொன்னான்.
ஆனா இந்திரஜித் சார் இங்கதான் இருக்காரான்னு கேட்க
வும் அப்படியே வாயை மூடிகிட்டான். அதுக்கப்புறம்
என்கிட்ட பேசவும் இல்லை... ஓடிட்டான்.''

''அப்ப உங்க யூகம் ரொம்ப சரிதான் பிரபாகர்.
எனவே... போய் இறங்கின வேகத்துல இவ்வளவு தகவல்
களை திரட்டியிருக்கீங்க... இதுதான் ஒரு நல்ல பத்திரிகை
யாளனுக்கு லட்சணம்.''



''சார் முழுசா எல்லாத்தையும் கண்டுபிடிச்சிட்டு
அப்புறமா நான் வரும்போது என்ன பாராட்டுங்க. இப்ப
வேண்டாம். நான் இப்ப தான் முதல் படியில் கால்
எடுத்து வெச்சுருக்கேன்...'' - என்று தன்னடக்கத்தோடு
சொல்லிக் கொண்ட பிரபாகர் அடுத்து அதே போனில்
...ப் பிடித்தது சரளாவை...

''சர்...''

''செல்லம் கொஞ்சாம விஷயத்துக்கு வாப்பா...''

''நாகவனத்துல நடுகாட்டுல நின்னு பேசிக்கிட்டிருக்
கேன்...''

''வனம்னாலும் காடுன்னாலும் ஒரே பொருள்தான்..''

''என்னை குத்தம் சொல்லாம உன்னால பேசவே
முடியாதா - சரளா?''

''குற்றமில்லாம முதல்ல நீ பேசு... குத்தமில்ல -
குற்றம்... நீ ஒரு தமிழ் பத்திரிகையோட துணை ஆசிரியன்.
நல்ல தமிழ்ல பேசி செயல்படு...''

''ஐய்யோ... தூய தமிழ்ல நான் பேசுவேன் உன்
னாலதான் கேட்டுக்க முடியாது.''

''யார் சொன்னது... முதல்ல நீ பேசிட்டு பிறகு
சொல்.''

''வேண்டாம் தாயே நான் விஷயத்துக்கு வர்றேன்.
நல்லா கேட்டுக்கோ... நீ சொன்ன அந்த வைத்தியர்
இங்க தான் இருக்கார். உங்கப்பாவுக்கு தேவையான
மூலிகைகளும் இங்க நிறையவே இருக்கு.''

''சொன்னா போதாது... கொண்டு வரணும்... அப்பா
வும் குணமாகணும். அந்த கொள்ளைக்கார டாக்டர்
முன்னால நான் அப்பாவை கம்பீரமா கூட்டிகிட்டும்
போகணும். அப்ப தான் என் அப்பா உன் மாமனாராக
முடியும். இல்ல என்ன மறந்துட வேண்டியதுதான்...''

''நல்லா பேசிகிட்டே வந்து கடைசில புள்ளி
வைக்கறியே...''

''பொறுப்பா நடந்துக்கோன்னு சொல்லத்தான்...''

''சிலுசிலுங்கற மாலை வேளைல இருட்டப் போகுது. இங்க இப்ப நீ என் பக்கத்துல இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும் தெரியுமா?''

''சினிமா ஹீரோ மாதிரி கனவு வேணா கண்டுக்கோ... நிஜத்துல நோசான்ஸ். ஏன்னா நான் இங்க இப்ப ஒரு மூட்டை துணியை தோய்ச்சு காயப் போட்டாகணும்...''

- சரளா அவன் முகத்தை கோண வைத்தாள்.

அவனும் ''சரிம்மா ஆதிபராசக்தி... நான் இதோட கட் பண்ணிக்கறேன்'' என்று பேசி முடித்து செல்போனையும் பாக்கெட்டில் போட்டான். இருள் கவிய ஆரம்பித்து விட்டது. சாலை மேல் ஒருவர் கூட இல்லை. கொஞ்சம் பயம் கவ்வத் தொடங்கியது. விசுக்கென்று ஒரு கீரிப்பிள்ளை அவன் எதிரில் கடந்தோடிப் போனது.

வன இலாகாவின் கெஸ்ட் அவுஸ் எந்த பக்கத்தில் இருக்கும்? என்ற கேள்வியோடு நடக்கத் தொடங்கினான்.

அதேசமயம் அவனை ஒரு மரத்தின் பின்னால் இருந்து வந்த ஒரு உருவம் நின்று கவனிக்கத் தொடங்கியது.

இருளில் அந்த உருவத்தை உணர முடியவில்லை!

## 6

நாகவனத்தில் எவ்வளவோ அபூர்வங்கள்! அதில் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு அதிசயம் அழிஞ்சி மரமாகும். இந்த மரத்தின் விதைகளுக்கு அபூர்வமான குணம் உண்டு. மரத்தில் இருந்து உதிர்ந்து விழும் இதன் விதைகள் வேறு எங்கும் செல்லாது. அந்த விதைகளை அழிஞ்சில் மரமே காந்தம் போல் தன்னோடு இழுத்துக் கொள்ளும். வேறு எந்த மரத்துக்கும் இப்படி ஈர்த்துக் கொள்ளும்



ஆற்றல் கிடையாது. இதனால் மாந்திரிகத்தில் இந்த மரத்தை வசியம் புரிவதற்கு பயன்படுத்துவார்கள்.

அழிஞ்சில் மரத்தில் கட்டில் செய்து அதில் தினமும் படுத்து எழுபவர்கள் மனதில் நினைப்பதெல்லாமும் நடந்துவிடும் என்பது நம்பிக்கை.

ஆதிசங்கரர் கூட தனது பாடல் வரிகளில் ஒரு பக்தன் என்பவன் கடவுளோடு எப்படி தொடர்பு கொள்ள வேண்டும் என்பதற்கு மூன்று உதாரணங்களை கூறியுள்ளார்.

கற்புள்ள மனைவி தன் கணவனை தேடி அடைவதை போலவும்,

ஊசியும் நூலும் பிரியாமல் இருப்பது போலவும்

அழிஞ்சில் விதை அந்த மரத்தோடு சென்று சேர்ந்துவிடுவது போலவும் ஒரு பக்தனானவன் கடவுளை சென்று சேர வேண்டும் என்கிறார்!

இரவு மணி எட்டு!

கெஸ்ட் ஹவுசில் மின்சாரம் இல்லை.

பெட்ரோமாக்ஸ் தான் எரிந்து கொண்டிருந்தது.

பிரபாகர் கெஸ்ட் ஹவுசிற்கு தட்டுத் தடுமாறிக் கொண்டு வந்தபோது வாட்சர் வரதராஜன் தான் இருந்தார். செல்போனில் பாடல்களை சேமித்துக் கொண்டு அதை இயர்போன் வழியாக கேட்டபடி நாற்காலி ஒன்றில் காலை நீட்டி அமர்ந்திருந்தார். கழுத்தில் மஃப்ளரை சுற்றி குளிருக்கு இதமாக எதிரில் கணப்பு வளர்த்திருந்தார்.

கணப்பில் ஒண்ணரை முழத்துக்கு தீ நாக்குகள்.

அதன் அருகில் வந்து நின்றான் பிரபாகர்.

''யாரது?''

''என் பேர் பிரபாகர் சார் - ஜர்னலிஸ்ட்.''

''இப்படியா ராத்திரி நேரத்துல வருவீங்க... என்ன சார் விஷயம்?''

''உக்கார சொல்ல மாட்டீங்களா?''

''இருக்கறது ஒரு நாற்காலி. அதுல நான் உக்காந்துருக்கேன். இருங்க உள்ள ஒரு ஸ்டூல் இருக்கு. எடுத்துட்டு வரேன்'' - என்று எழுந்து சென்று ஸ்டூலோடு வரும்போது பிரபாகர் அதுவரை எதற்கு நின்று கொண்டு என்று அவர் அமர்ந்திருந்த சேரில் அமர்ந்திருந்தான். அவர் வரவும் எழுந்தான். அவரோ 'பரவால்ல உக்காருங்க' என்றபடி ஸ்டூலில் அமர்ந்து கொண்டார்.

''பொறவு?''

''என்ன சொன்னீங்க?''

''அப்புறமா என்ன விசயம்னு கேட்டேன்.''

''நிறைய விசயம் இருக்கு பேசறதுக்கு... ஆமா நான் இங்க தங்க இடம் கிடைக்குமா?''

''முதல்ல வந்த விசயத்த சொல்லுங்க...?''

- அவர் கேள்விக்கு இந்திரஜித்துக்காக' என்று கூறி விடலாமா என்று யோசித்தவன் வேண்டாம் என்கிற முடிவோடு

''சும்மா காட்டுப்பக்கமா சுத்தி அலைஞ்சிட்டு அதை வெச்சுட்டு ஒரு கட்டுரை எழுதலாம்னு வந்தேன்'' என்றான்.

''அது சரி... அதுக்கு பகல்ல வராம இப்படியா ராப்போதுல வருவீங்க?''

''இல்ல சார்... நான் மதியமே வந்துட்டேன். தங்க இங்க ஓட்டல் இருக்கும்னு நினைச்சது என் முட்டாள் தனம். அலை அலைன்னு அலைஞ்சு இது வரக்காடுன்னு தெரிஞ்சுகிட்டு எங்க எடிட்டருக்கு போன் பண்ணேன். அவர்தான் வன இலாகாவுக்கு கெஸ்ட் அவுஸ் இருக்கும். அங்க போயிடுன்னாரு... அதான் வந்துருக்கேன்...''

''பேர்தான் கெஸ்ட் ஹவுஸ் - உள்ள பெருச்சாளியும் கீரிப்பிள்ளைகளும் தான் இருக்குதுங்க... ஒரு கட்டில்



நாற்காலி கூட கிடையாது. தரைல கால் வெச்சாலே தேள்னு இழுக்கும்...'' மிரட்டுவது போலவே பேசினார் அந்த வாட்சர்.

''பரவால்ல சார்... இன்னிக்கு பொழுதை கடத்திட்டா போதும்... நாளைக்கு வேற இடமா பார்த்துக்குவேன்...?''

''நாளைக்கு வேற இடம்னா இங்க ரொம்ப நாள் தங்க எண்ணமா?''

''தங்கினா தானே சார் சுவாரஸ்யமான விஷயங்கள எழுத முடியும்...''

''அது சரி.. நாங்க பாட்டு ஏதோ சம்பளத்தை வாங்கிகிட்டு இங்க எங்க வண்டிய ஓட்டிகிட்டு இருக்கோம். நீங்க கண்டத எழுதி இந்த காட்டை ஒரு க்ரைம் ஏரியாங்கற மாதிரி புரொஜக்ட் பண்ணிடாதீங்க...'' - வாட்சர் குரலில் பயம் தெரிந்தது.

''நீங்க பயப்பட்றத பார்த்தா இந்த காட்டுல நிச்சயமா ஏதோ தப்பு தண்டா நடக்கற மாதிரி தெரியுதே...''

''அட நீங்க வேற சார்... போய் படுத்து தூங்கற வழிய பாருங்க...''

''நீங்க தூங்கலையா?''

''தூக்கம் வரும்போது தூங்கிக்குவேன். நாளைக்கு பாரெஸ்டர் ஐயா வேற ரைடுக்கு வரப் போறாரு...''

''அவர் பேரு...''

''ஈஸ்வரமூர்த்தி...''

''ஆமா இந்த காடு எவ்வளவு பெருசு...''

''ஏன் தூக்கம் வரலியா... என் வாயை புடுங்கறீங்க?''

''அட என்ன சார் சும்மா தெரிஞ்சுக்கதான்...'' என்ற பிரபாகர் கெஸ்டு ஹவுசுக்குள் தன் முதுகுச் சுமையான பேக்கை இறக்கி வைத்துவிட்டு வந்தான்.

வாட்சர் வரதராஜனும் தனக்குத் தெரிந்ததை கூறத் தொடங்கினார்.

''சரி... எனக்கு தெரிஞ்சதை சொல்றேன். இந்த காடு மொத்தம் அறுபது மைல் சதுர ஹெக்டேர் பரப்பளவு கொண்ட காடு. இதுல 58 சுனைங்க. பதினாலு ஓடைங்க. நாலு அருவிங்க... நாலு லட்சம் மரங்கள் இருக்கு! இது போக 2005-ஆம் ஆண்டு சர்வேப்படி முப்பது யானை, முன்னூத்தி இருபது காட்டெருமை, எழுநூத்தி பத்து மான், ஆயிரத்துக்கும் மேலான வரையாடுகள். ஒரு அஞ்சாறு சிறுத்தைங்க, பத்து பதினஞ்சு கரடிங்க இருக்கு.''

''நாலு லட்சம் மரங்கள் இருக்குதா?''

''இது கம்மி... 1955-ஆம் வருசத்துல இதே காட்டுல ஏழரை லட்சம் மரங்கள் இருந்துருக்கு.''

''அப்ப மூணரை லட்சம் மரங்களை காலி பண்ணிட்டிங்கன்னு சொல்லுங்க.''

''காட்டை திருத்திகிட்டே இருக்கறதுன்னு ஒரு விஷயம் இருக்கு. அதை சரியாச் செய்யணும். ஒரு மரத்தை அது முதிர்ந்திடிச்சின்னு வெட்டிக் கழிச்சா அதுக்கு பதிலா ஒன்பது மரம் நடணும்னு வன சாஸ்த்ரம் சொல்லுது. ஆனா யார் செய்யறா?''

''வன சாஸ்த்திரமா... அப்படி ஒண்ணு இருக்கா?''

''பொறவு... ஆனா அது டிபார்ட்மெண்ட்ல இல்ல. இந்த மலைசாதி மக்ககிட்ட இருக்கு.''

''அது என்ன புத்தகமா இருக்கா இல்லை வேற வடிவத்துலயா?''

''புத்தகமெல்லாம் இல்லை. காட்டுல ஏது புத்தகம்? இருந்தாலும் இந்த காட்டோட மழை காத்துல அதை வெச்சு பாதுகாக்க முடியாது.''

''வேற எதுல இருக்கு... இந்த பனை ஏடுகள்னு சொல்வாங்களே அதுலையா?''

''இல்ல... எல்லாமே மனசுலதான் இருக்கு.''

''மனசுலயா?''



''ஆமாம்... இந்த காட்டுக்குடில வனசாஸ்த்ரம் தெரிஞ்சவர் ஒரே ஒருத்தர்தான். அவர் பேர் தர்மைய்யா...''

''அவரை நான் பாக்க முடியுமா?''

''எங்க... அவர் செத்து ஒரு மாசமாச்சே...?''

''அடடா... எப்படி செத்தார்?''

''எப்படியோ செத்தார். இப்ப அதுவா முக்கியம். ஆனா இதுல ஒரு குறிப்பிடப்பட வேண்டிய விசயம் இருக்குதுங்க...''

''என்ன அது?''

''நான் இங்க சர்வீசுக்கு வந்த நாலு வருசம் ஆச்சு... இந்த நாலு வருசத்துல இந்த மலையில இருக்கற பதிமூணு நாட்டுலயும் வரிசையா வன சாஸ்த்ரம் தெரிஞ்ச பெருசுங்களா செத்துகிட்ட வர்றாங்க!'' - வாட்சர் வரதராஜன் சொன்னதில் ஒரு எதார்த்தம் இருப்பது போலவும் இருந்தது - மர்மம் இருப்பது போலவும் இருந்தது.

''ஆமா ஏதோ இந்த மலைல பதிமூணு நாடுங்க இருக்கறதா சொன்னீங்களே. அது என்ன நாடு.. எனக்கு புரியல...''

''நாடுன்னா உடனே தமிழ்நாடு ஆந்திரான்னு நினைச்சுட்டீங்களா? அப்படி கிடையாது. மலைல கிராமங்களதான் நாடும்பாங்க... நடுநாடு, வடநாடு, தென்னாடு, கல்நாடு, பூ நாடு, மர நாடு, கொடி நாடு, மேல்நாடு, கிழக்கு நாடு இப்படி திசை, அடையாளம். இதை வெச்சுதான் நாடுன்னு சேர்த்து சொல்வாங்க.''

''அப்ப இங்க பதிமூணு நாடுங்க இருக்குதா?''

''ஆமா... இந்த கெஸ்ட் ஹவுஸ் இருக்கிறது மேல் நாடு...''

''சரி... நான் ஏதாவது ஒரு வன சாஸ்த்ரம் தெரிஞ்ச பெரியவரையாவது பார்க்க முடியுமா?''

''அதான் சொன்னேன்ல... வரிசையா அந்த பெருசுங்களா செத்துகிட்டு வருதுங்க. எனக்கு தெரிஞ்சு கொடி

''சரி... எனக்கு தெரிஞ்சதை சொல்றேன். இந்த காடு மொத்தம் அறுபது மைல் சதுர ஹெக்டேர் பரப்பளவு கொண்ட காடு. இதுல 58 சுனைங்க. பதினாலு ஓடைங்க. நாலு அருவிங்க... நாலு லட்சம் மரங்கள் இருக்கு! இது போக 2005-ஆம் ஆண்டு சர்வேப்படி முப்பது யானை, முன்னூத்தி இருபது காட்டெருமை, எழுநூத்தி பத்து மான், ஆயிரத்துக்கும் மேலான வரையாடுகள். ஒரு அஞ்சாறு சிறுத்தைங்க, பத்து பதினஞ்சு கரடிங்க இருக்கு.''

''நாலு லட்சம் மரங்கள் இருக்குதா?''

''இது கம்மி... 1955-ஆம் வருசத்துல இதே காட்டுல ஏழரை லட்சம் மரங்கள் இருந்துருக்கு.''

''அப்ப மூணரை லட்சம் மரங்களை காலி பண்ணிட்டிங்கன்னு சொல்லுங்க.''

''காட்டை திருத்திகிட்டே இருக்கறதுன்னு ஒரு விஷயம் இருக்கு. அதை சரியாச் செய்யணும். ஒரு மரத்தை அது முதிர்ந்திடிச்சின்னு வெட்டிக் கழிச்சா அதுக்கு பதிலா ஒன்பது மரம் நடணும்னு வன சாஸ்த்ரம் சொல்லுது. ஆனா யார் செய்யறா?''

''வன சாஸ்த்திரமா... அப்படி ஒண்ணு இருக்கா?''

''பொறவு... ஆனா அது டிபார்ட்மெண்ட்ல இல்ல. இந்த மலைசாதி மக்ககிட்ட இருக்கு.''

''அது என்ன புத்தகமா இருக்கா இல்லை வேற வடிவத்துலயா?''

''புத்தகமெல்லாம் இல்லை. காட்டுல ஏது புத்தகம்? இருந்தாலும் இந்த காட்டோட மழை காத்துல அதை வெச்சு பாதுகாக்க முடியாது.''

''வேற எதுல இருக்கு... இந்த பனை ஏடுகள்னு சொல்வாங்களே அதுலையா?''

''இல்ல... எல்லாமே மனசுலதான் இருக்கு.''

''மனசுலயா?''



''ஆமாம்... இந்த காட்டுக்குடில வனசாஸ்த்ரம் தெரிஞ்சவர் ஒரே ஒருத்தர்தான். அவர் பேர் தர்மைய்யா...''

''அவரை நான் பாக்க முடியுமா?''

''எங்க... அவர் செத்து ஒரு மாசமாச்சே...?''

''அடடா... எப்படி செத்தார்?''

''எப்படியோ செத்தார். இப்ப அதுவா முக்கியம். ஆனா இதுல ஒரு குறிப்பிடப்பட வேண்டிய விசயம் இருக்குதுங்க...''

''என்ன அது?''

''நான் இங்க சர்வீசுக்கு வந்த நாலு வருசம் ஆச்சு... இந்த நாலு வருசத்துல இந்த மலையில இருக்கற பதிமூணு நாட்டுலயும் வரிசையா வன சாஸ்த்ரம் தெரிஞ்ச பெருசுங்களா செத்துகிட்ட வர்றாங்க!'' - வாட்சர் வரதராஜன் சொன்னதில் ஒரு எதார்த்தம் இருப்பது போலவும் இருந்தது - மர்மம் இருப்பது போலவும் இருந்தது.

''ஆமா ஏதோ இந்த மலைல பதிமூணு நாடுங்க இருக்கறதா சொன்னீங்களே. அது என்ன நாடு.. எனக்கு புரியல...''

''நாடுன்னா உடனே தமிழ்நாடு ஆந்திரான்னு நினைச்சுட்டீங்களா? அப்படி கிடையாது. மலைல கிராமங்களதான் நாடும்பாங்க... நடுநாடு, வடநாடு, தென்னாடு, கல்நாடு, பூ நாடு, மர நாடு, கொடி நாடு, மேல் நாடு, கிழக்கு நாடு இப்படி திசை, அடையாளம். இதை வெச்சுதான் நாடுன்னு சேர்த்து சொல்வாங்க.''

''அப்ப இங்க பதிமூணு நாடுங்க இருக்குதா?''

''ஆமா... இந்த கெஸ்ட் ஹவுஸ் இருக்கிறது மேல் நாடு...''

''சரி... நான் ஏதாவது ஒரு வன சாஸ்த்ரம் தெரிஞ்ச பெரியவரையாவது பார்க்க முடியுமா?''

''அதான் சொன்னேன்ல... வரிசையா அந்த பெருசுங்களா செத்துகிட்டு வருதுங்க. எனக்கு தெரிஞ்சு கொடி

நாட்டுல மூலன்னு ஒரு பெருசு இருக்கு. வன சாஸ்த்ர விஞ்ஞானின்னே இந்த மூலனுக்கு பேர். இந்த ஆளைப் போய் பாருங்க... இந்த காட்டைப் பத்தி கதை கதையா சொல்வாரு...'' - வரதராஜன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே சிலர் நடந்து வரும் சப்தம் கேட்டது. காட்டுப் பாதையில் தீப்பந்தங்களும் தெரிந்தன.

''யாரோ வாராங்க...''

''என்னவா இருக்கும்?''

''வந்தா தெரிஞ்சிட்டு போவுது...''

அவர்களும் வந்துவிட்டனர்.

''வாட்சரய்யா... வாட்சரய்யா...''

''அதான் இருக்கேன்லா... எதுக்கு கத்துறீங்க?''

''உங்கள உடனே பங்களாவுக்கு கூட்டிகிட்டு வரச் சொன்னாங்க.''

''என்னையா - எதுக்கு?''

''அங்க ஜெனரேட்டர் மோட்டார் ஓட மாட்டேங்குது. கரண்ட் வேற இல்ல. அதான் மேனேஜர் உங்கள வந்து பாக்க சொன்னாரு...''

''அட என்னய்யா நீ... நான் இந்த காட்டுக்குதான்யா வாட்சர். ஏதோ எலெக்ட்ரிக்கல் வேலை தெரியும்கறதால ஆ ஊன்னு கூப்டுகிட்டிருந்தா எப்படி?''

''சரி... வர இஷ்டம் இல்லையாம்னு நான் மேனேஜர் கிட்டே சொல்லிடவா?'' - வந்தவன் வெகு இயல்பாக முடிவுக்கு வந்தான்.

''அட இரப்பா... உடனேயே சிலுத்துக்கறியே... நான் வராட்டி ராத்திரி பூரா நீங்கதான் கொசுக்கடில சாகணும்.''

''எதுக்கு... நேரா புனுகு சுந்தரத்த பாத்தா வந்துட்டுப் போறான். அவன் பங்களாவுக்குன்னா பறந்தேல்ல வருவான்...? என்ன இங்க இருந்து ஏழு மைல் ஏறணு மேன்னு பாக்கறோம்...''



''சரிப்பா.. இரு வாரேன்...'' - என்று எழுந்த வரதராஜன் கெஸ்ட் ஹவுஸ் கதவை பூட்டி சாவி எடுத்துக் கொண்டு பிரபாகரைப் பார்த்து, ''நீங்க இங்கேயே இருங்க... ஒரு ரெண்டு மணி நேரத்துல வந்துட்றேன்'' என்றார்.

''பங்களான்னா இங்க எங்க பங்களா இருக்கு?''

''நம்ம ஸ்டாரோட பங்களாதான் சார்...''

''யாரு... இந்திரஜித் சாரா?''

''பொறவு...''

''நானும் வரேனே...?''

''வந்தாலும் வெளியதான் நிக்கணும். மேனேஜர் உள்ள விடமாட்டாரு...''

''குளிர்ல இங்க குந்திகிட்டுருக்கறதுக்கு கூட வந்தா திரும்பி வரும்போது உங்களுக்கும் துணையா இருக்கும்ல?''

- பிரபாகரின் பாய்ன்ட் வேலை செய்தது.

''சரி வாங்க...'' - என்று அவனை கூட்டிக் கொண்டார் வரதராஜன்.

''ஆமா.. இந்திரஜித் சார் இங்கதான் இருக்காரா?''

''யாருக்குத் தெரியும்...?'' - நடந்தபடியே பதில் வந்தது.

''இங்க தான் இருக்கிறதா சொன்னாங்களே...'' - பிரபாகர் கூறவும் வரதராஜனை அழைத்துச் செல்ல வந்தவன்.

''யோவ் வாட்சு... நீ மட்டும் வா...! உன்னை மட்டும் தான் மேனேஜர் கூட்டிகிட்டு வரச் சொன்னாரு...'' என்றான்.

''கேட்டீங்களா... இங்க பங்களா பத்தி மட்டும் பேசவே கூடாது. பேசாம வரணும். யோவ் அவர் புதுசு. ஏதோ ஒரு ஆர்வத்துல கேட்டுட்டாரு... விட்று..'' - என்று அவன் வாயை மூடி பிரபாகரை அழைத்துச் சென்றார் வாட்சர்.

பிரபாக ர் கைகெடிகாரத்தை பார்த்தான்.

மணி ஒன்பது!

புசுபுசுவென்று பனி இறங்கிக் கொண்டிருந்தது. பனிக்கு பூச்சிகள் அவ்வளவாக வராது.

காதை ஒருவித நிசப்தம் அழுத்தும். அதனாலேயே மனசுக்கும் பாரமாக இருக்கும். நம் காதுகள் துளி கூட சப்தமில்லாத ஒரு நிசப்தத்தை உணர்ந்திருக்க வாய்ப்பே யில்லை. பிரபாகருக்கும் இந்த அனுபவங்கள் எல்லாமே புதிதாக இருந்தது. ஆனால் தீப்பந்தம் பிடித்தபடி அவர்கள் விறுவிறுவென நடந்தனர்.

இரண்டு மைல் தூரம்!

வளைவான காட்டுப் பாதையில் நடப்பது மிக சிரம மாக இருந்தது. பிரபாகருக்கும் நடந்த களைப்பில் பசி எடுக்கத் தொடங்கியது. ஆனால் சாப்பிட அந்த காட்டில் இலைதழையை தவிர எதுவுமேயில்லை என்றும் புரிந்தது.

நல்லவேளையாக பங்களா வந்துவிட்டது!

பங்களா முகப்பில் பெரிய இரும்பு கிராதி கதவு! அங்கே ஒரு தீப்பந்தம் எரிந்தபடி இருந்தது. கூட்டமாய் வரவும் முரடாய் ஒரு மனிதன் ஊன்றி ஊன்றி பார்த்து உள்ளே விட்டான். வாட்சர் வரதராஜனை தொடர்ந்து பிரபாகர் உள் நுழைய முயலவும் தடுத்தான்.

‘‘ஏய் நீ யாரு?’’

‘‘வாட்சரோட வந்தேன்.’’

‘‘வெளிய நில்லு. அவர் வேலைய முடிச்சிட்டு வரவும் சேர்ந்துக்கோ.’’

‘‘நான் அவருக்கு உதவியாதான் வந்துருக்கேன்.’’

- வரதராஜனும் வந்து ‘‘ஆமாம்ப்பா... உள்ள விடு’’ என்றார். அரைமனதாக உள்ளே விட்டான்.

தீவட்டி வெளிச்சம் வழிகாட்டியது. வீட்டினுள் ஒரே ஒரு எமர்ஜென்சி விளக்கு மட்டும் எரிந்தபடி இருந்தது.



மகா பெரிய பங்களா!

எங்கே தொட்டாலும் பனிக்கட்டியை தொட்டது போல இருந்தது. வீட்டின் மர வேலைப்பாடுகள் மிரட்டின.

மெயின்டோர் வழியாக உள்ளே நுழைய முற்பட்ட போது வாட்சரும், பிரபாகரும் தடுக்கப்பட்டனர்.

‘‘ஜெனரேட்டர் பின்பக்கம் இருக்கு - வீட்டுக்குள்ள எதுக்கு வரீங்க?’’ என்று கேட்டு வழியையும் காட்டினார்.

மெயின்டோருக்கு மேலே இந்திரஜித் ஜனாதிபதி யிடம் விருது வாங்கும் படம் பாதி தெரிந்து பாதி தெரி யாமல் போயிற்று. பிரபாகர் பார்வை இங்கே எங்காவது இந்திரஜித் இருந்து கண்ணில் பட மாட்டானா என்றே அலை பாய்ந்தது. வாட்சர் வரதராஜனும் சரியாக யூகித்துக் கேட்டான்.

‘‘என்ன சார்... நடிகர் கண்ணுல பட மாட்டாரான்னு தவிக்கிறீங்களோ?’’

பிரபாகர் சற்று அசடு வழிந்தான்.

‘‘எனக்கு தெரியும் சார்... இத்தன வருசத்துல நானே இவரை ரொம்ப பார்த்ததில்ல. அது என்னவோ தெரியல. நான் பார்க்கும் போதெல்லாம் வைத்தியரும்கூட இருப் பார்...’’

‘‘வைத்யரா... எந்த வைத்யர்?’’

‘‘மெல்லப் பேசுங்க... ராமலிங்கய்யான்னு ஒரு வைத்யர். இவரப் பத்தி ஒரே கம்ப்ளைண்ட்...’’ - வரத ராஜன் முக்கியமான கட்டத்தை தொட்டபோது ஜென ரேட்டர் அறை வந்துவிட்டது. தீப்பந்தம் பிடித்து வழி காட்டியவன் காதை அடைத்து தலைப்பாகை கட்டியிருந் ததும் வசதியாகப் போய்விட்டது.

பிரபாகரும் ‘‘டூல்ஸ் பாக்ஸ் எங்கே?’’ என்று கேட்க வும் எடுத்து வருவதற்காக ஓடினான் அவன்.

‘‘எலேய் தீப்பந்தத்தை கொடுத்துப் போ - நாங்க இங்க இருட்டுல நிற்கவா?’’

"நான் டூல்ஸ் பாக்சை தேடி எடுக்கணுமில்ல..." அவனிடமிருந்து வந்த பதில் வாயை அடைக்கச் செய்தது. அவன் விலகவும் இருவருமே இருளில் நின்றனர்.

தலைக்கு நேர் மேலான வானத்தில் ஜிகினாப் பொட்டுக்கள் போல நட்சத்திரங்கள். உருண்டு விழுந்த வெள்ளித்தட்டு கணக்காய் நிலவு. பளீர் என்கிற பொழிவு. குளிருக்குள்ளும் குண்டூசிகள் இருப்பது போல ஊசித் தாக்கம்.

"சாருக்கு பயமா இருக்குதா?"

"சேச்சே... பங்களாவுக்குள்ளல்ல நிக்கறோம்..."

அப்போது நரி ஒன்றும் ஊளையிட்டது.

"நல்லவேளை திரும்பி போகைல துணைக்கு நீங்க இருக்கீங்க. இல்லாட்டி இந்த நரிங்க சேட்டை பண்ணும்."

"என்ன செய்யும்?"

"என்ன செய்யுமா... அஞ்சாறு நரிங்க ஒண்ணா சுத்திச் சுத்தி வந்து அப்படியே கழுத்தைப் பிடிச்சிடும். ஒத்த நரின்னா நெருப்புக்குப் பயப்படும்." - வரதராஜன் காட்டு வாழ்வின் த்ரில்லான விஷயத்தை தொட்ட சமயம் அவர்கள் நின்றிருந்த இடத்திற்கு சற்று தள்ளி, பங்களா மதில் சுவரில் ஒரு கதவு இருந்து அது திறக்கும் சப்தமும் அதை தொடர்ந்து ஒரு டார்ச் லைட் வெளிச்சமும் விழுந்தது.

இருவர் கவனமும் அதன் மேல் சென்றது.

மற்றபடி நிசப்தம்!

கதவின் வழியாக ஒரு உருவம் உள் நுழைந்தது.

அங்கே மாடியை அடைய தோதாக இரும்புப் படிகள் வளைந்து வளைந்து சென்றன. அதன் வழியாக அந்த உருவம் மேலே ஏறியது.

பிரபாகரையும் ஆர்வம் தொற்றிக் கொண்டது.



"வாட்சர் சார் யார் அது?" - கிசுகிசு குரலில் கேட்டாள்.

"தெரியல... நடந்து போற ஸ்டைல பார்த்தா வைத்யர் மாதிரி தெரியுது."

"வைத்யரா...?" கேட்டுவிட்டு அவனும் நழுவி இரும்புப் படிகளில் ஏறினான்.

நிலா வெளிச்சம் போதுமானதாக இருந்தது.

கொஞ்சம் தடுமாறவும் செய்தான்.

உள்ளே ஒரு அறை இருந்து அதில் ஜன்னல் இருந்து அதன் வழியாக மிக மெல்லிய வெளிச்சமும் வைத்தியர் குரலும் கேட்டது.

"ஐயா... போலாங்களா?"

"நான் தயாரா காத்துகிட்டிருக்கேன். கிளம்ப வேண்டியதுதான்..."

"புறப்படுங்க... இன்னிக்கு சிகிச்சைல பாருங்க நீங்க எப்படி மாறீங்கன்னு."

"இப்படித்தான் போன பௌர்ணமி - அதுக்கு முந்தின பௌர்ணமியிலயும் சொன்னீங்க."

"இந்த முறை தப்பு வராதுய்யா... உங்க வயசுல சரி பாதியை என் மருந்து விழுங்கிடும்..." - அவர்கள் பேசிக் கொள்வதில் இருந்தே அது வைத்தியரும் இந்திரஜித்தும் என்பது பிரபாகருக்கு தெரிந்துவிட்டது. ஆர்வத்தை அடக்க மாட்டாமல் எட்டிப் பார்க்க விழைத்தபோது அவர்கள் வெளியே வரத் தொடங்கினர்.

டார்ச் லைட் வெளிச்சத்தில் இந்திரஜித்தை ஓரளவுக்கு பிரபாகரால் பார்க்க முடிந்தது.

அது யாரோ அல்ல... அவன் நாகவல்லிதேவி கோவிலுக்கு போகும் வழியில் பார்த்த அந்த வயதான கிழவர்தான்!

★ ★ ★

## 7

அழிஞ்சில் மரத்துக்கு வசிய குணம் இருப்பதைப் போலவே யானை வணங்கி என்னும் மூலிகைக்கு யானையையே கட்டுப்படுத்தும் ஆற்றல் உண்டு. இந்த யானை வணங்கியை காட்டுக்குள் தேடிக் கண்டுபிடிக்க அனுபவ அறிவு மிக முக்கியம். இது நம்மிடம் இருக்கும்பட்சத்தில் பெரிய மனிதர்களோடு பகையோ விரோதமோ இருந்தால் அது நாளா வட்டத்தில் நீங்கிவிடும் என்று மூலிகைக் கூறுகள் கூறுகின்றன.

அடுத்து வருவது பூலான் கொடியும் அதன் பூக்களும்... இதை சட்டைப் பையிலோ இல்லை தலைப்பாகைக்குள்ளேயே வைத்துக் கொண்டு நாம் எங்கு சென்றாலும் நமக்கு காரிய பலிதம் உறுதி.

வனத்துக்குள் இப்படி எவ்வளவோ அதிசயங்கள்.

அதில் வாலிப முறுக்கை மீட்டுத் தரும் யவ்வன காந்தி ஒரு தேவ மூலிகை. இந்திரனின் தேவ லோகத்தில் கற்பக விருட்சத்தோடு இதுவும் இருந்ததாக கூறுவார்கள். இதன் வேரினை அரைத்து மேனி மேல் பூசவும், இதன் கொழுந்துகளை உட்கொள்ளவும் இதன் பூக்களில் கஷாயம் செய்து குடிக்கவும் இழந்த இளமை திரும்புமாம்.

இந்த யவ்வன காந்திச் செடியை காண்பது அரிதினும் அரிது. இதை நாகங்கள் காவல் காப்பதாக சொல்வார்கள்!

**பி**ரபாகருக்கு தூக்கிவாரிப் போட்டது.

அவர்கள் இருவரும் தட்டுத் தடுமாறிக் கொண்டே பின் கதவு வழியாக வெளியேறினார்கள். பிரபாகர் பல்லி போல சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டான்.



அவர்கள் வெளியேறவும் திரும்பவும் கதவு அடைபட்டது. பிரபாகருக்குள் அவர்களை பின்தொடரும் ஆவல் மூண்டது. வாட்சர் வரதராஜனும் சற்று தொலைவில் இருந்தபடி அந்த காட்சியை பார்த்தபடி இருந்தார்.

அவரிடம் வந்தான் பிரபாகர்.

‘‘சார் நான் அவங்களை பின்தொடர விரும்பறேன். அது யாரோ அல்ல, ஸ்டார் இந்திரஜித்தான் அவர்...’’

‘‘தெரியும்... ஆனா கதவை அடைச்சிட்டாங்க. எப்படி போவீங்க?’’

‘‘எப்படியாவது...’’ - எனும்போது டூல்பாக்சை எடுத்து வரச் சென்ற நபரும் பங்களா மேனேஜரும் வந்தனர்.

‘‘சீக்கிரமா முடிய்யா... உள்ள இருக்க முடியல...’’ - என்றார் மேனேஜர்.

‘‘நம்ப அய்யா குடும்பம் இங்கையா இருக்காங்க.’’

‘‘ஆமாம்... லீவுக்கு வந்துருக்காங்க.’’

‘‘அய்யா எங்க வெளிநாட்டுல இருக்காரோ?’’

‘‘ஆமாம்... அவர் இப்ப ஸ்விட்சர்லாந்துல இருக்கார்.’’ - மேனேஜர் புளுகினார். வரதராஜன் பதிலுக்கு சிரிப்பது இருளில் அவ்வளவாக தெரியவில்லை. அதே சமயம் பிரபாகர் அங்கிருந்து நழுவியிருந்தான்!

‘‘எங்கய்யா உன் கூட வந்த நபர்?’’

‘‘நான்தான் கெஸ்ட் ஹவுசுக்கு போய் என் ஸ்வெட்டரையும் சைக்கிளையும் எடுத்துவரச் சொன்னேன். - வரதராஜனும் அழகாய் சமாளித்தார்.

‘‘வரும்போதே எடுத்துகிட்டு வந்துருக்கலாம்ல... தனியா போய் நரிங்ககிட்ட மாட்டிகிட்டா...’’

‘‘மாட்டகிட்டா போய் சேர வேண்டியதுதான்.. நான் என்ன பண்ண முடியும்? இல்ல உங்களால தான் என்ன பண்ண முடியும்?’’

- வரதராஜன் பேசியபடியே டூல்பாக்சில் இருந்து

ஸ்பேனர்களை எடுத்து தன் வேலையை பார்க்கத் தொடங்கிவிட்டார்!

நாகவனத்தின் பாம்புப் பாதை மேல் வைத்தியரும் அந்த கிழவரும் நடந்தபடி இருந்தனர். மிகச் சரியாக நூறு அடி தூர இடைவெளியில் அவர்களை பிரபாகரும் பின்தொடர்ந்து கொண்டிருந்தன!

நிலா வெளிச்சம் வழிகாட்டிக் கொண்டிருந்தது. வைத்தியர் சற்று திடமாகவும், நடிகர் இந்திரஜித் சற்று தள்ளாடியும் அவ்வளவு ஏன் - நிறையவே கீழே விழுந்து எழுந்தும் தான் நடந்து கொண்டிருந்தார்.

இந்த மனிதரை சினிமாவில் பத்து பேர் சுற்றி வளைத்தாலும் சளைக்காமல் சண்டை போடுகிறார்? இவர்தானா பதினெட்டு வயது கூட முடிந்திராத இளம் பெண்களுடன் டூயட் பாடியது? பிரபாகர் தனக்குள் எழும்பிய கேள்விகளை எல்லாம் அடக்கிக் கொண்டே தொடர்ந்தான். அவனும் பல இடங்களில் விழுந்துதான் எழுந்திருந்தான். அவனும் பல இடங்களில் விழுந்துதான் எழுந்திருந்தான். அவன் முதுகில் சுமந்து வந்திருந்த பேக்கை கெஸ்ட் ஹவுசில் வைத்துவிட்டு வந்தது ஒரு தவறு போல அப்போது அவனுக்கு தோன்றியது. அதில் தான் வீடியோ கேமரா உள்ளது. அதை இப்போது எடுத்து வந்திருந்தால் இந்த காட்சியை எல்லாம் படம் பிடித்திருக்க முடியும் என்றும் தோன்றியது.

மொத்தத்தில் அந்த இரவுப் பொழுதில் சந்திரனின் வழிகாட்டலில் அவன் பின்தொடர்ந்த போது ஒரு சமதளமான பரப்பு குறுக்கிட்டு அது முடிந்த இடத்தில் ஏரி ஒன்று இருப்பதையும் பார்த்தான்.

ஏரியின் கரையில் ஒரு படகு!

படகில் துடுப்புடன் படகுக்காரன்.

வைத்தியரும் இந்திரஜித்தும் ஏறிக்கொள்ளவும் அந்த படகு கிளம்பியது. பிரபாகருக்கு மனது கிடந்து துடிக்கத்



தொடங்கியது. ஒரு அற்புதமான சந்தர்ப்பத்தை இழந்து விடுவோமோ என்றும் தோன்றியபோது ஏரிக்கரை வந்து விட்டது.

படகோ ஏரிக்குள் நெடுந்தூரம் போய்விட்டிருந்தது.

தண்ணீரில் கையை வைக்கவும் ஐஸ் கட்டியை தொட்டது போல் ஒரு உணர்வு. வைத்த வேகத்தில் கையைப் பின்னுக்கு எடுத்துக் கொண்டான்.

அப்போது அருகே யாரோ வருவது போல ஒரு சலனம்.

அதேசமயம் அவன் பின் மண்டையில் ஓங்கி ஒரு அடி! அதன் பின் அவனுக்கு எதுவுமே நினைவில்லை...

விடிந்துவிட்டது! இது மலை விடியல். ஏராளமான பறவைகளின் கூக்குரலோடு பனிப் போர்வை மெல்ல மடியத் தொடங்கியது. புனுகு சுந்தரத்தின் குடிசை முன்னாலே ஒருவன் வந்து நின்றிருந்தான்!

'சுந்தரம் சுந்தரம்' என்கிற குரல் சுந்தரத்தை வெளியே வந்து பார்க்கச் செய்தது.

''என்னவே...?''

''தலக்கட்டு கூப்ட்டு விட்டுச்சு.''

''எதுக்கு?''

''அட வருவியா - கேள்வி கேட்டுக்கிட்டு...''

''போ... வாரேன்'' - என்றவன் கரித்தூளை ஒரு தகர டப்பாவில் இருந்து எடுத்து பல்லில் வைத்து தேய்த்து முடித்தான். பிறகு காய்ச்சிக் கொட்டப்பட்டிருந்த மிளகு நீரை எடுத்து ஒரு சொம்பு நிறைய ஒரே மடக்கில் குடித்து முடித்தான்.

அவன் குடிசைக்கு பின்பக்கமாய் சாக்கு மறைப்போடு கழிப்பிடம் இருந்தது. அதனுள் அவன் நுழையும் போதே அது எதற்கு என்று தெரிந்துவிட்டது. கழிப்பிடத் தொட்டி நீரில் சில தவளைகள் நீந்தியபடி இருந்தன.

அவைகளை பிடித்து வீசி எறிந்துவிட்டு கால் கழுவிக் கொண்டவன் குடிசைக்குள் நுழைந்து படுதாத் துணியில் கைகால்களை துடைத்துவிட்டுக் கொண்டான். ஒரு மரச் சட்டத்தின் மேல் ஸ்வெட்டர் ஒன்று கிடந்தது. நாகவனம் பக்கம் சுற்றிப் பார்க்க வந்த ஒரு வெள்ளைக்காரர் கொடுத்தது. அதை எடுத்து அணிந்து கொண்டு நடந்தான்.

அவனது வயதான தாய் கயிற்றுக் கட்டிலின் மேல் இழுத்துப் போர்த்தியபடி தூங்கிக் கொண்டிருந்தாள். அவளை எழுப்பி சுக்குக் காப்பி போட்டு குடிக்க விருப்பமில்லாமல் தலைக்கட்டு வீடு நோக்கி நடந்தான்.

நாகவனத்தில் அவர்களின் வசிப்பிடம் சமதளத்தில் இல்லாமல் சரிவில் இருந்தது. எனவே குதித்து குதித்து இறங்கிச் செல்ல வேண்டியிருந்தது. புதிதாக யாராவது வந்தால் மூச்சு வாங்கி அப்படியே உட்கார்ந்து விடுவார்கள். ஆனால் அங்கேயே பிறந்து வளர்ந்தவர்களுக்கு அது சாதாரண விஷயம். சுந்திரத்திடமும் காலை நேரச் சுறுசுறுப்பு கொடிகட்டிப் பறந்தது.

தலைக்கட்டின் குடிசைப் பக்கம் வரவும் அங்கே குடிசை முன் உள்ள கயிற்றுக் கட்டிலின் மேல் வைத்தியர் இராமலிங்கையாவும் இருந்தார். தலைக்கட்டு வரகரிசிக் கஞ்சியை கரைத்துக் கொண்டிருக்க அதில் இராமலிங்க அய்யா தந்த பஸ்பம் ஒன்றும் கலக்கப்பட்டு அதை குடிக்கத் தொடங்கினார் தலைக்கட்டு. நாகவனத்து பதின்மூன்று நாடுகளில் அவர் பூநாடு எனப்படும் அந்த நாட்டுக்கு தலைக்கட்டு. ஒரு தலைக்கட்டுக்கு கீழாக சரியாக நூறு பேர். ஒரு சதக் கூட்டம் என்றே அவர்களுக்கும் பெயர். அந்த ஒரு சதக் கூட்டத்துக்கான தலைக்கட்டான அவருக்கு பெயர் காணியன். அவருக்கு ஆஸ்துமா உபத்ரவம் இருந்தது. அதற்குத்தான் ராமலிங்கையா மருந்து தந்து அதைத்தான் பஸ்பமாக வரகரிசிக் கஞ்சியில் கலந்து குடித்துக் கொண்டிருந்தார் காணியன். புனுகு சுந்தரம் வந்து நின்றான்.



ராமலிங்கைய்யாவை ஒரு ஓரப் பார்வை பார்த்தான். அவரும் அவனை அலட்சியமாக பார்த்தார்.

''வாவே...''

''அதான் வந்துட்டேன்ல?''

''உக்காரு...''

''விசயத்த சொல்லு நீ...''

''உக்காருன்னா உக்காரணும்.''

''நான் என்ன இடுப்பொடிஞ்சவனா.... காலைல உக்கார. நீ எதுக்கு கூப்ட்டே அதை சொல்லு?''

''வைத்யருக்கு ஒரு பலம் புனுகு வேணுமாம்...''

''எவ்வளவு எவ்வளவு?''

''ஒரு பலம்வே... ஒரு பலம்...''

''ஒரு பலமா... எதுக்கு அம்புட்டு?''

''இது எதுக்கு உனக்கு...? அவர் துட்டு தருவார். வாங்கிக்க. அப்புறம் அவர் கூட போ... கொஞ்சம் அவர் சொல்ற வேலைகளைச் செய்.''

''நான் எதுக்கு இவருக்கு வேலை செய்யணும்...?''

''முட்டாப்பயலே - உன்னை எட்டாங்கிளாஸ் வரை படிக்க வெச்சது பெரிய தப்பு. கேள்வியா கேட்டுகிட்டு - தலைக்கட்டு சொல்றேன். சொல்றத கேள் - அதான் பணம் கொடுப்பார்னு சொல்றேன்ல'' - தலைக்கட்டுவின் அதட்டல் சுந்தரம் வரையில் வேலை செய்யத் தொடங்கியது. அரை மனதாக சரி என்பது போல ராமலிங்கைய்யாவைப் பார்த்தான்.

அவர் உடனே எழுந்து கொண்டார். வேட்டி ஜிப்பா என்று சிம்பிளாக இருந்தார். ஒற்றை நாடி சரீரம். துளி கூட குளிர்த்தாக்கத்தை உணராதவர் போல விரைப்பாக நின்றார் - நடந்தார். சுந்தரம் அவரைப் பின்தொடர்ந்தான்.

நெடுந்தூரம் வரை அவர் அவனிடம் எதுவும் பேசவில்லை.

வாகனங்கள் செல்லும் மலைப்பாதை வர... அவனை திரும்பிப் பார்த்தார். அவர் பார்க்கவும் அவனு... பார்த்து பேசத் தொடங்கினான்.

"இந்த காலை நேரத்துல இப்படியே எம்புட்டு தூர... நடக்கறது?"

"சொல்றேன்... நீ இங்கேயே நில்லு - மேல விறகு கூப்புக்கு வரும் லாரில ஒரு லாரி இப்ப வரும். அது டவுனுக்கு போகும். அந்த லாரில போய் டவுன்ல இருந்து நான் படிக்க எல்லா தமிழ் பேப்பர்களையும் வாரப் பத்திரிகைகளையும் வாங்கிட்டு வந்துடு..."

"புனுகு வேணும்னு கேட்டீங்க?"

"நீ இதை செய்துட்டு பிறகு காட்டுக்குள்ள போய் புனுகு எடுத்துகிட்டு வரலாம்."

"இதுக்கு நான் எதுக்கு லாரி டிரைவர்கிட்ட பணத்தை கொடுத்துவிட்டா அவனே வாங்கிட்டு வந்துட்டுப் போ... றான்." - அவன் பதிலை ரசித்த வைத்தியர்.

"இதுவும் நல்ல யோசனைதான். நீ போனாலும் சரி - இல்லே வேற யாராவது போனாலும் சரி எனக்கு பேப்ப... ருங்க வேணும்."

"நான் அதை எடுத்துகிட்டு உங்கள எங்க வந்து பார்க்க?"

"உனக்கு நடுக்காடு தெரியும்தானே?"

"இங்கேயே பிறந்து வளர்ந்த யாருக்குதான் தெரி... யாது?"

"அங்க இருக்கற நாகசித்தர் குகைக்கு வந்துடு."

"ஓ... நீங்க இப்ப அங்கதான் தங்கியிருக்கீங்களா?"

"நான் அங்கயும் தங்குவேன். புரியுதா?" - என்று இரு... விதமான தொனிப்போடு கேட்டார். அவன் கையில் ஒரு... நூறு ரூபாயையும் திணித்தார். பின் வந்த வழியே விறு... விறுவென்று நடக்கத் தொடங்கிவிட்டார்.



சுந்தரத்துக்கு அவரின் செயல்பாடு கொஞ்சம் புதிராக ...வும் இருந்தது. பாதை மேல் விறகு லாரி ஒன்று வரும் சத்தமும் கேட்டது. நடுச்சாலை மேல் நின்று கொண்டு அதை கையை ஆட்டி மறித்து நிறுத்தினான். பின்னர் பணத்தை கொடுத்து விபரத்தையும் சொன்னான். டிரை... வரும் பணத்தை பாக்கெட்டில் போட்டுக் கொண்டு லாரியை கிளப்பினான். சுந்தரமும் புனுகு சேகரிக்க எதிர் திசையில் அடர்வான மரங்கள் உள்ள மேல் நாடு நோக்கி நடந்தான்.

எதிரில் வாட்சர் வரதராஜன் வந்து கொண்டிருந்தார்.

"எலேய் சுந்தரம்..."

"அய்யா..."

"காலங்காத்தால எங்க கிளம்பிட்டே?"

"பொழப்ப பாக்கத்தான்."

"புனுகு தேடிப் போறியா?"

"மனுசங்கள்ள பாதிதானே குரங்கும் காட்டுப் பூனையும். அதுங்களும் காலைலதானே வெளிய போகும்?"

"நல்லா கேட்டுக்கோ - புனுகு எடுக்கறதோட நிறுத்திக்கோ. பூனைங்கள எதுவும் பண்ணிடாதே."

"சேச்சே, என்ன வாட்சரய்யா நீங்க. அந்த பூனைங்களாலதானே என் பொழப்பே நடக்குது?"

"நீ இப்படி சொன்னாலும் முந்தி மாதிரி பூனைங்க கண்ணுலயே பட மாட்டேங்குதுங்க. அதுங்கள இங்கிருக்கிறவங்க கொண்டு வந்துட்றாங்களோன்னு எனக்குள்ற ஒரு பயம்."

"நாகவனம் பக்கம் அதுங்க எப்படி வரும். வந்தா இங்க இருக்கற பாம்புகளும் விடாதே."

"ஓ, நீ அப்படி வர்றியா - சரி பாத்து போ. மரம் ஏறும் போது பாத்து ஏறு. பூனைங்க பொந்துக்குள்ளயும் பாத்து கைய விடு. பாம்புங்க உள்ள நுழைஞ்சு அதுங்களயும்

விழுங்கிட்டு உன்னையும் கடிச்சிடப் போவுது...'' என்றவர் சிறிது தூரம் போன நிலையில் திரும்பி வந்தார்.

''என்ன வாட்சரய்யா... காட்டுக்குள்ள நான் எதையாவது எடுத்துட்டு வரணுமா?''

''இல்ல.... வர்ற வழியில வெளியாட்கள் யாரையாவது பார்த்தியா?'

''வெளியாட்கள்னா?''

''அதான்யா... டவுன்ல இருந்து நேத்து கூட ஒருத்தர் வந்தாரே முதுகுல பெரிய பையோட...?''

''ஓ.... பிரபாகர் சாரா?''

''ஓ.. அவர் பேர்கூட உனக்கு தெரிஞ்சிருக்குதே. அவரேதான்.''

''நான் பாக்கலியே..''

''நேத்து ராத்திரி என்ன பாத்துட்டு போன மனுசன்தான். எங்க இருக்கான்னே தெரியல. அந்தாள் பையும் கேமராவும் கெஸ்ட் ஹவுசில்தான் இருக்கு...''

''அப்ப ராத்திரி கெஸ்ட் ஹவுசுல ரெஸ்ட் எடுக்கலியா, மேய்ச்சல்தானா?''

''பத்திரிகைகாரங்கன்னா அடங்கியா இருப்பாங்க. துணிச்சலா சுத்துனாதான் செய்திங்க கிடைக்கும். அதுலயும் நேத்து வைத்தியர் பின்னாலல்ல போனாரு?''

''எந்த வைத்தியர்?''

''இந்த காட்டுல இப்போதைக்கு பெரிய வைத்தியர்னா ராமலிங்கய்யாதானே? எந்த வைத்தியர்னு தெரியாத மாதிரி கேட்கறே?

''ஓ... அவரா... அவர் பின்னாலதான் பிரபாகர் சார் போனாரா?''

''ஆமாம்... எங்கையாவது பார்த்தா சீக்கிரமா ஆபீசுக்கு வரச் சொல். இல்ல தனியா எங்கையாவது போய் எந்த மிருகத்துக்கிட்டயாவது அடிகிடி பட்டு விழுந்து கிடக்கிறாரான்னும் தெரியல...''



சொன்னபடியே வாட்சர் சென்றுவிட சுந்தரம் மனதுக்குள் வைத்தியர் மேல் ஒரு சந்தேகம் தோன்றத் தொடங்கியது!

★ ★ ★

## 8

நாகவனத்தில் இன்னொரு ஆச்சரியமான விஷயமும் உண்டு. தேவர் தடாகம் என்று வனத்துக்குள் ஒரு சின்ன தடாகம் உள்ளது. இந்த தடாகத்தில் ஒரு ஆச்சரியம் என்னவென்றால் பௌர்ணமி நாளில் இது நிரம்பி வழியும். அப்படியே வற்றத் தொடங்கி அமாவாசை நாளில் இது துப்புரவாக வற்றிவிடும். அப்போது வற்றிய அந்த தடாகத்துக்குள் ஒரு சிவலிங்கத்தையும் பார்க்கலாம். அந்த லிங்கத்துக்கு அந்த அமாவாசை நாளில் அபிஷேகங்கள் நடைபெறும். இறுதியாக அந்த லிங்கத்துக்கு பஞ்ச மூலிகைக் காப்பு என்று மூலிகையை அரைத்து லிங்கம் முழுக்க பூசிவிடுவார்கள். அதை அகற்றவும் மாட்டார்கள். திரும்பவும் தண்ணீர் ஊற ஆரம்பிக்கும். அந்த தண்ணீரில் அந்த பஞ்ச மூலிகை லிங்கம் ஊறிக் கரைந்து அந்த தண்ணீரே மருந்தாகிவிடும். காட்டு ஜனங்களுக்கெல்லாம் சளி காய்ச்சலுக்கு அந்த தொட்டியில் உள்ள மூலிகைத் தண்ணீர் தான் அருமருந்து! அதைத் தேடி யானைகளும் வந்து அருந்திச் செல்லும்.''

**மேல்** நாட்டில் அடர்த்தியான மரங்கள்! அவ்வளவும் மிக மிகப் பருமனான மருத மரங்கள்! ஓங்குதாங்கான மரங்கள். தரைப்பாகத்தில் இருந்து இருபதடி உயரத்துக்கு பிறகு தான் கிளைகளே தொடங்கியிருக்கும். அதன்மேல் ஏற தனிப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

அதேபோல அந்த உயரமான மரங்களின் மே
மரங்களுக்குள் இயற்கையான பொந்துகள் இருக்கு
அந்த பொந்துகளுக்குள்தான் புனுகுப் பூனைகள் பதுங்
இருக்கும். அவைகளுக்குள் ஓேழ சுந்தரம் தையல்
இலையை விரித்து வைத்திருப்பான். அந்த பூனைகள்
எப்போது வேண்டுமானாலும் தன் கழிவை அதன் மே
மேற்கொள்ளலாம்.

புனுகுப் பூனைகள் விசித்திரமானவை. மற்ற பூனை
களைப் போல எலி, அணில் என்று மாமிச பட்சிணியாக
இல்லாமல், பழங்கள், இலைக் கொழுந்துகள் என்று சாப்
பிடுபவை. அதனால்தான் அதன் கழிவும் நாற்றமின்றி
மணக்கும். நன்கு வெயில் வரத் தொடங்கவும் அந்த
பூனைகள் இரை தேடி வெளியேறியிருக்கும். அப்போது
அந்த பொந்துகளில் கையை விட்டு தையல் இலையை
எடுத்துப் பார்ப்பான். அதன் மேல் ஒரு நெல்லிக் காயள
விற்கு புனுகுப் பூனையின் கழிவுகள் இருக்கும். சில
சமயம் உள்ளே கழிக்காமல் இரை தேடிச் சென்ற இடத்
திலேயே அதன் கழிவுகள் வெளியேற்றப்பட்டுவிட்டிருக்
கும். இதனால் அதன் புனுகு கிடைப்பது என்பது கொஞ்சம்
அதிர்ஷ்டம் சார்ந்ததும்கூட...

அன்றைக்கு ஒரு பலம் புனுகை வைத்தியர் கேட்
டிருக்கிறார் எனும்போது அதன் பின்னால் ஒரு பெரிய
தேவை மட்டுமல்ல. அவர் மர்மமாக எதையோ செய்
கிறார் என்றே சுந்தரத்துக்கும் தோன்றியது. இந்த முறை
புனுகை கொடுத்துவிட்டு அவர் அடுத்து என்ன சொல்
கிறார் என்பதைப் பொருத்து அவரை பின்தொடர வேண்
டும் என்று முடிவும் செய்து கொண்டு மரத்தின் மேல்
தாவி ஏறினான்.

ஒன்றுக்கு பத்தாக மரங்களில் ஏறியதில் ஒரு ஆச்ச
ரியம்போல் எல்லா மரப் பொந்துகளிலும் புனுகு இருந்து



ஒரு பலம் என்கிற அளவையும் தாண்டிவிட்டது.
த்தியருக்கு யோகம்தான் என்று நினைத்துக் கொண்
ன். அப்படியே மரத்தை விட்டு இறங்கி அவ்வளவு
னுகையும் ஒரு பொட்டலமாக கட்டிக் கொண்டு நடக்க
னைந்தபோது ஒரு இடத்தில் கர்ச்சீப் ஒன்று கிடந்தது.
னிந்து எடுத்துப் பார்த்தான். அதை எங்கேயோ பார்த்த
ஞாபகம் தலையை குடைந்தது... எங்கே? எங்கே?

- முட்டி மோதிக் கொண்டதில் அது பிரபாகரிடம்
இருந்ததும், அவனுக்கு தும்மல் ஏற்பட்டபொழுது அவன்
அதை பயன்படுத்தி பிறகு பாக்கெட்டில் அடைத்துக்
கொண்டதும் ஞாபகம் வந்தது. அதற்கு தோதாக அங்கேயே
பிரபாகர் அணிந்து வந்திருந்த ஷூவின் தடயங்கள்...

சுந்தரத்துக்கு ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது
என்பது புரிந்துவிட்டது. பிரபாகருக்கு ஏதாவது ஆகியிருக்
குமோ? கேள்வியோடு நடந்து சாலைப் பக்கம் வருவ
தற்கு மூன்று மணி நேரம் ஆனது. அவன் அதிர்ஷ்டம்
முன்பு போன லாரி விறகை இறக்கிவிட்டு திரும்பி வந்த
படி இருந்தது. அந்த லாரி டிரைவரும் லாரியை நிறுத்தி
சுந்தரத்திடம் பேப்பரையும் - புத்தகங்களையும் கொடுத்
தார். கையில் புனுகை பார்த்துவிட்டு இந்த ''பூனைப்
பீயை தேடி அலையற வேலையை எப்பதான் விடப்
போறியோ'' என்று கிண்டலும் செய்தார்.

சுந்தரத்துக்கு கன்னத்தில் அவர் அறைந்த மாதிரி
இருந்தது. புனுகு ஒரு புறம் மருந்து - இருந்தாலும் மறு
புறத்தில் அது பூனையின் மலம்தானே? முதல் தடவை
யாக தன் பிழைப்பை நினைத்து ஒரு வருத்தம் சுந்தரம்
மனதில் ஏற்பட்டது. அந்த வருத்தத்தோடு மலைப்புறத்
தில் வைத்தியர் வரச் சொன்ன அந்த குகைப்பகுதி நோக்கி
நடந்தான்.

கொய்யாப்பழ மரம் ஒன்று கொத்தும் குலையுமாக
கண்ணில் பட்டது. சற்றுத் தள்ளி பலா மரங்கள் - அதன்

அடிப்பாகத்தில் பலாப் பழங்கள் வெடித்திருந்தன. அதை மலை அணில்கள் அவ்வப்போது வந்து சாப்பிட்டபடி இருந்தன. சுந்தரத்துக்கு அதைப் பார்க்கவும் சாப்பிடும் ஆசை எழும்பியது. கொய்யாப்பழம் சாப்பிட்டால் அரை மணி நேரத்தில் மலம் தள்ளும் - பலாப்பழமோ தொண் டையை கட்டிவிடும். இருந்தாலும் பசி அவனை இரண்டு பழங்களையுமே சாப்பிடச் சொன்னது.

அருகில் ஒரு நொணா மரம்! அதில் தேன் கூடு ஒன்றும் கண்ணில் பட்டது. இந்த பழங்களோடு தேனைச் சேர்த்துச் சாப்பிட்டால் அதுவே மருந்தாகி எந்த பிரச் சினையும் இருக்காது. அவ்வளவு மலைப்பூக்களின் தேன். மலைப்பூ தேனுக்கு மயக்கம் தரும் குணமும் உண்டு. அள்ளி மட்டும் குடித்துவிடக் கூடாது.

அந்தக் கூட்டுத் தேனை குடிப்பதற்கு ஒரு வழி கண்டுபிடித்தான். சுற்றிலும் பார்த்து ஒரு சப்பாத்திக் கள்ளிச் செடியின் மையத்தில் பூத்தண்டாக எழுந்திருக் கும் குச்சி போன்ற பாகத்தை உடைத்து அதை அம்பு போல் முனையில் உண்டாக்கி ஈட்டி எறிவது போல் விசை யோடு தேன் கூட்டை நோக்கி எறிந்தான். குறி தவறாமல் அதுவும் கூட்டை துளைத்தபடி உட்புகுந்து அப்படியே நின்றது. சில நொடிகளில் அந்த குச்சி வழியாக தேனானது ஒழுகிச் சொட்டத் தொடங்கியது. அதை கையில் கூட பிடிக்கவில்லை. அப்படியே அண்ணாந்து வாயில் வாங்கிக் கொண்டான்.

கொஞ்சம் கசப்பு கலந்த இனிப்பு... அப்படியே பலாச்சுளையை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். அமிர்தமாக இருந்தது. கொய்யாவிலும் அரைப் பழமாக எடுத்துச் சாப்பிட்டான். தேன் பெருகியபடியே இருந்தது. அது தரையில் சிந்தி பாழாவதை அவன் விரும்பவில்லை. ஒரு கல்லை எடுத்து தான் அம்பு போல எரிந்த குச்சி மேல் எரிந்தான். குச்சியானது நழுவி கீழே விழுந்தது. பின்பும் கூட்டில் இருந்து தேன் சொட்டிற்று. ஆனால் அது சில



நிமிடங்களில் நின்றுவிடும். அதற்கே தேனீக்கள் கலந்து பறந்தன.

புனுகுப் பொட்டலத்தையும் திரும்ப எடுத்துக் கொண்டு வைத்தியரின் குகை நோக்கி நடக்க தொடங்கி னான். வைத்தியர் இன்னும் என்னவெல்லாம் வேலை வைக்கப் போகிறாரோ?

ஜனரஞ்சனி அலுவலகம்!

கோபால்தாஸ் சீட்டில் அவர் முன் உள்ள தொலை பேசி அவரை அழைத்தது. அவரும் ஒரு செய்தியை கவன மாய் படித்தபடியே ரிசீவரை எடுத்து காதில் வைத்தார்.

''எடிட்டர் சாரா?''

''ஆமாம் - நீங்க யார்?''

''நான் பிரபல நடிகர் இந்திரஜித் சாரோட பி.ஏ. மோகன் பேசறேன்.''

''பேசுங்க மிஸ்டர் மோகன்... சார் எப்படி இருக்கார்?''

''ரொம்ப நல்லா இருக்கார்... இப்ப கூட கொஞ்சம் முந்தி சுவிட்சர்லாந்துல இருந்து போன்ல பேசினார்...!''

''சுவிட்சர்லாந்துல இருந்தா..?''

''ஆமாம்... சார் ரெஸ்ட் எடுக்க அங்கதான் போய் இருக்கார்.''

''அப்படியா?''

''என்ன சார் அப்படியான்னு எதுவும் தெரியாத மாதிரி கேட்கறீங்க. உங்க பத்திரிகை கேள்வி பதில் பகுதில ஒரு வாசகர் இந்திரஜித் சார் எங்கே இருக்கி றார்னு கேட்டதற்கு, அவர் வெளிநாடு சென்றுவிட்டதாக கூறப்படுகிறது. ஆனால் உண்மையில் அவர் எங்கே இருக்கிறார் என்பதை அவராகச் சொன்னால்தான் உண்டுன்னுல்ல எழுதியிருக்கீங்க?''

''நாங்க இண்டஸ்ட்ரில பேசிக்கறத வெச்சும் அப்படி எழுதினோம் மிஸ்டர் மோகன்.''

''இருக்கலாம். சார் இப்ப போன்ல பேசினப்போ நானும் அவர்கிட்ட நீங்க ஓய்வு எடுக்கப் போறதை இங்க பல பேர் பலவிதமா பேசிக்கிட்டிருக்காங்கன்னு சொன்னேன்.''

''அது உண்மைதானே? கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய் அவர் நடிக்கிற படங்கள்ள முடங்கியிருக்கு. அவர் வந்து நடிச்சு கொடுத்தா உடனடியா இரண்டு படம் ரிலீசாயிடும். மற்ற படங்கள் வரிசையா வர ஆரம் பிச்சிடும்.''

''அவர் வரத்தான் போறார் - வந்து நடிச்சும் கொடுக் கப் போறார். அவர் வரும்போது அவரைப் பார்த்து இந்த சினிமா உலகமே வாயப் பிளக்கப் போவுதுன்னா பாத்துக் குங்களேன்...''

''சந்தோஷம்... நீங்க இதை சொல்லத்தான் போன் பண்ணீங்களா?''

''அதுக்காக மட்டுமில்ல... நீங்கதான் சார் வந்த உடனே அவரை முதல்ல பேட்டி எடுக்கப் போறீங்க. அட்டைப்படக் கட்டுரை கூட நீங்க போட்டுக்கலாம். முதல் பேட்டி முதல் உரிமை ஜனரஞ்சனிக்குதான்னு அவர் என்கிட்ட சொன்னார்....''

''ஓ... சாருக்கு எங்க பத்திரிகை மேல இருக்கற அபிமானத்துக்கு ரொம்ப நன்றி. சரி - சார் எப்ப சுவிஸ்ல இருந்து வரார்?''

''அதிகபட்சம் ஒரு வாரத்துல... ஏர்போர்ட்டுக்கே நீங்க உங்க நிருபரை அனுப்பிடலாம். இன்னொரு விஷயம்... சார் ஓய்வுக்கு பிறகு ஒரு பத்து வயசு குறைஞ் சுட்டார். இப்ப அவரை பார்த்தாக்கா நாற்பது வயசுக்கு மேல சொல்ல முடியாது.''

''அப்படியா?''

''நிச்சயமா?''



''ஆமா - அவருக்கு இப்ப எவ்வளவு வயசுன்னு சொல்ல முடியுமா?''

''என்ன சார் ஒரு ஐம்பத்தஞ்சு வயசு இருக்கும்கறது என் எண்ணம்.''

''அவர் டேட் ஆஃப் பர்த் உங்களால சொல்ல முடி யாதா?''

''பெரும்பாலும் அவர் யார்கிட்டயும் தன் வயசு பத்தி பேசறதில்ல. இருந்தாலும் உங்களுக்கு நான் சார் கிட்ட கேட்டுச் சொல்லிட்றேன்.''

''தேங்க்யூ... ஆமா சாரோட உண்மையான பேரே இந்திரஜித்தானா?''

''இல்ல சார்... சாரோட ஆக்சுவல் நேம் குமர குரு பரன். இந்திரஜித் அவர் சினிமாவுக்காக வச்சுகிட்ட பேர்.''

''அப்படியா ரொம்ப சந்தோஷம்... அப்புறம்...''

''இப்பவே என்கிட்ட பேட்டி எடுக்கறீங்களே சார்.. சார் வந்துடட்டும். அவர்கிட்ட எடுங்க. அதான் நல்லா இருக்கும்.''

''தேங்க்யூ வெரிமச்...'' - போன் இணைப்பு முடிந்து போனது. கோபால் தாஸ் நெற்றியில்தான் குமைச்சல்.

''என்ன இது... பி.ஏ. சுவிட்சர்லாந்துல இருக்கிறதா அழுத்தி பேசறான். நம்ப ஆள் நாகவனத்துல பார்த்ததா சொல்றாரே - எது உண்மை?'' கேள்வியோடு பிரபாக ருக்கு போன் போட்டுப் பார்த்தார்.

நாட் ரீச்சபுள் என்றே வந்தது.

கோபால்தாஸ் குமைந்தபடியே போனை கட் செய் தார்.

அர்ச்சுனன் சுனை அருகே உள்ள நாகசித்தர் குகையை ஏராளமான செடிகொடிகள் பந்தல் போல் மூடி மறைத்திருந்தன. வைத்தியர் இருப்பதே தெரியவில்லை. பழுப்பு நிற முயல்கள் சிலவற்றோடு நாய் ஒன்று குரைக் கும் சப்தம் கேட்டது. நாயும், முயல்களும் இருக்கிறது

என்றால் மனித நடமாட்டம் இருந்தே தீர வேண்டும். இந்த இரண்டும் வன மிருகங்கள் வாழும் இடத்தில் இருக்காது.

நாய் குலைத்தாலே புதிதாக ஒரு மனிதர் வந்து விட்டதாகத்தான் பொருள். சப்தம் கேட்டு குகைக்குள் இருந்து வைத்தியரே வெளியில் வந்தார். சுந்தரத்தை பார்க்கவும் 'வா உள்ளே' என்று அழைத்துச் சென்றார். குகை வாயிலில் நின்று கொண்டார்.

அப்போது குலைத்த நாயும் அவனருகே வந்து தொடர்ந்து குலைத்தது. நாட்டு நாய். அதிகபட்சம் மூன்று வயதிருக்கலாம். வைத்தியர் அதைப் பார்த்து 'பைரவா சும்மா இரு' என்று கூறவும் அடங்கிவிட்டது. அதன் பிறகுதான் அந்த நாயை சற்று தைரியத்தோடு பார்த்தான் சுந்தரம். அதன் நெற்றியில் மஞ்சள் குங்குமம் தெரிந்தது. மாடுகள் நெற்றியில்தான் மஞ்சள் குங்குமம் இருக்கும். அதுவும் பொங்கல் சமயத்தில்... நாயின் நெற்றியில் மஞ்சள் குங்குமம் எனும்போது ஆச்சரியம் ஏற்பட்டது.

''வைத்தியரே இது என்ன நாய் நெற்றியில் மஞ்ச குங்குமம்!'' என்று கேட்டான். வைத்யரும் அவன் தந்த புனுகுடன் அவனை வெளியே நிறுத்திவிட்டு உள்ளே சென்றார். அவன் கேள்விக்கு பதில் கூறாமல் சென்றவர் திரும்பி வரும்போது கையில் கயிறுகளால் கட்டப்பட்ட ஒரு மண் பானையோடு வந்தார். அதை ஒரு பையை பிடித்து எடுப்பது போல பிடித்து தூக்கலாம். அதற்கு தான் கயிறு. அதை அவன் வசம் தந்தார்.

''நான் இதை என்ன பண்ணணும்?''

''தூக்கிட்டு என் கூட வா...''

''என்னை என்ன சுமை தூக்கின்னு நினைச்சிட்டீங் களா?''

''பின்ன... நீ என்ன கலெக்டரா...? இல்ல பெரிய கோடீஸ்வரனா?'' - வைத்தியர் கோபமாக திருப்பி கேட் டார்.



''அப்ப படிச்சிருக்கணும். இல்ல பணமிருக்கணும். இல்லாட்டி மூட்டைத் தூக்கணும்ன்னு சொல்றீங்களா?''

''நீ அதிகம் பேசறே?''

''பேச வைக்கிறீங்க. புனுகு கேட்டீங்க. அது என் தொழில். புனுகையும் எடுத்துட்டு வந்து தந்தேன். அதுக்கே இன்னும் பணம் தரலை. இதுல பானையை கொடுத்து தூக்கிட்டு நடன்னா என்ன அர்த்தம்... நான் இன்னும் ஒரு வாய் சோறு திங்கல. வழில தேனும் பலாவும் கண்ணுல படவும் முன் பசி ஆறிட்டு வந்தேன்.''

அவன் பேசி முடித்த மறுநொடியே தன் ஜிப்பாவில் கையை விட்டவர் ஐநூறு ரூபாய் நோட்டுக்களாக ஒரு பத்து நோட்டுக்களை எடுத்து அவன் முன் நீட்டினார். அவன் ஐநூறு ரூபாயை பார்த்திருக்கிறான். ஆனால் தொட்டதே இல்லை. அவைகளை இப்போது ஏராளமாக பார்க்கிறான். பார்க்கவும் திகைக்கத் தொடங்கினான்.

''என்ன பாக்கறே - பிடி...''

''இது அம்புட்டும் எனக்கா?''

''உனக்கேதான். இனி பேசமாட்டியே...?''

''நீங்க யாரையாவது கொலை பண்ணச் சொல்லுங்க. பண்றேன். எனக்கு தேவை பணம்.'''

''அப்ப என் கூடவே இரு. நான் சொல்றத எல்லாம் கேள். இந்த மலைல உள்ள பதிமூணு காட்டுலயே உன்னை அடிச்சிக்க ஆள் இல்லேன்னு பண்றேன்.''

''நெசமாவா?''

''இது பைரவ சத்தியம்...''

''அது யார் வைத்யரே - பைரவன்.''

''அதோ அவன்தான்'' - வைத்யர் நாயை காண்பித் தார். அவனுக்கு அவர் கேலி செய்கிறாரோ என்று தோன் றியது.

''வைத்யரே..''

''இழுக்காதே... பைரவ சாமியோட வாகனம் தான்

நாய். முருகன்னா மயில், பெருமாள்னா கருடன், சிவன்னா காளமாடு. அப்படி பைரவர்னா நாய். அதான் அந்த பைரவனாகவே இதை நினைச்சு பூஜை செய்துகிட்டும் வரேன். இந்த நாய் யாரைக் கடிச்சாலும் கடிபட்டவங்க அதிகபட்சம் மூணு நிமிஷத்துல நாய் மாதிரி குலைக்கத் தொடங்கி அப்படியே செத்தும் போயிடுவாங்க...'' - அவர் சொல்லச் சொல்ல சுந்தரத்துக்குள்ளும் ஒரு கிலி உருவாகத் தொடங்கியது.

''நம்ப முடியல இல்ல....''

''நாய் கடிச்சா நல்லது இல்லேன்னு தெரியும். ஆனா பத்து பதினைஞ்சு ஊசி போட்டா குணமாயிடும்னு கேள்விப்பட்டுருக்கேன். ஆனா நீங்க என்னமோ இதை பாம்பு கணக்கா சொல்றீங்களே?''

''இது பாம்பு மாதிரிதான்... பல மாசமா இதுக்கு 'சர்பகந்தம்'கற குளிகையை சாப்பிடக் கொடுத்து இதோட ரத்தத்தையே நான் விஷமாக்கிட்டேன்...''

''சர்பகந்தமா? அப்படி ஒரு மருந்து இருக்கா சாமி...''

''அது என்னோட கண்டுபிடிப்பு... என்னை யாருன்னு நினைச்சே... என்னால செய்ய முடியாதது பிணத்துக்கு உயிர் வர வைக்க முடியாதது மட்டும்தான். ஆனானப்பட்ட எய்ட்சுக்கே நான் மருந்து கண்டுபிடிச்சுட்டேன்.''

''இந்த பொம்பள சீக்குன்னு சொல்வாங்களே அதானே சாமி..''

''உனக்கு கூட தெரிஞ்சிருக்கே?''

''அதான் இங்கயே ஒரு பாதிரியார் கூட்டமா வந்து பிரச்சாரம் பண்ணாரே. படிக்காத எங்ககிட்டதான் அது அதிகமா உருவாகுதாம். நாங்கதான் கவனமா இருக்கணும். குளிச்சு சுத்தபத்தமா இருக்கணும்னுல்லாம் சொன்னாரு...'' - தனக்கு தோன்றியதை அப்படியே பேசி விடும் சுபாவம் உள்ள சுந்தரத்தின் பேச்சை கேட்டு சிரித்தார் வைத்யர்.



''இப்ப எங்க சாமி போகப் போறோம்?'' - என்று அவனும் மதிப்பாக கேட்கவும் 'கழுகு மேட்டுக்கு' என்றார்.

''அய்யோ அங்கையா?'' - என்று கேட்கும்போதே பயத்தை எதிரொலித்தான் சுந்தரம்!

★ ★ ★

## 9

நாகவனம் பற்றி தாவரவியல் ஆய்வாளர்கள் பலர் ஆய்வு செய்திருக்கின்றனர். ஒரு வனத்தின் செழிப்புக்கு அதன் மண்வாகு, நீர்வாகு, காற்றோட்டம் - இவைகளை விட சூரியனின் தாக்கம் முதலியவை மிக முக்கியமாகும். குறிப்பாக சூரிய கதிர்கள் ஒரு வனத்தின் மேல் குறைந்தபட்சம் எட்டு மணி நேரமாவது விழ வேண்டும். இதில் இளஞ்சூட்டு நேரம் காலையாகும். உச்ச சூட்டு நேரம் நண்பகலாகும்.

அந்த சூடு கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து மாலையில் அது திரும்ப இளம் சூடாகும். காலை நேரத்து இளம் சூட்டுக்கும், மாலை நேரத்து இளம் சூட்டுக்கும் நிறைய வேற்றுமைகள் உண்டு. குளிர்ந்த ஒன்று மெல்லச் சூடாவது என்பது காலையில்... சூடான ஒன்று மெல்ல குளிரத் தொடங்குவது என்பது மாலையில்... இந்த நேரம் வனத்தின் எல்லா தாவரங்களிடமும் ஒரே அளவில் இருக்க வேண்டும். மாறாக சில உயர்ந்த மரங்கள் மட்டும் சூரிய கிரணத் தாக்குதலுக்கு தேவைக்கேற்ப ஆளாகி மற்ற தாவரங்கள் மறைவில் இருக்க நேர்ந்தால் அவைகளிடம் ஒரு சீரான வளர்ச்சியை பார்க்க முடியாது. பார்ப்பதற்கு பொசுபொசுவென்று இருக்கும் போதிலும் தாவரத்தின் ரசத்திற்குள் மெல்லிய வேற்றுமை இருக்கும்.

நாகவனம் இம்மட்டில் சீரான சூரியத் தாக்கத்தை சமமாக எல்லா தாவரங்களுக்கும் பெற்ற ஒரு வனம் எனலாம். எனவே இந்த வனத்தில் மட்டும் அமிர்த குணமுடைய பல தாவரங்கள் உள்ளன!

கழுகு மேடு என்பது நாகவனத்தில் இருந்து வெகு தொலைவில் உள்ளது. அங்கே ஒரு சுனை உண்டு. அந்த சுனைக்கு பின்னால் ஒரு கதை உண்டு. இந்திரன் எறிய வஜ்ராயுதம் அந்த சுனை இருக்கும் இடத்தில் பட்டு அங்கே அந்த சுனை தோன்றியதாகவும் அதில் உள்ள நீருக்கு மின்னாற்றல் மிகுதியும் உண்டு என்றும் கூறுவார்கள். அந்தச் சுனைக்கு நீர் அருந்த வரும் மிருகங்கள் அந்த நீரை அருந்தினால் வயிறானது கல் போலாகி, உயிரை விட்டுவிடும். அதற்காகவே அந்த இடத்தில் நூற்றுக் கணக்கான கழுகுகள் அமர்ந்திருக்கும். அதை கழுகுகளின் சரணாலயம் என்றுகூட கூறலாம். அவைகளின் அலகுகளில் இருந்து கொத்துபடாமல் தப்பிப்பது மிக கடினம். எனவே யாருமே அங்கே போக மாட்டார்கள். மேலே உள்ள பாறைகளிலும் இரும்புத்தாது அதிகம்.

கஞ்ச மலையில் கூட கற்களில் இரும்புத்தாது அதிகம். அதனால்தான் கஞ்சமலையில் இரும்புத் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. இங்கேயும் இரும்புத்தாது இருப்பது அவ்வளவாக வெளியுலகிற்கு தெரியாது என்றுதான் கூற வேண்டும்.

இரும்புத்தாது இருக்கிற காரணத்தாலேயே மழை பெய்யும்போது அதிக அளவில் இடியானது அங்குதான் விழும். அப்படி விழும் இடி மின்னலின் மின்சக்தி என்பது எல்லையில்லாத அளவுக்கு உள்ளது. அந்த மின் சக்தி ஏறிய ஒரு நீராக கழுகு மேட்டு சுனை நீர் இருப்பது வைத்தியருக்கு எப்படித் தெரியும் என்று தெரியாது.

அப்படி ஒரு இடம் நோக்கி அவர் நடப்பது சுந்தரத்தை பல கேள்விகள் கேட்கச் செய்தது.



''வைத்தியரே.... இந்த பானையோட அங்க போய் என்ன பண்ணப் போறோம்?''

''அங்க சுனைல இருக்கிற நீரை இதுல எடுத்துக்க றோம்.''

''அந்த நீருக்கு மட்டும் அப்படி என்ன இருக்கு?''

''உனக்கு சொன்னா புரியாது. அது தண்ணி மாதிரியே இருக்காது. கொஞ்சம் கொழ கொழன்னு எண்ணை மாதிரி இருக்கும். அதுக்கு 'உச்சி உதகம்னு' பேர்.''

''உச்சி உதகம்னா...''

''உச்சியில இருக்கற உதக நீர்னு பேர்...''

''அது எதுக்கு பயன்படும்?''

''பல விஷயங்களுக்கு... குறிப்பா அதுல யவ்வன காந்தியை சேர்த்து அரைச்சு உடம்புல பூசிகிட்டா தோல் சுருக்கம் போயிடும். அதுமட்டுமில்ல பொன்னா மின் னும்... உள்ளயும் மருந்து சேர்த்து அளவாச் சாப்பிட உறுப் புகள் பலப்படும். மொத்தத்துல நூறு வயசுக்கிழவன் சரி யான விகிதத்துல எடுத்துக்கிட்டா ஐம்பது வயசுக்கு திரும்பிடுவான். அவனும் இன்னொரு முறை எடுத்து கிட்டா இருபத்தஞ்சு வயசுக்கு திரும்பிடுவான்...''

''இதுக்கு ஆதாரம்...?''

''கொஞ்ச நேரத்துலயே பார்ப்பே பார்...''

''எப்படி?''

''முதல்ல கழுகு மேட்டுக்கு போறோம். சுனை நீரை எடுக்கறோம். பிறகு நடக்க நடக்க நீயே தெரிஞ்சிக்குவே?''

''சாமி... மேல கழுகுங்க பறந்து பறந்து வந்து தாக் குமே?''

''அது தாக்காம இருக்க வழி கண்டுபிடிச்சிட்டேனே.''

''எப்படி வைத்யரே?''

''தலைல பூலான் கொடிய சுத்திகிட்டா அதுகிட்ட வர்றது இல்ல...''

''சிரியாநங்கை வாடை பாம்புக்கு ஆகாதும்பாங் களே அப்படியா வைத்யரே...''

''அப்படியேதான்...''

''இதுக்கு நான் எதுக்கு வைத்யரே வரணும். இந்த சுனை நீரை நீங்களே எடுத்துகிட்டு வந்துடலாம் தானே?''

''வயசாயிடிச்சில்லியா - பானையை சுமந்துகிட்டு வர்றது கஷ்டமா இருக்கு....''

''கைல வெண்ணையை வெச்சுகிட்டு நெய்க்கு அலையற மாதிரி இருக்கு உங்க பேச்சு.''

''புரியுது... இளமையை கொடுக்கற மருந்தை நீங்க ஏன் சாப்பிடக்கூடாதுன்னு கேக்கப் போறே... அப்படித் தானே?''

''ஆமாம் வைத்யரே.''

''நான் இளமையாயிட்டா ராமலிங்கைய்யாங்கற வைத்யர் செத்ததா அர்த்தமாயிடும். மதிப்பும் மரியாதை யும் வயசான ராமலிங்கைய்யாவுக்கு தானே தவிர இளமையான ராமலிங்கைய்யாவுக்கு இல்ல. நானும் கொஞ்ச நாள் இளமையா இருந்து பார்த்தேன். எல்லாரும் என்னை ராமலிங்கைய்யா மகனான்னு கேட்டாங்க. சந்தோஷமா இருந்தது. அப்படி பார்க்கும்போது... ஆனா அப்பாகிட்ட தான் வைத்யம் பார்த்துப்போம்னு அவங்க சொல்லும்போது தான் எனக்கு யதார்த்தம் புரிஞ்சுச்சு.''

''ஓ ஹோ... உங்களுக்கு இப்படி ஒரு சிக்கலா வைத்யரே?''

''அது சிக்கல் மட்டுமில்ல... நான் இருந்தும் இல் லாம போற கொடுமை.''

''அப்புறம் எப்படி வைத்யரே திரும்ப இப்படி மாறி னீங்க?''

''மருந்தை நிறுத்தினேன் - ஆயிட்டேன்.''

''ஆ... அப்ப இந்த இளமை மருந்தை சாப்டுகிட்டே இருக்கணுமா?''

''ஆமாம். மூணு மாசத்துக்கு ஒரு தடவை... ஒரு வருஷத்துக்கு ஒரு தடவை. மூணு வருஷத்துக்கு ஒரு தடவைன்னு இதுல பிரிவுகள் இருக்கு...''



- வைத்தியர் மிக சகஜமாக அவனிடம் விளக்கிக் கொண்டே நடந்தார். கூடவே வந்து கொண்டிருந்தான் பைரவன்.

அந்த பைரவன் கடித்தால் மூன்று நிமிடத்தில் மரணம் என்று வைத்தியர் சொன்னதில் இருந்தே அதை பார்க்க பயமாக இருந்தது. நாய் வடிவில் ஒரு புலியோடு வருவதாகத் தோன்றியது.

வனப்பகுதியில் மேல் நாட்டிலிருந்து கீழ் நாட்டிற் குள் நுழைந்துவிட்டனர். கீழ்நாட்டு வழியாக ஜீப்பும் காரும் செல்லும் மலைப்பாதை ஒன்று உண்டு. அதை கடக்கும்போது குதிரை குளம்படி சப்தம் கேட்டது.

அந்த சப்தம் கேட்ட நொடி வைத்தியருக்கு முகத் தில் ஒரு பரபரப்பு உணர்ச்சி ஏற்பட்டு அடங்கியது. சுந்தரம் அதை நன்றாகவே கவனித்தான். குதிரையில் வந்தவன் வனக்கள்ளன் மண்டையன் என்பவன். மண்டையன் சந்தன மரங்களைப் பார்த்து பார்த்து வெட்டுபவன். பாதி நாள் சிறை - பாதி நாள் மலை என்பதுதான் அவனுக்கும் கணக்கு. மலையில் உள்ள பதிமூன்று நாட்டுக்காரர் களுக்குமே அவனை நன்றாக தெரியும். அவனிடம் யாரும் எதுவும் வைத்துக் கொள்ள மாட்டார்கள். அவனும் மலை ஜனங்களிடம் தன் கித்தாப்பை காட்ட மாட்டான்.

அப்படிப்பட்டவன் வைத்தியரை பார்க்கவும் குதிரை யை தேக்கி நிறுத்தினான். குதிரை மேல் மண்டையனை பார்க்கவும் வைத்தியரின் நாய் குலைக்கத் தொடங்கியது.

''அடச்சீ சும்மா இரு. என்னா வைத்தியரே - இந்த நாய்தான் உன்னோட பாதுகாப்பா?'' - என்று வைத்திய ரிடமும் கேட்டான். வைத்தியர் அவன் கேள்விக்கு பதில் கூறாமல் வெறித்தார்.

''என்னா வாயைத் திறந்து பேசமாட்டியா?''

''நான் எதுக்கு உன்கிட்ட பேசணும்?''

''என்ன திமிறா - நான் பேசுனா நீயும் பேச வேண்டி யதுதானே?''

''முதல்ல இந்த மாதிரி அதட்டற வேலையை வெச்சுக்காதே. உனக்கு இந்த மலை ஜனங்கள் பயப்படலாம் - நான் பயப்பட மாட்டேன், தெரிஞ்சுக்க..''

''அப்படியா.. என்ன நீ உட்டா அதிகம் பேசிகிட்டே போறே - உன்ன மாதிரி ஆட்கள்ளாம் இந்த காட்டுல திரியறது எனக்குதான் ஆபத்து...''

''வேண்டாம் மண்டையா - வந்த வழியே திரும்பிப் போயிரு. என்கிட்ட மோதி இல்லாம போயிடாதே...''

''ஏய்... என்ன பீலா உட்றே? இந்த காடே என்ன பாத்து நடுங்கிட்டிருக்கு. நீ என்ன சொம்பு...?'' - மண்டையன் பயங்கர உஷ்ணமாகிவிட்டான். குதிரையில் இருந்தும் குதித்துக் கொண்டு இறங்கினான்.

அவன் இறங்கிய வேகம் புனுகு சுந்தரத்தையும் அதட்டியது. மண்டையன் புனுகு சுந்தரத்தையும் அவன் கையில் இருக்கும் பானையையும் பார்த்தான்.

''நீ புனுகு எடுக்கறவன் தானே?''

''ஆமாம்ணே...''

''இவன்கூட எங்க சேர்ந்தே?''

''உதவிக்கு கூப்பிட்டார். அதான் வந்தேன்.''

''இவன் நல்லவன் இல்லை. அது தெரியுமா உனக்கு?''

''அண்ணே...''

''என்ன அண்ணே பானையை இவன் கைல கொடுத்திட்டு ஓடிடு. இவன் கொஞ்ச நாளாவே ஒரு திட்டத்தோட இந்த மலைக்காட்டை சுத்தி வர்றான். குறிப்பா இந்த மலையை பத்தி நல்லா தெரிஞ்சவன் சாஸ்த்ரம் படிச்ச பெருசுங்கள்ளாம் வரிசையா செத்துகிட்டு வர்றது இவனாலதான். இன்னும் ஒண்ணு ரெண்டு பெருசுங்கதான் இருக்காங்க. அவங்களயும் இவன் இங்க இருந்தா கொன்னுடுவான். அப்புறம் இந்த மலைய பத்தின விஷயங்கள் இவனுக்கு மட்டும்தான் தெரியும். வேற வழியில்லாம எல்லாரும் இவனை வன சாஸ்த்ரியா நினைச்சு மதிப்பு



கொடுக்கணும். அதுதான் இவன் திட்டம்...'' - என்று மளமளவென்று அவன் சொல்லச் சொல்ல வைத்தியருக்கு கண்ணும் காதும் சிவக்கத் தொடங்கியது.

அவன் மேலும் பேசினால் அது தன்னை பற்றிய முழுமையான ரகசியங்களை எல்லாம் வெளிக்கொண்டு வந்துவிடும் என்று பயந்தவர் போல் ''பைரவா...'' என்று தன் நாயைப் பார்த்து விரலைச் சொடுக்கினார். அடுத்த நொடி அது மண்டையன் மேல் ஒரே பாயாக பாய்ந்தது. மண்டையனும் எதிர்பார்க்கவில்லை. பாய்ந்த வேகத்தில் அவன் மணிக்கட்டை ஒரு கடி கடித்தது. அடுத்தடுத்து வரிசையாக கடிகள். அவனும் முடிந்த மட்டும் அதை சமாளிக்கப் பார்த்தான். அவன் இடுப்பில் ஒரு நாட்டுத் துப்பாக்கி வைத்திருந்தான். அதை எடுத்து சுட முயன்றான். ஆனால் அது தந்திரமாக தப்பி அங்கும் இங்கும் ஓடியது. புனுகு சுந்தரத்துக்கு ஒரு சினிமா பார்ப்பது போல் இருந்தது. மண்டையனும் மெல்ல தலை சுற்றி கீழே விழத் தொடங்கினான். விழுந்த சில நொடிகளில் அவன் வாயிலிருந்தும் நுரை வெளிப்பட்டது. வைத்தியர் அதைப் பார்த்து கண்களை அகட்டியவராக ''என்கிட்ட மோதிச் சாகணும்னு உன் தலைல எழுதியிருக்கும்போது அதை யாரால் மாத்த முடியும்னு'' - கேட்டபடியே புனுகு சுந்தரத்தை பார்த்தார். சுந்தரம் பார்வை இப்போது முற்றாக மாறிவிட்டிருந்தது. அவன் கண்களில் பயம் தெரிந்தது.

''என்ன பாக்கறே - பயந்துட்டியா?''

''இ... இல்ல... ஆமா...''

''பயப்படாதே... என்னை எதிர்க்கிறவங்களுக்குத்தான் நான் எதிரி. எனக்கு உதவறவங்களுக்கு இல்ல...'' - என்ற பதிலோடு நடந்தார். பானையைப் பக்குவமாய் சுமந்தபடி அவரை பின்தொடர்ந்தான் புனுகு சுந்தரம்.

## 10

ஒரு மலை வனத்துக்கு வெய்யில் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் மழையும்! அப்படி பெய்யும் மழை நீரானது பெருகி வழிந்து அருவியாக விழுந்து மலையை விட்டு நீங்கி விடுவது ஒருவிதம். அதற்கு நடுவில் அந்த மலை யகத்தில் பெரும் ஏரியாக உருமாறி தேங்கி நிற்பது இன்னொரு விதம்!

தேங்கி நிற்கும்போது அந்த மலையகத்தில் வீசும் காற்றில் உஷ்ணம் என்பது பெரிய அளவில் இருக்காது. அதோடு மலைகளில்தான் இரவு நேரங் களில் மரங்கள் வெளியிடும் கரியமில வாயு மிகுதி யாக இருக்கும். பகலில் இதுவே ஆக்சிஜனாக மாறுகிறது. அப்படி மிகுதியாகும் வாயு அங்கே மலையில் தேங்காதபடி வீசும் காற்றில் மலையை விட்டு வெளியேறி விட வேண்டும். வெளியேறாத மலைகளில் வாழும் மக்களும் சரி, உயிரினங்களும் சரி மிகவும் சோம்பேறித்தனம் உடையவர்களாக இருப்பார்கள். சுறுசுறுப்படையவே சிரமப்படுவார்கள்.

ஆனால் நாகவனத்தில் காற்றின் வீச்சில் மிகுந்த வேகமும் நாகவனத்தைத் தொடர்ந்து பெரும் பள்ளத் தாக்கும், அந்த பள்ளத்தாக்கை தொடர்ந்து நகரப் பகுதிகளும் இருப்பதால் நாகவனத்தில் வசிப்பவர் களிடம் எப்பொழுதும் நல்ல சுறுசுறுப்பு இருக்கும்.

வனங்களின் பின்னே இப்படி ஒவ்வொரு பூதங் களுக்கும் ஒரு வரைமுறையும் நிலைப்பாடும் இருக்கிறது.

கழுகுமேடு வந்துவிட்டது!

ஏராளமாய் எட்டி மரங்கள் - நடுநடுவே பருத்த இலை கொண்ட புன்னை மரங்கள்... இதுபோக இலை உதிர்ந்த பட்டுப்போன மரங்கள்... அவைகளின் கிளை



களில் எல்லாம் கழுகுகள் அமர்ந்திருந்தன. நேர் மேலான வானில் சில கழுகுகள் வட்டம் போட்டுக் கொண்டிருந் தன. பாறைகளுக்கு நடுவில் சப்பாத்திக் கள்ளிகளும், ஆவாரம் செடிகளும் மண்டிக் கிடந்தன. சுந்தரத்துக்கு கழுகுகளை பார்க்கவும் சற்று பயம் எடுக்கத் தொடங் கியது.

''பயப்படாதே...'' - என்ற வைத்தியர் அவனை அருகில் அழைத்து தன் தோள் துண்டை எடுத்து அவனுக்கு தலைப்பாகை போல் கட்டிவிட்டார். பின் பூலான் கொடி வேரையும் பூவையும் அந்த தலைப்பாகையில் வெளியே தெரியும்படி செருகினார்.

''இப்ப நீ மல ஏறு... எந்த கழுகும் உன்னை எதுவும் செய்யாது. அதோ அந்த தொந்திப்பாறை மேல நீ ஏறும் போது உனக்கு சுனை தெரியும். சுனைல இந்த பானையை முக்கி உச்சி உதக நீரை வழிய வழிய எடுத்துக்கோ. பார்த்து பக்குவமா உன் தலை மேல வெச்சு எடுத்துக் கிட்டு வா. நான் இங்கேயே இருக்கேன்'' - என்றார் வைத் தியர். புனுகு சுந்தரம் கொஞ்சம் பயம், கொஞ்சம் தைரியம் என்கிற கலவையோடு பாறைகளின் மேல் பானையை பிடித்துக் கொண்டு ஏறினான். கழுகுகளை அவனை கொத்துவது போல தலை வரை வந்தன. ஆனால் கொடி யும் பூவும் அவைகளை துரத்தி அடித்தன. அந்த கொடியும் பூவும் எதனால் அவைகளுக்கு விரோதியாயின என்ப தெல்லாம் மூலிகை ரகசியங்கள் அறிந்தவர்களுக்கே தெரிய வரும்.

புனுகு சுந்தரமும் பாறைகளில் தாவித்தாவி ஏறி தொந்திப்பாறை மேல் போய் நின்றான். அங்கிருந்து பார்த்தபோது அந்த சுனை தெரிந்தது. ஒரு பெரிய சமதள மான பாறை நடுவே உள்ளங்கை குழி போல குழி விழுந்து அந்த குழியை நீர் சூழ்ந்து இருந்தது. அந்த நீரும் பார்ப் பதற்கு பச்சையாக இருந்தது. அதை நெருங்கி தண்ணீரை தொட்டபோது முன்பே வைத்தியர் சொன்னது போல

அந்தத் தண்ணீர் சற்று கொழகொழப்பாய் இருந்தது. ஒரு மாதிரி துர்வாடையும் வீசியது. எங்கிருந்து துர்வாடை வருகிறது என்று பார்த்தபோது சற்று தள்ளி ஒரு பாறை அருகே வரையாடு ஒன்று செத்துப்போய் விறைத்துக் கிடந்தது. அது செத்துப்போய் பல நாள் ஆனதில் அதை கழுகுகள் பியத்துக் குதறி முடித்திருந்தன. அதுதான் வாடைக்குக் காரணம்.

வரையாடுகள் தாகத்திற்கான தண்ணீர் என்று கருதி உச்சி உதக நீரை குடித்துவிட்டு வயிறு கல்லாகி செத்து விடும். அப்படி செத்துவிட்ட மிருகங்களை சாப்பிடு வதற்காக பறந்து வந்த கழுகுகள்தான் அங்கேயே நிரந்தர மாக தங்கிவிட்டன.

பார்த்த மாத்திரத்தில் புனுகு சுந்தரமும் புரிந்து கொண் டான்.

பானையில் தண்ணீரை பக்குவமாக சேர்த்தான். பின் தளும்பத் தளும்ப தலையில் தூக்கி வைத்துக் கொண் டான். மெல்ல நடந்து வைத்தியரை நெருங்குவதற்குள் பல கழுகுகள் அவன் தோளை உரசிச் சென்று பயமுறுத் தின!

சகித்துக் கொண்டு ஒரு வழியாக வைத்தியரை நெருங்கினான்.

மேல் மூச்சு கீழ் மூச்சும் வாங்கினான். நின்ற வேகத் தில் பானையில் இருந்து சற்று தண்ணீரும் தளும்பியது.

''பார்த்து... இது அபூர்வமான நீர் - விரயமாகக் கூடாது'' என்றவர் அவன் தலைப்பாகையை அவிழ்த்து பானை வாயை கட்டினார்.

''உம் நட...'' - என்று திரும்பி நடக்கத் தொடங்கினார். வழியில் இரு இடங்களில் பானையைத் தன் கைகளில் வாங்கிக் கொண்டு புனுகு சுந்தரத்தை ஒரு மர உச்சியில் ஏறி அதில் பூத்திருந்த பூக்களை பறிக்கச் சொல்லி வாங்கிக் கொண்டார். அதேபோல் ஒரு ஓடையின்



நடுவில் இருக்கும் கொழகொழப்பான சேற்றினை எடுத்துத் தரச் சொல்லி அதை பெரிய காட்டு இலையில் வைத்து கட்டி எடுத்துக் கொண்டார்.

எல்லாம் எதற்கு என்று சுந்தரத்துக்கு புரியவில்லை.

எல்லாவற்றோடும் அவரது குகையை நோக்கி நடந் தான்!

**ஆ**பீசில் நிலை கொள்ளாத தவிப்பில் இருந்தார் கோபால்தாஸ். சக உதவி ஆசிரியர் குமரன் அவர் எதிரில் பிரபாகரை தொடர்பு கொள்ள மாறி மாறி முயன்றபடி இருந்தார். ரிங் போய்க் கொண்டேயிருந்தது. ஆனால் பதில் ரெஸ்பான்ஸ் மட்டும் இல்லை.

''சார்... ஒருவேளை சைலண்ட் மோட்ல போட்டுருப் பாரோ...?''

''அப்படியே இருந்தாலும் வைப்ரேடர் ஒர்க் பண் ணுமே.''

''செல்போனை கீழ வெச்சிருந்தா..?''

''குளிக்கும்போது தவிர மத்த நேரங்கள்ள பிரியக் கூடாதுன்னு நான் உத்தரவே போட்டுருக்கேன் குமரன்.''

''அப்ப அங்க போய் பிரபாகரை தேட்றதுதான் சார் ஒரே வழி...''

''நீங்க போய் பாத்துட்டு வர்றீங்களா?''

''உங்க விருப்பம்தான் சார்...''

''எனக்கு பயமா இருக்கு. நாம போலீஸ் இல்லை. ரிஸ்க் எடுக்க... நமக்கு பாதுகாப்பு முதல்ல - பிறகுதான் மத்த எல்லாம்.''

''பிரபாகர் ரொம்ப எச்சரிக்கையானவர்தான் சார். நாம பயப்படத் தேவையில்லை'' - குமரன் விளக்கம் தரும்போதே பிரபாகரிடம் இருந்து அழைப்பு வந்தது.

''சார் பிரபாகர் நம்பர். அவர்தான் கூப்பிட்றார்...'' - என்றபடி குமரன் காதை கொடுத்தார்.

"ஹலோ யார் பேசறது?"

"யார் பேசறதா - பிரபாகர் நான் குமரன் பேசறேன்."

"சார் இது பிரபாகர் சார் போன்தான். ஆனா பேசறது பிரபாகர் இல்லை. வாட்சர் வரதராஜன்."

"ஓ... மிஸ்டர் வரதராஜன் பிரபாகர் இல்லையா. அவர் போன் எப்படி உங்ககிட்ட?"

"அதை ஏன் சார் கேக்கறீங்க..?" - என்று ஆரம்பித்த வரதராஜன் பிரபாகர் தன்னை இரவு வேளையில் சந்தித்ததை சொல்லி - இறுதியாக பிரபாகர் இந்திரஜித்தை பார்த்துவிட்டு ஓடியது வரை கூறவும் குமரன் அதை ஸ்பீக்கர் போனில் போடவும் ஆசிரியர் கோபால்தாசும் கேட்டுக் கொண்டிருந்தார்.

"நல்லா தெரியுமா... பிரபாகர் இந்திரஜித் சார் பின்னால்தான் போனாரா?"

"ஆமாம் சார்... அப்படித்தான் நினைக்கறேன்.. இருட்டு நேரம். நிலா வெளிச்சத்துல தெளிவா பார்க்க முடியல..."

"அப்ப அது வேற யாரோவா கூட இருக்கலாம் இல்லையா?"

"இருக்கலாம் சார்... இந்த வைத்தியர் ராமலிங்கையா இந்த மலைக்கு வந்ததுல இருந்தே எல்லாமேல்ல ஒரே மர்மமா இருக்கு..."

"அப்ப வைத்தியர் அங்கதான் இருக்காரா?"

"அவர் இங்கதான் சுத்திகிட்டிருக்கார்."

"இப்ப பிரபாகர் பேக், கேமரா, செல்போன் எல்லாம் உங்ககிட்டதான் இருக்கா..."

"ஆமாம் சார்... போன் இப்ப சத்தம் போடவும் கூப்ட்ட நம்பரை வெச்சு நான்தான் பேசிக்கிட்டிருக்கேன்."

"தேங்க்யூ மிஸ்டர் வரதராஜன். அதை எல்லாம் பத்ரமா வெச்சிருங்க. நான் இன்னிக்கே ஒரு கார்ல புறப்



பட்டு அங்க வரேன். மிச்ச விஷயங்களை நேர்ல பேசிக்கலாம்." - குமரன் பேசி முடித்தவனாக கோபால்தாசை பார்த்தான்.

அதேசமயம் கோபால்தாசின் பேரில் அழைப்பொலி. அவரும் காதை கொடுத்தார்.

"சார்... நான் இந்திரஜித் சாரோட பி.ஏ. பேசறேன். சார் ரெண்டு நாள்ல சுவிட்சர்லாந்துல இருந்து கிளம்பி வந்துட்றார். அதாவது நாளை மறுநாள் நைட் எட்டு மணிக்கு சென்னை மீனம்பாக்கம் ஏர்போர்ட்ல ஸ்விஸ் ஏர்ல இருந்து சார் இறங்கறதை பார்க்கலாம்."

"அப்படியா சார்..? ரொம்ப சந்தோஷம். நான் ஏர்போர்ட்டுக்கு எங்க ரிப்போர்ட்டரை அனுப்பறேன்."

"நீங்களே நேர்ல வந்தா நல்லா இருக்கும். உங்க அவ்வளவு சந்தேகத்தையும் நீங்க கேட்டு விளங்கிக்கறது தான் சரி."

"முயற்சி செய்யறேன் சார்." - கோபால்தாஸ் அந்த பதிலோடு செல்போனை பாக்கெட்டில் போட்டபடி குமரனை ஊடுருவினார்.

"சார்..."

"இந்திரஜித் இப்ப சுவிட்சர்லாந்துல இருக்கிறதாவும், நாளை மறுநாள் வரப் போறதாவும் போன்..."

"அப்ப பிரபாகர் காட்டுல யாரை ஃபாலோ பண்ணியிருப்பார்?"

"இதுக்கு பதில் பிரபாகர் வந்தாதான் தெரியும். நீங்க உடனே புறப்படுங்க. எப்படியாவது பிரபாகரை சந்திச்சு அவரை பத்ரமா அழைச்சுகிட்டும் வர்றீங்க."

"ஷ்யூர் சார்..."

"ஜாக்ரதை குமரன்." - கோபால்தாசின் எச்சரிக்கையோடு குமரனும் நாகவனம் நோக்கி புறப்பட்டார்!

## 111

> ஒரு மலை மட்டும் ஒரு மனிதனுக்கு வசமாகி விட்டால் அதன் பின் அவனை வெல்ல யாருமில்லை என்பதுதான் பெரும் உண்மை. புராணங்களிலும் இதனால்தான் நகரங்களை விட வனங்கள் பெரிதாக கருதப்பட்டன! வனங்களே மனதை ஒடுக்கி தவம் செய்யவும் மிக ஏற்றவையாக விளங்கின. வனங்களில் உள்ள மரங்களுக்கு பின்னே ஒரு பெரும் ரகசியம் உண்டு. பெரும் ஞானிகளும், முனிவர்களும் மற்றும் நமது மூதாதையர்களுமே மரங்களாக பிறந்து வாழ்கிறார்கள் என்பதுதான் அது.
>
> எனவே ஒரு மரத்தை நாம் பேணிடும்போது நாம் மூதாதையர்களையும் சேர்த்துப் பேணுகிறோம். ஒருவன் தன் வாழ்நாளில் ஒரு மரத்தை நட்டு வளர்த்து அதை பாதுகாத்தாலே போதும் அவனது எப்பேர்ப்பட்ட பாவங்களும் அந்த மரம் வளர வளரவும் அதன் கிளைகளில் பறவைகள் இளைப்பாறவும் செய்கையில் நீங்கிவிடுகின்றது என்றால் ஆயிரக்கணக்கான பறவைகளும் விலங்குகளும் உயிர்வாழப் பயன்படும் வனங்கள் எவ்வளவு பலம் வாய்ந்தவையாக இருக்க வேண்டும்?

குகைக்கு வந்தபோது உச்சி வெயில் வந்துவிட்டது. பானையை கீழே இறக்கி வைத்த புனுகு சுந்தரம் வியர்வை வழித்துப் போட்டவனாக பக்கமாய் உள்ள பாறை மேல் அமர்ந்து இளைப்பாறத் தொடங்கினான்.

வைத்தியரும் பானையை எடுத்துக் கொண்டு குகைக்குள் நுழைந்தார். சுந்தரத்துக்கும் குகைக்குள் வைத்தியர் என்ன செய்யப் போகிறார் என்று பார்க்க ஆசையாக இருந்தது. உள்ளே மெல்ல எட்டிப் பார்த்தான். பகீரென்றது. கண்களை கசக்கிக் கொண்டான்.



உள்ளே ஒரு கட்டில் போடப்பட்டிருக்க அதில் இந்திரஜித் அமர்ந்து ஆங்கிலப் புத்தகம் ஒன்றை படித்துக் கொண்டிருந்தார். பார்க்க மிடுக்காக சினிமாவில் பார்க்கும்போது எப்படி இருப்பாரோ அப்படி இருந்தார். அதை விட ஆச்சரியம் போல சற்று தள்ளி வெறும் தரையில் மயங்கிய நிலையில் பிரபாகர் கிடந்தான். வைத்தியர் பானையோடு நுழைவதை இந்திரஜித்தும் பார்த்தார். சிரித்தார்.

''என்ன போன காரியம் வெற்றிதானே?''

''உங்க அதிர்ஷ்டம் எல்லாம் கிடைச்சிடிச்சு.''

''சபாஷ்... அப்ப எனக்கு மூணு வருஷத்துக்கு வேலையில்லை.''

''ஆமாம். நான் இப்ப இந்த உச்சி உதக நீர்ல யவ்வன காந்தியை கலந்து ஒரு சுரை குடுக்கைல ஊத்தி கொடுத்திட்றேன். இது தீரத்தீர என்கிட்ட இருந்து உங்களுக்கு வந்துகிட்டே இருக்கும். தினமும் தூங்கப் போகும்போது இதை பூசிகிட்டு தூங்கறத மட்டும் மறந்துடாதீங்க.''

''நிச்சயமா... முன்பை விட நான் இப்ப பெரிய பலசாலியா உணர்றேன். விட்டா நான் ஓடியே சென்னைக்கு போயிடுவேன்.''

''அதான் என் வைத்தியத்தோட சிறப்பு...''

''அதனால்தானே மூணு மாசமா நான் இங்க உங்க கூட இருந்து கஷ்டபட்டுகிட்டும் இருக்கேன்?''

''என் ஆராய்ச்சியும் சரி, தேடலும் சரி தோல்வியடைல. கோரக்கரும் போகரும் எழுதி வெச்ச ரகசியங்கள் பேருதவி செய்தது. ஆனா இதை நான் எக்காரணம் கொண்டும் இந்த உலகம் அறியச் செய்ய விரும்பலை. அதை மறந்துடாதீங்க. உங்கள போல விரல் விட்டு எண்ணக்கூடிய சிலருக்கு நான் இதை செய்தா போதும். என்கிட்ட இருக்கிற இந்த ரகசியம் பத்தி வெளிநாட்டவர்க்கு தெரிஞ்சா என்னை கடத்திகிட்டு போயிடுவாங்க. இது ரகசியமா மட்டுமே கட்டாயம் இருக்கணும்.

வேப்ப மரத்துல இருந்து பல அரிய மூலிகைகளை

## 111

ஒரு மலை மட்டும் ஒரு மனிதனுக்கு வசமாகி விட்டால் அதன் பின் அவனை வெல்ல யாரு மில்லை என்பதுதான் பெரும் உண்மை. புராணங் களிலும் இதனால்தான் நகரங்களை விட வனங்கள் பெரிதாக கருதப்பட்டன! வனங்களே மனதை ஒடுக்கி தவம் செய்யவும் மிக ஏற்றவையாக விளங் கின. வனங்களில் உள்ள மரங்களுக்கு பின்னே ஒரு பெரும் ரகசியம் உண்டு. பெரும் ஞானிகளும், முனிவர்களும் மற்றும் நமது மூதாதையர்களுமே மரங்களாக பிறந்து வாழ்கிறார்கள் என்பதுதான் அது.

எனவே ஒரு மரத்தை நாம் பேணிடும்போது நாம் மூதாதையர்களையும் சேர்த்துப் பேணுகிறோம். ஒருவன் தன் வாழ்நாளில் ஒரு மரத்தை நட்டு வளர்த்து அதை பாதுகாத்தாலே போதும் அவனது எப்பேர்ப்பட்ட பாவங்களும் அந்த மரம் வளர வளர வும் அதன் கிளைகளில் பறவைகள் இளைப்பாற வும் செய்கையில் நீங்கிவிடுகின்றது என்றால் ஆயிரக்கணக்கான பறவைகளும் விலங்குகளும் உயிர்வாழப் பயன்படும் வனங்கள் எவ்வளவு பலம் வாய்ந்தவையாக இருக்க வேண்டும்?

குகைக்கு வந்தபோது உச்சி வெயில் வந்துவிட் டது. பானையை கீழே இறக்கி வைத்த புனுகு சுந்தரம் வியர்வை வழித்துப் போட்டவனாக பக்கமாய் உள்ள பாறை மேல் அமர்ந்து இளைப்பாறத் தொடங்கினான்.

வைத்தியரும் பானையை எடுத்துக் கொண்டு குகைக்குள் நுழைந்தார். சுந்தரத்துக்கும் குகைக்குள் வைத்தியர் என்ன செய்யப் போகிறார் என்று பார்க்க ஆசையாக இருந்தது:. உள்ளே மெல்ல எட்டிப் பார்த்தான். பகீரென்றது. கண்களை கசக்கிக் கொண்டான்.



உள்ளே ஒரு கட்டில் போடப்பட்டிருக்க அதில் இந்திரஜித் அமர்ந்து ஆங்கிலப் புத்தகம் ஒன்றை படித்துக் கொண்டிருந்தார். பார்க்க மிடுக்காக சினிமாவில் பார்க் கும்போது எப்படி இருப்பாரோ அப்படி இருந்தார். அதை விட ஆச்சரியம் போல சற்று தள்ளி வெறும் தரையில் மயங்கிய நிலையில் பிரபாகர் கிடந்தான். வைத்தியர் பானையோடு நுழைவதை இந்திரஜித்தும் பார்த்தார். சிரித்தார்.

''என்ன போன காரியம் வெற்றிதானே?''

''உங்க அதிர்ஷ்டம் எல்லாம் கிடைச்சிடிச்சு.''

''சபாஷ்... அப்ப எனக்கு மூணு வருஷத்துக்கு வேலை யில்லை.''

''ஆமாம். நான் இப்ப இந்த உச்சி உதக நீர்ல யவ்வன காந்தியை கலந்து ஒரு சுரை குடுக்கைல ஊத்தி கொடுத் திட்றேன். இது தீரத்தீர என்கிட்ட இருந்து உங்களுக்கு வந்துகிட்டே இருக்கும். தினமும் தூங்கப் போகும்போது இதை பூசிகிட்டு தூங்கறத மட்டும் மறந்துடாதீங்க.''

''நிச்சயமா... முன்பை விட நான் இப்ப பெரிய பல சாலியா உணர்றேன். விட்டா நான் ஓடியே சென்னைக்கு போயிடுவேன்.''

''அதான் என் வைத்தியத்தோட சிறப்பு...''

''அதனால்தானே மூணு மாசமா நான் இங்க உங்க கூட இருந்து கஷ்டபட்டுகிட்டும் இருக்கேன்?''

''என் ஆராய்ச்சியும் சரி, தேடலும் சரி தோல்வி யடைல. கோரக்கரும் போகரும் எழுதி வெச்ச ரகசியங்கள் பேருதவி செய்தது. ஆனா இதை நான் எக்காரணம் கொண்டும் இந்த உலகம் அறியச் செய்ய விரும்பலை. அதை மறந்துடாதீங்க. உங்கள போல விரல் விட்டு எண்ணக்கூடிய சிலருக்கு நான் இதை செய்தா போதும். என்கிட்ட இருக்கிற இந்த ரகசியம் பத்தி வெளிநாட்ட வர்க்கு தெரிஞ்சா என்னை கடத்திகிட்டு போயிடுவாங்க.

இது ரகசியமா மட்டுமே கட்டாயம் இருக்கணும்.

வேப்ப மரத்துல இருந்து பல அரிய மூலிகைகளை

நாம இழந்துட்டு வர்றோம். அதெல்லாம் எங்க சொத்தும்னு மேல் நாட்டான் உரிமை கொண்டாட்றான். இந்த ரகசியமும் பத்தியும் தெரிஞ்சுதுன்னா இந்த காட்டையே மூலிகை தேடி வந்து அழிச்சிடுவான்...''

''உண்மைதான் வைத்யரே... இப்பவே பக்தி அதிகமாகி மலைல உள்ள கோவில்களுக்கு போற பக்தர்களால மலைக்காடு பெரிய அளவுல பாழாகிட்டு வருது. இப்படி ஒரு நிலைல நம்முடைய சித்த வைத்திய மூலிகைகள் பற்றி நாம பாதுகாப்பா ரகசியமா வெச்சுக்கறது தான் காட்டை காப்பாற்ற உதவி செய்யும்...''

''அப்படி காப்பாத்தற யக்ஞத்துலதான் நான் கொலைகாரனா கூட மாறிட்டேன். இந்த மலைல இருக்கற வன விஞ்ஞானிகளையும் கொன்னுட்டேன். அவங்கள வெச்சு எந்த ஒரு மேல்நாட்டுக்காரனும் எதையும் தெரிஞ்சிக்கக் கூடாது...''

''இருந்தாலும் வைத்யரே நீங்க பெரிய ரிஸ்க் எடுக்கறதாவும் எனக்கு தோணுது.''

''வேற வழியில்ல சார்... எனக்கு இந்த நாகவனம் பாதுகாக்கப்படணும். இதுக்கு எதிரா யார் இருந்தாலும் சரி - அழிச்சிடணும். இப்ப கூட வர்ற வழியில மண்டையன்கற கொள்ளைக்காரன் குறுக்கிட்டான். பைரவனை விட்டு அழிச்சிட்டுதான் வரேன்...'' - வைத்தியர் ஒரு சீர்திருத்தவாதி போல பேசும்போது உள்ளே எட்டிப் பார்த்தபடி இருந்த புனுகு சுந்தரத்தை அருகில் அழைத்தார் வைத்தியர்.

அவனும் வந்தான். இந்திரஜித் அவனைப் பார்த்து சிரித்தார்.

''சுந்தரம்... நான் பேசினதை கேட்டுருப்பியே.''

''ஆமாம் வைத்தியரே...''

''அதுல ஏதாவது தப்பு இருக்கா...''

''எனக்கு சொல்லத் தெரியலை வைத்தியரே...''

''உங்க வன சாஸ்த்ரிகள் தங்களுக்கு தெரிஞ்சதை எனக்கு சொல்ல ரொம்ப யோசிச்சாங்க. ஆனா அவங்கள



ஒரு மேல்நாட்டு கும்பல் திட்டம் போட்டு வந்து வளைச்சு பிடிச்சாங்க. அவங்க கொடுத்த பணம் சாஸ்த்ரிகளை சாய்க்கப் பார்த்தது. நான்தான் அவங்களை எல்லாம் மூலிகை விஷத்தாலயே மெல்லக் கொன்னேன்...''

- வைத்தியர் சற்று வெறி பிடித்தவர் போல பேசி விட்டு சுந்தரத்தை பார்த்து ஒரு மாதிரி சிரித்தார்.

''சாமி... அப்படி பாக்காதீங்க. எனக்கு பயமா இருக்கு...''

''பயப்படாதே சுந்தரம்... இனி நீ என் சிஷ்யன். எனக்கு தெரிஞ்ச மருத்துவ வித்தை அவ்வளவையும் நான் உனக்கு சொல்லித்தரேன். ஆனா நீ உண்மையா இருக்கணும். உயிரை கூட கொடுக்கிறவனா இருக்கணும்.''

''நிச்சயம் வைத்யரே...''

''இதை நீ வார்த்தைல சொன்னா நம்ப மாட்டேன். என் கூட நாகவல்லி அம்மன் கோவிலுக்கு நீ வரே - அங்க படம் விரிக்கப்போற பாம்போட தலை மேல சத்தியம் செய்து சொல்ற...''

''சாமி ஈ... ஈ...''

''பயப்படாதே நாகதாளி வேரை உன் கைல கட்டிடுவேன். எந்த பாம்பும் தீண்டாது.''

''அந்த சத்யத்த இங்க பண்ணா ஏத்துக்க மாட்டீங்களா?''

''அங்க உனக்கு ஒரு வேலை இருக்கே?''

''என்ன சாமி?''

''இதோ இந்த பத்திரிகைகாரனை தூக்கிக்கோ - இவனை அங்க கொண்டுபோய் போட்டுடணும்.''

''சாமி இவரை எனக்குத் தெரியும்.''

''அது எனக்கும் தெரியும்... என்னை உளவு பாக்க வந்த இவன் இப்ப சித்தம் கலங்கியிருக்கான்... கண் விழிச்ச பிறகு இவனுக்கு எதுவுமே ஞாபகம் இருக்காது. இவனை ஏவிவிட்ட பத்திரிகைக்காரங்க இவனுக்கு தலைல அடிபட்டு இப்படி ஆயிட்டதா நினைக்கணும். அதுதான் எனக்கு வேணும்.'' - என்றபடி வைத்தியர் இந்திரஜித்திடம்

''நீங்களும் இப்பவே புறப்படலாம்'' என்றார்.

இந்திரஜித் புறப்படுமுன் வைத்தியர் காலில் விழுந்து வணங்கினார்.

''உங்கள நூறு வயசு வரை இதே வாலிபத்தோட வெச்சிருக்க என்னால முடியும். நல்லபடியா போயிட்டு வாங்க...'' - என்றார். ஒரு சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்ட இந்திரஜித் ஒரு முகமூடியை குளிருக்கு அணிவது போல எடுத்து அணிந்து கொண்டார். முகமே மாறிவிட்டது.

''இப்படியே நான் டெல்லி போய் அங்க இந்த முகமூடியை கழற்றிவிட்டு அங்க இருந்து இந்திரஜித்தா நாளை மறுநாள் ஸ்விட்சர்லாந்து விமானத்துல இருந்து இறங்கப் போறேன்'' - என்று கூறி சிரித்தார். சிரித்தபடியே புறப்பட்டார்!

சுந்தரமும் பிரபாகரனை தோளில் தூக்கிக் கொண்டு நடக்கத் தொடங்கினான்.

நாகவல்லி அம்மன் கோவில்.

பாம்புப் புற்று. முன்னாலே பிரபாகரை கிடத்திய சுந்தரம் பயபக்தியோடு புற்று முன் மண்டியிட வைத்தியர் ஒரு காய்ந்த கொடியை பற்ற வைத்து அதன் புகையை புற்றுக்குள் செல்லுமாறு செய்தார். உள்ளே அடைந்து கிடந்த பாம்பு ஒன்று வெளியே வந்து புகை மூட்டத்தில் மயங்கி விட்டதுபோல துவண்டு போய் பார்த்தது. சுந்தரமும் அதன் மேல் சட்டென்று கையை வைத்து 'சத்தியம் சாமி' என்றான்.

''இனி நீதான் இந்த நாகவனத்தோட பெரும் காப்பாளன் - அதேசமயம் நீதான் பெரிய வைத்தியன். நான் சொல்வேன் - நீ செய்வே... நம்மை யாராலும் நெருங்க முடியாது' என்ற வைத்தியர் இந்த பத்திரிகைக்காரனுக்கு கொடுத்த மருந்தை காட்டிலாகாக்காரன் ஒருத்தனுக்கும் தரணும். அவன் பேர் வரதராஜன். அவனுக்கு எப்படி தரணும்னு சொல்லித் தரேன். போய் கொடுத்துட்டு வந்துடு' என்று அங்கிருந்து புறப்பட்டார்.



''வைத்தியரே... இவர் இங்கேயே இப்படியே...''

''கொஞ்ச நேரத்துல எழுந்திரிச்சு பார்ப்பான். ஒண்ணும் புரியாது. மயக்கம் தெளியற நேரம் நெருங்கிடிச்சு...'' - என்றபடியே நடந்தார்!

**வ**ன இலாகா கெஸ்ட் ஹவுஸ்!

மாருதி ஸ்விஃப்ட்டில் வந்திறங்கிய குமரன் வசம் வரதராஜனும் அவ்வளவையும் ஒப்படைத்தார். ஒப்படைக்கும்போதே ஒரு தெளிவில்லை.

''நீங்க யாரு?'' என்கிற கேள்வி. பின் தடுமாற்றம். காரணம் சுந்தரம் கொடுத்திருந்த மருந்து. சிறிய அளவில் பலாப்பழத்துடன் சேர்த்து தேனை கலந்து சாப்பிடுங்க என்று கொடுத்து விட்டிருந்தான்.

அது வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது.

குமரன் பிரபாகர் பற்றி கேட்ட கேள்வி எதற்கும் பதிலே இல்லை.

'யாரு பிரபாகர்... தெரியலியே... எனக்கு தலையை சுத்துதுங்க. போய்ட்டு அப்புறமா வாங்க...' என்று கூறி விடவும் குமரனிடம் ஏமாற்றம்.

அதன்பின் பிரபாகரை எங்கே என்று தேடுவது என்று தவித்தபோது புனுகு சுந்தரமே முன்னால் வந்து நாகவல்லி அம்மன் கோவிலுக்கு கூட்டிச் சென்று காட்டினான்.

''தலைல அடிபட்டு நேத்துல இருந்து இப்படிக் கிடக்கறார். பட்டணத்துல நல்ல டாக்டர்கிட்ட காட்டுங்க. தனியா இப்படி அனுப்பி வைக்காதீங்க...'' என்றும் கூறி பிரபாகரையும் அனுப்பி வைத்தான்.

குமரனுக்கு குழப்பமாக இருந்தது.

வேறு வழியும் தெரியவில்லை.

காரும் பிரபாகருடன் சென்னை நோக்கி சீறத் தொடங்கியது!

**ப**டுக்கையில் கண் விழித்த பிரபாகருக்கு தலை எல்லாம் பாரமாக இருந்தது. அருகில் இருந்த நர்ஸ் கண் விழித்த விபரத்தைக் கூற விலகிச் சென்றாள்.

‘நான் இப்ப எங்க இருக்கேன் - எப்படி இங்க வந்தேன்?’ என்கிற வழக்கமான கேள்விகள் பிரபாக ருக்குள் எழத் தொடங்கிவிட்டன.

அதேசமயம் அந்த செய்தியை டாக்டர் ஒருவர் ஆசிரியர் கோபால்தாசிடம் கூறியபோது அவர் ஏர்போர்ட் டில் இந்திரஜித் முன்னால் மலர்க்கொத்துடன் நின்று கொண்டிருந்தார்.

ரசிகர்களின் கூட்டமும் அதன் கூக்குரலும் அவரை பேசவிடவில்லை.

‘நான் அப்புறமா வரேன்... அவரை நல்லபடியா ரெஸ்ட் எடுத்துக்க சொல்லுங்க’ என்று மட்டும் கூறினார்.

‘‘யார் போன்ல?’’ - இந்திரஜித் கேட்டார்.

‘‘என்னோட சப் எடிட்டர் ஒருத்தர் ஹாஸ்பிடல்ல இருக்கார்... அவருக்கு மயக்கம் தெளிஞ்சிடிச்சாம்... அதான்...’’

‘‘என்ன உடம்புக்கு?’’ - இந்திரஜித் கேள்விக்கு எப்படி ஆசிரியரால் உங்களைத் தேடிப் போய்தான் என்று கூற முடியும்?

‘‘தெரியல.. போய் டாக்டர தான் கேக்கணும்’’ என்றார்.

‘‘பார்த்து. ஆரோக்யம் ரொம்ப முக்கியம். அதுக்காக தான் நான் கம்ப்ளீட் ரெஸ்ட் எடுக்க வெளிநாட்டுக்கு போயிட்டேன். இனி ஒரு மூணு வருஷம் ஓடு ஓடுன்னு ஓடுவேன். அப்புறம் ஒரு மூணு மாசம் தலைமறைவா யிடுவேன்’’ குறும்பாக சிரித்தபடி சொன்ன இந்திரஜித்தின் பதிலுக்குள் இருக்கும் உண்மை கோபால்தாசுக்கு தெரிய வில்லை.

பதிலுக்கு குழப்பத்தோடு சிரித்தார்.

(முற்றும்)